Vol.7, Issue 4 | Annual Subscription ₹ 480
Rotary News, September 2024, Chennai

செப்டம்பர் 2024

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

  

**Rotary**
**District 3212**

 

**THE MAGIC OF ROTARY**

# Project Kalam



*“Dreams convert into thoughts and thoughts convert into actions.”*

APJ Abdul Kalam

## STEP 2 SUCCESS

**Size**: 50 (Min) to 500 (Max) | **Duration**: 02.00 Hours | **Medium of Training**: Tamil & English

**Audience**: Government, Government Aided and Private School students

**A Career guidance Program for School Students studying from 9th to 12th Standard**

### OBJECTIVE

Empowering Students to gain essential knowledge, insights, skills, and hands-on experience needed to discover and explore various career pathways aligned with their interests and passions to take career decision.

  

### Outcome for 9th & 10th Students:

Students often face confusion when choosing the group in class 11. Typically, their subject choices are influenced by their 10th-grade marks, parental preferences, advice from friends and relatives, the family environment, and economic considerations. They were taught to apply SWOT Analysis to choose the subject streamline based on their Interest, Talent/Skills & their Personality.

### Outcome for 11th & 12th Students:

To choose the best Career, Students will be guided to explore the following questions:

How to find the available courses?

How to choose the best course?

What are all the entrance exams available?

Is there any scholarship available?

Which College/University to attend?

Which Career Path offers the best Pay?

LEKHA ads/Sep 24/ Rotary/FIW

**No. of Programs completed 74**

**No. of Beneficiaries 18905**

**Do you want to conduct Project Kalam in your Town/City/District? We are waiting to partner with you.**



**Project Coordinator**
**Rtn.K.C.GURUSAMY**
**94433 67248**

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

**Project Chairman & Lead Speaker**
**Rtn.Tenzing Paulrajan**
**63746 44066**



ADVT.

# உள்ளே




12

பாலியல்
தொழிலாளிகளின்
வாழ்வியலை மாற்றிய
ரோட்டேரியர்கள்



20

வயநாட்டில்
பாதிக்கப்பட்டவர்களுக்கு
உதவ விரைந்த ரோட்டரி



28

AI உதவியுடன்
மார்பக புற்றுநோய்
கண்டறியும்
சாதனம்!



36

மக்களின்
நல்வாழ்வுக்காக
தத்தெடுக்கப்பட்ட
கிராமம்



42

உள்வரும்
இயக்குனர்களுக்கு
வரவேற்பு



52

பெங்களூரு ரோட்டரிக்கு
90 ஆண்டுகள்



62

சிறப்புக் குழந்தைகளைத்
திருப்பதிக்கு
அழைத்துச்சென்ற
RID 3233



Rotary

A publication of Rotary
Global Media Network

## புதிய தோற்றத்தைப் பெற்ற ரோட்டரி நியூஸ்




*ரோட்டரி நியூஸின் சமீபத்திய பதிப்பானது, பார்வையை ஈர்க்கக்கூடிய மற்றும் படிக்க எளிதான செயல்பாட்டு வடிவமைப்பு கூறுகளுடன் சிறந்த அழகியல் அம்சங்களை ஒருங்கிணைத்து நன்கு வடிவமைக்கப்பட்ட இதழாகும். எழுத்துருக்களின் தேர்வு பல்வேறு வகையான உள்ளடக்கங்களுக்கு இடையே தெளிவு மற்றும் வேறுபாட்டை வழங்குகிறது. வண்ணங்களின் தேர்வு உள்ளடக்கம் மற்றும் பிராண்ட் அடையாளத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது. பத்திரிகை முழுவதும் வடிவமைப்பு கூறுகள் ஒரு ஒத்திசைவான தோற்றத்தை உருவாக்குகின்றன.*

*சாராம்சத்தில், இதழின் புதிய பதிப்பு ஈர்க்கக்கூடியது மற்றும் படிப்பதற்கு எளிதானது.*

*சேகர் மேத்தா, முன்னாள் RI தலைவர்*

*ரோட்டரி நியூஸின் புது தோற்றத்தைப் பார்த்ததும் மனதில் தோன்றிய வெளிப்பாடு WOW என்பது தான், வழக்கமான புகைப்படத்துக்கு பதிலாக இரண்டு குழந்தைகள் மரம் நடும் வண்ணமயமான விளக்கப்படத்துடன் மிகவும் கவர்ச்சி கரமானதாக இருந்தது. தலைப்பைப் படிக்கும் வரை எங்கள் பேரக்குழந்தைகளுக்காக ஏதோ கதைப் புத்தகம் வாங்கியதாக என் மனைவி நினைத்தார். தலைப்புச் செய்திகளுக்கான புதிய எழுத்துருக்கள் மற்றும் புதிதாக வடிவமைக்கப்பட்ட பின்புலத்துடன் கூடிய மேற்கோள்கள் என்னை ஒவ்வொரு கட்டுரையையும் படிக்க வைத்தது. கிளப் மேட்டர்ஸ் மற்றும் ப்ராஜெக்ட் விக்னெட்டுகளுக்கான புதிய தளவமைப்புக்கு அதிக யோசனை செய்யப்பட்டுள்ளது.*

*கழுதை நூலகம், குழந்தைகளை இயற்கைக்கு அறிமுகம் செய்தல், நடமாடும் கடைகள் மற்றும் பெடல் பவர் போன்ற புதுமையான திட்டங்களைப் பற்றி படிப்பது சுவாரஸ்யமாக இருந்தது மற்றும் ரோட்டேரியர்கள் எவ்வாறு தங்கள் சமூகங்களை பேணுகிறார்கள் என்று எடுத்துரைக்கிறது. ப்ரீத்தி மெஹ்ரா, தோட்டங்களைப் பற்றிய ஒரு சிறந்த கட்டுரையை எழுதி, சுற்றுச்சூழலின் சாம்பியன் என்று நிரூபித்துள்ளார். ஆசிரியர் குழுவிற்கு பாராட்டுக்கள்; உங்கள் தொழில் பக்தி ரோட்டரி செய்திகளுக்கு புத்துணர்ச்சியூட்டும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.*

*K ரவீந்திரகுமார், RC கரூர் — D 3000*

*வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மாற்றம் நிலையானது. RNT குழு அதை சரியான நேரத்தில் செய்துள்ளது. மாற்றத்திற்காக எடிட்டர் ரஷீதா பகத் மற்றும் குழுவினருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். புதிய வடிவமைப்பு, எழுத்துருக்கள் மற்றும் தளவமைப்பு மிகவும் கவர்ச்சிகரமாக உள்ளது. பக்கம் பக்கமாக உள்ளடக்கத்தை ஆர்வத்துடன் படிக்க 90 நிமிடங்களைச் செலவிட்டேன்.*

*R சீனிவாசன், RC பெங்களூர் JP நகர் — D 3191*

*இதழில் நீங்கள் செய்த அமைப்பு மாற்றங்கள் உண்மையிலேயே அற்புதமாக இருக்கிறது. புதிய வண்ணங்களின் கலவை, தலைப்புகளின் எழுத்துருவில்*

### அருமையான தலையங்கம்

ஆகஸ்ட் தலையங்கம்... துயரத்தின் மொழியும் நம்பிக்கையும் அருமையாக இருந்தது. அந்த உன்னதமான கட்டுரைக்கு நன்றி.

PDG சாம் மொவ்வா, RC விஜயவாடா மிட் டவுன் — D 3020

நான் ரோட்டரி பெங்களூர் வெஸ்டில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ரோட்டேரியராக இருக்கிறேன். ரோட்டரி செய்திகளில் சிறந்த உள்ளடக்கம் மற்றும் அதைவிட உங்கள் தலையங்கங்கள் மற்றும் கட்டுரைகளுக்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். இயல்பாகவே சரளமாக எழுதும் முறை உங்களிடம் உள்ளது. இது ஒரு வரம்!

N கிருஷ்ணமூர்த்தி
RC பெங்களூர் வெஸ்ட் — D 3192

ரோட்டரியில் நான் இருந்த 10 வருடங்களில் ஆகஸ்ட் இதழில் உள்ளதைப் போல இதயத்தைத் தொடும் அட்டைப் பக்கத்தை நான் பார்த்ததில்லை. ஆசிரியரின் குறிப்பும் RI இயக்குநரின் செய்தியும் ஆழமானவை. உண்மையில் பாராட்டுக்குரியது.

மிலன் குமார் அகர்வாலா
RC அங்குல் ராயல் — D 3262

### குழந்தை விவசாயிகள், பிங்க் ஆட்டோக்கள்

RC காந்திநகரின் விவசாயத்திற்கான புதிய திட்டத்தால் 60,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இது ஒரு சிறந்த திட்டம்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

சில காலம் முன்பு சென்னையில் ரோட்டரி சின்னத்துடன் பிங்க் நிற ஆட்டோவைப் பார்த்தேன். இது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் ரோட்டரி திட்டம் என்பதை இப்போது ரோட்டரி நியூஸ் மூலம் அறிந்து கொண்டேன்.

ப்ராஜெக்ட் பிங்க் ஆட்டோ என்பது RID 3233-ன் அற்புதமான முயற்சி; பெண்களுக்கு 100 பிங்க் ஆட்டோக்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு நிதி சுதந்திரம் அளிக்கப் பட்டுள்ளது.

N ஜெகதீசன், RC ஏலூர் — D 3020

RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக்கின் பிளே மேக்கர் கட்டுரையை நான் மிகவும் சுவாரஸ்ய மாகப் படித்தேன். வெவ்வேறு சங்கத் திட்டங்கள் அவற்றின்

*மாற்றம் மற்றும் மேற்கோள்கள் போன்றவையுடன் புதிய தோற்றம் கொண்ட இதழைப் பார்த்ததும் நான் மகிழ்ச்சியடைந்தேன்.*

*கிரிராஜ் கயல், RC ஸ்ரீ மாதோபூர் சன்ரைஸ் — D 3056*

*ரோட்டரி நியூஸ் வியக்கத்தக்க வகையில் புதிய தோற்றத்தைக் கொண்டிருந்தது. நான் அதை விரும்பினேன். அனிமேஷனுடனான அட்டைப் பக்கம் மிகவும் நன்றாக இருந்தது. நான் பக்கங்களைப் புரட்டும்போது, வண்ணங்கள் அனைத்தும் என்னைப் பார்த்து சிரித்தன... அழகாகவும் வண்ணமயமாகவும் இருந்தன. உள்ளடக்கம் மற்றும் கவரேஜ், எப்போதும் போல் நன்றாக இருந்தது.*

*பிரணிதா அலுர்கர்*
*RC நிக்டி புனே — D 3131*

*மிகவும் கவர்ச்சிகரமான இதழின் புதிய தோற்றத்திற்கு வாழ்த்துக்கள். குழந்தை விவசாயிகள் பற்றிய முகப்புக் கட்டுரை மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது, ஏனெனில் விவசாயம் பற்றி நம் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது காலத்தின் தேவை.*

*O P காதியா, RC ஜெய்ப்பூர் கோஹினூர் — D 3056*

*குழந்தைகளுக்கான விவசாய அமர்வை விளக்கும் ஆகஸ்ட் மாத இதழின் தனித்துவமான அட்டைப்படத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சி. பத்திரிகையின் புதிய தோற்றம் மிகவும் கவர்ச்சி கரமானதாக இருக்கிறது.*

*எத்தியோப்பியாவில் கழுதை நூலகங்கள், பிங்க் ஆட்டோக்கள், மனநலம் பாதிக்கப்பட்ட பெண் களுக்கான நிலையான வாழ் வாதாரம், PDG ரேகா ஷெட்டியின் நினைவாக வழங்கப்படும் விருதுகள் பற்றிய கட்டுரைகள் அனைத்தும் சுவாரஸ்யமானதாக இருந்தது. புதிய வடிவத்தில் கிளப் மேட்டர்ஸ் அழகாக இருக்கிறது. மொத்தத்தில் ஆகஸ்டு இதழ் மிக அருமையாக உள்ளது, குழுவிற்கு வாழ்த்துக்கள்.*

*பிலிப் முலப்போன் M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

புகைப்படங்களுடன் ரோட்டேரியர் களின் எண்ணங்களையும் யோசனை களையும் தழுவுகின்றன.

சௌமித்ரா சக்ரவர்த்தி
RC கல்கத்தா யுனிவர்ஸ் — D 3291

RI தலைவர் ஸ்டெஃப்னியின் விவரம் மற்றும் ஆசிரியரின் குறிப்பான வெப்ப அலைகளும் சூழல் பாதுகாப்பும் போன்றவை சுவாரஸ்யமாக இருந்தன. TRF தலைவர் மார்க் மலோனி மற்றும் அறங்காவலர் பரத் பாண்டியாவின் செய்திகள் சிறப்பாக இருந்தன. “மேஜிக் ஆஃப் ரோட்டரி” என்ற புதிய கருப்பொருள் உண்மையிலேயே ரோட்டரியை உற்சாகப்படுத்தும். ஆனால் அர்ப்பணிப்புள்ள புதிய ரோட்டேரியர்களை அழைக்க வேண்டும் என்ற RIDயின் பரிந்துரை பின்பற்றப்படுவதில்லை.

நிரஞ்சன் கர்
RC புவனேஸ்வர் — D 3262

கொச்சியில் உள்ள ஹோட்டல் பிரசி டென்சியில் ரோட்டரி நியூஸ் இதழை பார்த்தது எவ்வளவு இனிமையான காட்சியாக இருந்தது. உரிமையாளர் கண்டிப்பாக ரோட்டேரியராக இருக்க வேண்டும்!

ஜெய்தீப் மாளவியா
RC புனே கேம்ப் — D 3131

அழிவை ஏற்படுத்தும் செல்வாக்கு என்ற தலைப்பிலான ஜூன் மாதக் கட்டுரையையும் மற்றும் ஒரு சிறுவன், குடிபோதையில் சட்ட விரோதமாக சொகுசு காரான, போர்ஷை ஓட்டி, இரண்டு பேரை கொன்றதை பற்றிய தங்கள் கருத்தை நான் ஆர்வத்துடன் படித்தேன். குற்றம் நடந்த சில மணிநேரங்களில் புனேயில் உள்ள சிறார் நீதி வாரியம் ஜாமீன் வழங்கியது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம்.

இது நமது சிறார் நீதிச் சட்டம் காலாவதியானது மற்றும் காலத்திற்கு ஏற்ப இல்லை என்பதையே காட்டுகிறது. தங்கள் குழந்தைகளை மது மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் இருந்து பாது காக்க பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை பரப்புவதற்கான தனது முயற்சிகளை தீவிரப்படுத்தும் சமூகப் பொறுப்பு ரோட்டரிக்கு உள்ளது என்று தலையங்கத்தின் முடிவில் மிகவும் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபய் கிஷோர் சந்த்வார்
RC தன்பாத் மிட் டவுன் — D 3250

**அட்டையில்:** RID 3060 RC பரூச்சின் முன்முயற்சியான சகி திட்டம், நகரத்தில் பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...





*ஸ்லோவாக்கியாவில் உள்ள RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக்கின் பாட்டி வீடு.*

புகைப்படம்: லூசி ஹெவெட்

## குடும்பம் என்பதன் பொருள்

ரோட்டரியின் மாயாஜாலம் என்பது ஒருவரின் உடமைகள். நீங்கள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் அந்த உணர்வு வரும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஐரோப்பா வழியாக 6 வார பயணத்தின் போது நான் ஸ்லவோக்கியாவில் ரோட்டரி தலைவரின் பிரதிநிதியாக பணியாற்றினேன். அந்த நேரத்தில் 2240 மாவட்டத்தின் ஆளுநராக இருந்த கேத்தரினா செக்கோவாவுக்கு நான் எழுதிய கடிதத்தில், என் பாட்டி வெரோனிகா ஜில்கா, அமெரிக்காவில் குடியேறுவதற்கு முன்பு அந்தப் பகுதியில் உள்ள சிறிய கிராமத்தில் வசித்து வந்ததை குறிப்பிட்டிருந்தேன்.

ஐகுபோவா வோலாவில் உள்ள சமூக மையத்தில் நான் நுழைந்தபோது ஸ்லவோக்கியாவின் பாரம்பரிய உடை அணிந்த மக்கள் சிலர் என்னை வரவேற்றனர். சக்திவாய்ந்த மத்திய ஐரோப்பிய குரல்களில் அவர்கள் பாடியபோது எனது பாட்டியின் குரல் எனது நினைவுக்கு வந்தது.

பல குடும்பங்கள் ஒன்று சேரும்போது அவர்கள் சீட்டு விளையாடுவார்கள் அல்லது பல்வேறு வேடிக்கையான விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள். நான் இளமையாக இருந்தபோது, எனது தந்தை “அக்கார்டியன்” இசைக்கருவியை இசைத்து பாடலுடன் என் குடும்பத்தை வழிநடத்துவார். எனது பாட்டி, தனக்கே உரிய கம்பீரமான குரலில் அனைவரையும் கவரும் வகையில் பாடுவார்.

நான் சமூக மையத்தில் நுழைந்த போது குழந்தைப் பருவத்தில் நான் கேட்ட பாரம்பரிய இசையின் ஒலி கேட்டது. - எனது தந்தையைப் போலவே ஒரு பெண் அந்த இடத்தில் “அக்கார்டியன்” இசைக் கருவியை இசைத்துக் கொண்டிருந்தார். - நான் அப்போது பென்சில்வேனியாவில், மோனிசெனில் உள்ள பாட்டியின் வீட்டில் அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தேன். பழைய நினைவுகள் திரும்பியபோது ஆனந்தக் கண்ணீர் வந்தது.

ஆனால், மாயாஜாலம் அத்துடன் நிற்கவில்லை. DG செக்கோவா உண்மையிலேயே மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். எனது பாட்டியைப் பற்றிய ஒரு குறும்படம் எடுப்பதற்காக உள்ளூர் பிரமுகர் ஒருவர் விடியோகிராபருடன் பணியாற்றிக்கொண்டிருந்தார். நாங்கள் அந்த விடியோவை ஒன்றாக அமர்ந்து பார்த்து ரசித்தோம்.

விடியோ முடிந்ததும் நான் திரும்பிப் பார்த்தேன். அறையின் பின்புறத்தில் ஒருவர் நிற்பதைக் கண்டேன். அந்த நபரின் பெயர் பிரான்டிசெக் ஜில்கா என்பதையும், அவர் எனது உறவினர் என்பதையும் பின்னர் அறிந்துகொண்டேன். அவருடைய பாட்டியும் என்னுடைய பாட்டியும் சகோதரிகள். எனக்கு மின்னல் தாக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது.

எனது பாட்டி பிறந்த வீட்டில் இப்போது இருக்கும் எனது உறவினரைப் பார்க்கச் சென்றேன். அங்கு எனது அம்மா, அப்பா, பாட்டி ஆகியோரின் நான் பார்த்திராத பழைய புகைப்படங்களை அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

அப்போதிலிருந்து, எனது ரோட்டரி குடும்பத்தைப் பற்றி நினைப்பதை என்னால் நிறுத்த முடியவில்லை. ரோட்டரியின் உறுப்பினர்களாக, ஒரே மாதிரியான மாயாஜாலத்தை ஒருவருக்கு ஒருவரும், இந்த உலகத்திற்கும் பகிர்ந்து கொள்ளும் தனித்துவமான வாய்ப்பு கிடைத்துள்ளது.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# மீண்டும் கவனம் பெறும் DEI

கொல்கத்தாவில் உள்ள R G கர் மருத்துவ மனையில் பயிற்சி மருத்துவராகப் பணியாற்றிய 31 வயது பெண் டாக்டர், கொடூரமான முறையில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம், இன்றைய இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் இல்லை என்பதையே வெளிச்சம்போட்டு காட்டுகிறது. ஒரு போர்வையில் சுற்றப்பட்ட மகளின் உடலைப் பெறுவதற்கு தந்தை மூன்று மணிநேரத்துக்கு மேல் காத்திருக்க வேண்டியிருந்தது நெஞ்சைப் உருக்குகிறது. பிரேத பரிசோதனையில் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டிருப் பதும் கழுத்தை நெரித்து கொல்லப்பட்டிருப்பதும் தெள்ளத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் நடந்தால், வெறுப்புணர்வு கொண்ட சிலர் பெண்கள் மீது குற்றஞ்சாட்டுவது வழக்கமானது. அவள் ஏன் இரவில் வெளியே வந்தாள், அவள் ஏன் அப்படி உடை அணிந்திருந்தாள்? என்பது போன்ற முட்டாள்தனமாக கேள்விகளை எழுப்புவார்கள். 36 மணிநேரம் ஷிப்டில் பணிபுரிய வேண்டிய ஒரு பயிற்சி மருத்துவர், ஓய்வு எடுப்பதற்காக கருத்தரங்க மண்டபத்திற்குச் சென்றுள்ளார். அரசு மருத்துவமனையில் அந்த இடம்கூட அவருக்கு பாது காப்பானதாக இல்லை. அப்படியிருக்கையில், இந்தியாவில் பெண்களுக்கு போதிய பாதுகாப்பு இருக்கிறது என்று எப்படி நம்ப முடியும்? இந்த கொடூர சம்பவத்திலும் ஒரு நேர்மறையான விஷயம் என்னவெனில், தங்களுக்கான இடத்தை மீட்டெடுக்க பெண்கள் திரண்டு நிற்பதுதான். ஒரு பெண் முதல்வராக ஆட்சி செய்யும் மாநிலத்தில், மாநில அரசிடம் கடுமையான கேள்விகளை அவர்கள் முன்வைத்துள்ளனர். இந்த விவகாரம் குறித்து விசாரணை நடந்து வரும் அதே நேரத்தில் சம்பவத்தில் தொடர் புள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அதிகாரத்தில் இருப்பவர்களுடன் ரகசிய தொடர்பு இருப்பதாக சந்தேகிக் கப்படுகிறது. கொல்கத்தாவில் தன்னிச்சையாக வெடித்த கோபமும் அதன் வெளிப்பாடும் இளம் பெண்கள் அநீதியை எதிர்த்து போராட முன்வந்துள்ளதையே சுட்டிக் காட்டுகிறது.

இந்த கொடூரமான குற்றத்தைச் செய்தவர்களுக்கு கடும் தண்டனையும் மற்றும் மலையாளத் திரையுலகம் பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாக புகாருக்கு ஒரு நியாயமான விசாரணை கிடைக்கும் என்றும் நம்பிக்கொண்டிருக்கும் நிலையில், தங்களை பாலியல் ரீதியாக துன்புறுத்திய மற்றொரு சக்திவாய்ந்த நபருக்கு எதிராக நீதிகேட்டு வீதிக்கு வந்து போராடினார் மற்றொரு பெண். அவர் மல்யுத்த வீராங்கனை வினீஷ் போகத். அவருக்கு ஆதரவாக இதர மல்யுத்த வீரர்களும் போராட்டக்களத்தில் இறங்கினர். பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக துணிச்சலுடன் களத்தில் இறங்கிப் போராடிய மல்யுத்த வீரர்களை பொதுமக்கள் முன்னிலையில் விரட்டி அடித்தனர் தில்லி போலீசார். அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு பதிலாக தடியடிதான் பரிசாக கிடைத்தது. ஆனால், தொடர்ந்து போராடிய வினீஷ் போகத், பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்று மல்யுத்த போட்டியின் அரையிறுதியில் தோற்கடிக்க முடியாத ஜப்பானிய வீராங்கனையைத் தோற்கடித்தார். அவருக்கு நிச்சயம் தங்கப் பதக்கம் உறுதி என கோடிக்கணக்கான இந்தியர்கள் கனவுகண்டிருந்த நிலையில், மகிழ்ச்சியில் திளைத்த நிலையில் தகுதி நீக்கம் என்ற செய்தி பேரிடியாக அமைந்தது. 50 கிலோ எடைப்பிரிவுக்கான போட்டியில் அவரின் எடை 100 கிராம் கூடுதலாக இருந்ததாக காரணம் காட்டி அவரை தகுதி நீக்கம் செய்வதாக அறிவித்தது ஒலிம்பிக் போட்டிக்குழு. அரையிறுதியில் நியாயமான முறையில் வென்ற அவருக்கு குறைந்தபட்சம் வெள்ளிப்பதக்கம் ஏன் வழங்கவில்லை என்பதுதான் மிகப்பெரிய கேள்வி. இதற்கென அமைக்கப்பட்ட நடுவர் நீதிமன்றம் அவரது மேல்முறையீட்டை நிராகரித்து விட்டது. விதிகளின்படி ஒரு மல்யுத்தவீரர் போட்டியின் தொடக்கத்தில் தகுதி பெறுவதுடன் மட்டுமல்லாது போட்டி முழுமையாக முடியும் வரை தகுதிபெற்றவராக இருக்க வேண்டுமாம். அதாவது நுழைவு முதல் இறுதிவரை தகுதிபெற்றிருக்க வேண்டுமாம்.

பதக்கம் உண்டு அல்லது பதக்கம் கிடையாது என தீர்ப்பு எதுவாக இருந்தாலும் நம் பார்வையில், குறிப்பாக, நம்நாட்டில் இரண்டாம் பாலினத்தவரை எப்படி குறி வைக்கிறார்கள் என்பதை அறிந்த பெண்கள், வினீஷ் போகத்தை ஒரு சாம்பியனாகவே கருதுகிறார்கள். நிர்வாகத் தையும் அதிகார வர்க்கத்தையும் அவர் கடுமையாக எதிர்த்துப் போராடினார். ஆனால், அவருக்கு நீதி கிடைக்க வில்லை. எனினும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெல்வதற்கான கனவுடன் அவர் பங்கேற்றார். அவர் சாதனைபுரியாவிட்டாலும் இந்திய பெண்கள் மத்தியில் அவர் ஒரு ஹீரோவாகத் திகழ்கிறார். பணிச் சூழலில் பாலியல் தூண்டுதல்கள், துன்புறுதல்கள், பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றால் பாதிக்கப்படுவோருக்கு அவர் நிச்சயம் ஹீரோவாக இருப்பார். DEI-பன்முகத் தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் என்னும் தாரக மந்திரத்தை உண்மையிலேயே நம்பும் ரோட்டேரியன்கள் வினீஷ் போகத்தை உற்சாகப்படுத்த வேண்டும்.



ரஷீதா பகத்

## சாங்கூ யுன் 2026–27 RI தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்



கொரியாவின் சியோலில் உள்ள சே ஹன்யாங் ரோட்டரி சங்க உறுப்பினரான சாங்கூ யுன், 2026–27ம் ஆண்டிற்கான RI தலைவராக நியமனக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். வேறு எந்த வேட்பாளரும் அவரை எதிர்க்காவிட்டால் செப்டம்பர் 15-ம் தேதி அவர் RIPN-ஆக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவார்.

யுன் தனது இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களை அமெரிக்காவின் சிராகஸ் பல்கலைக்கழக கட்டிடக்கலை பள்ளியில் பெற்றார், மேலும் ஸ்காட்லாந்தின் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் கௌரவ முனைவர் பட்டம் பெற்றார். கட்டிடக்கலை பொருட்களை பொறியியலாளர்கள் மற்றும் சந்தைப்படுத்தும் டோங்சு கார்ப்பரேஷனின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் ரியல் எஸ்டேட் மற்றும் நிதி முதலீட்டில் செயல்படும் யங்கன் கார்ப்பரேஷனின் தலைவர் ஆவார்.

யுன் 1987 முதல் ரோட்டரி உறுப்பினர். அவர் RI இயக்குநர், அறங்காவலர், குழு உறுப்பினர் மற்றும் தலைவர், மற்றும் RI கற்றல் வசதியாளராக பணியாற்றியுள்ளார். ரோட்டரியின் கொரிய உறுப்பினர்களால் கீப் மங்கோலியா கிரீன் திட்டத்தின் இணைத் தலைவராக எட்டு ஆண்டுகள் பணியாற்றினார்.

யுன் 2021–22-ல் TRF இன் புகழ்பெற்ற சேவை விருதைப் பெற்றார். மங்கோலியாவின் ஜனாதிபதியால் நட்பு பதக்கம் வழங்கப்பட்டது, மேலும் கொரியாவின் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் சிறப்பான சேவை களுக்காக அங்கீகரிக்கப்பட்டார். அவர் கொரிய குடியரசு இராணுவத்தின் மூத்த வீரர் மற்றும் அன்டோங் பிரஸ்பைடிரியன் தேவாலயத்தில் ஒரு கௌரவ மூப்பர் ஆவார்.

யுன் மற்றும் அவரது மனைவி யூன்சுன், ரோட்டரி அறக்கட்டளை பயனாளிகள், முக்கிய நன்கொடை யாளர்கள் மற்றும் ஆர்ச் கிளம்ப் சொசைட்டி, பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டி ஆகியவற்றின் உறுப்பினர்கள்.

*Source: rotary.org*


YOUR PROJECT PLANNING EXPERTS

the CADRE



**WALLY GARDINER**
Canada, District 5360

**CADRE TITLE**
Cadre Adviser and Former Technical Coordinator for Community Economic Development

**OCCUPATION**
Retired CEO, Gardiner Computer Consulting Inc



**The Rotary Foundation Cadre of Technical Advisers** is a network of hundreds of Rotary members who are experts from around the globe. These advisers use their professional skills and technical expertise to enhance Rotary members' grant projects in our areas of focus.

THE CADRE CAN SUPPORT YOU BY:

- Providing project planning advice and implementation guidance
- Helping with community assessment design
- Incorporating elements of sustainability into projects
- Answering questions about Rotary's areas of focus
- Providing financial management best practices

Connect with a Cadre member today by visiting the Cadre page on *My Rotary*, or email us at *cadre@rotary.org*.

**There are hundreds of experts standing by to help you plan or enhance your Rotary project!**

Rotary



# RI இயக்குனர் செய்தி

## எழுத்தறிவுடன் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவோம்!

செப்டம்பர் மாதம் வரும் போது, அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதத்தின் முக்கியத்து வத்தை ரோட்டரி இன்டர்நேஷனல் ஏற்றுக்கொள்கிறது. இந்தமாதம் ஒரு ஒளிவிளக்காகச் செயல்படுகிறது, கல்வி என்னும் மாற்று சக்தியின் மூலம் தனிநபர்களை மேம்படுத்து வதற்கான பணியில் எங்களுக்கு வழிகாட்டுகிறது.

உண்மையாகச் சொன்னால் கல்விதான் எல்லாவற்றுக்கும் அடித் தளமாகும். அதன் மூலம் தான் வளமான எதிர்காலத்தை கட்டமைக்க முடியும். கல்வி என்பது வெறும் படிப்பு மட்டுமல்ல, அது வாய்ப்பு களுக்கான திறவுகோல், வறுமையின் சங்கிலிகளை உடைப்பதற்கும், புதுமைகளை புகுத்துவதற்கும் கல்வி முக்கியமானது. கல்வியில் ரோட்டரியின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாதது. ஒவ்வொரு தனிமனிதனும் அவரவர் சூழ்நிலைகளைப் பொருட் படுத்தாமல் கல்வி கற்கவும், வளரவும் தகுதியானவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த மாதம், தரமான கல்வியைப் பெறுவதில் உள்ள இடையூறுகளைக் களைந்து இடைவெளிகளை குறைப்பதில் நாங்கள் கவனம் செலுத்துவோம். மிகமுக்கியமான சவால்களில் ஒன்றான கல்வி கற்றலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, குறிப்பாக பாலின பாகுபாடுகளைக் களைய வேண்டிய தேவை உள்ளது. ஒவ்வொரு குழந்தையும், அது ஆணாக இருந்தாலும் சரி அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி சமமான வாய்ப்புகள் இருப்பதை உறுதிசெய்ய நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அனை வருக்கும் வெற்றி வாய்ப்புள்ள, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை மதிக்கும் சமூகத்திற்கான அடித் தளத்தை நாம் கட்டமைக்க முடியும்.

எனினும், கல்வி மீதான நமது அர்ப்பணிப்பு வகுப்பறைகள் மற்றும் குழந்தைகளைத் தாண்டி விரிவடைய வேண்டும். ஒரு திகைப்பூட்டும் உண்மை என்னவென்றால், உலக மக்கள் தொகையில் 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், உலக அளவில் 775 மில்லியனுக்கும் அதிகமான பெரியவர்கள் எழுத்தறி வில்லாமல் இருப்பதுதான். இந்த புள்ளி விவரங்கள்தான் வயது வந்தோருக்கான கல்வியிலும் நாங்கள் கவனம் செலுத்த தூண்டியது. வயது வந்தோருக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுத்தால், அவர்கள் சமூகத்தில் முழுமையாகப் பங்கேற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் பங்களிக்க முடியும். முதியோர் கல்வி கற்பது தனிப்பட்ட முன்னேற்றத்தின் அடையாளம் மட்டுமல்ல, ஒற்றுமை மற்றும் கூட்டு முயற்சிக்கான கிரியா ஊக்கியாகவும் செயல்படும்.

இந்த மாதம் கல்வியில் நாம் கவனம் செலுத்தும்போது, “ஒரு குழந்தை, ஓர் ஆசிரியர், ஒரு புத்தகம் மற்றும் ஒரு பேனா இந்த உலகத்தையே மாற்றிவிடும்” என்று மலாலா யூசுஃப்ஸாய் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. இந்த வார்த்தைகள் கல்வியின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தும் ரோட்டரி இயக்கத்தின் சாரத்தை படம்பிடித்து காட்டுகின்றன. குழந்தைகள் மற்றும் வயது வந்தோர் இருவருக்கும் எழுத்தறிவு புகட்டுவதன் மூலம் வளமான எதிர்காலத்துக்கு முதலீடு செய்கிறோம்.- இது அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்துக்கு உறுதியளிக்கிறது.

செப்டம்பர் மாதம், நமது புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புக்கும் செயலுக்கும் உரிய காலமாக இருக்கட்டும். நாம் ஒன்றிணைந்து, ஒவ்வொருவரும் கல்வி அறிவு பெற்று, வளர்ச்சி அடைந்து வாழ்வில் உயருவதை உறுதிசெய்வோம். இப்படிச் செய்வதன் மூலம் நாம் தனிப்பட்டவர்கள் வாழ்வில் மாற்றம் கொண்டுவருவது மட்டுமல்லாமல், வலுவான, நெகிழ்ச்சியான சமூகத்தையும் மற்றும் வளமான உலகையும் உருவாக்கமுடியும்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

**TRF**
**தலைவரிடமிருந்து...**



# வருங்காலத் தலைமுறைகளுக்கான மரபுச் சொத்து

சிலர் உறவுகள், நட்புகளின் வழியாக மரபுச் சொத்தை விட்டுச் செல்கிறார்கள், வேறு சிலர் நம்பிக்கை அல்லது கொள்கைகளின் வழியாக, இன்னும் சிலர் தங்கள் பணிகளின் வழியாக. ரோட்டரி அறக்கட்டளை இதற்கு இன்னோர் ஆற்றல் மிக்க வழியை வழங்குகிறது.

ரோட்டரி அறக்கட்டளை நன்கொடை நிறுவல் வழியாக மரபுச் சொத்தை விட்டுச்செல்லுவதன் ஆற்றலை நான் நம்புகிறேன். சமீபத்தில், ரோட்டரியில் உள்ள மற்றவர்கள் தங்கள் மரபுச் சொத்தை விட்டுச்செல்ல என் மனைவி கே-யும் நானும் உதவினோம்.

எங்கள் மாவட்டம் (வட அலபாமா-வில் உள்ள RID 6860) அறக்கட்டளையின் நன்கொடை நிறுவலில் கவனம் செலுத்தும் நிதி திரட்டல் இரவு உணவு ஒன்றை நடத்தினோம். ரோட்டரியின் ஆண்டு விழா நாளான 23 பிப்ரவரி 2024-ஐ இதற்குத் தேர்ந்தெடுத்தோம்.

இந்தப் பரப்புரையின்போது, குழு உறுப்பினர்கள் வடக்கு அலபாமா முழுவதும் பயணம் செய்து, நன்கொடை நிறுவலுக்குப் பங்களிப்பதுபற்றிப் பேசினார்கள். அதன்பிறகு, குறிப்பிடக்கூடிய பரிசுகள் வரத் தொடங்கின. ஒரு ரோட்டரியன் $25,000 உறுதியளித்தார், $10,000-க்கான காசோலையை வழங்கினார். விரைவில், மற்றவர் களும் பங்களித்தார்கள். எங்களிடம் $200,000-க்கு மேல் பரிசுகள், உறுதிகள் சேர்ந்துவிட்டன.

நாங்கள் இன்னும் நெடுந் தொலைவு செல்லவேண்டியிருந்தது. ஆனால், ரோட்டரியைப்பற்றி நான் அறிந்த ஒன்று: உறுப்பினர்களுக்கு வாய்ப்பை அளித்தால் அவர்கள் அதற்கு எதிர்வினையாற்றுவார்கள். இந்த மாவட்டத்தின் தாராள மனப்பான்மைக்குமேல், இரண்டு வியப்புகள் இருந்தன. ஒன்று, $500,000-க்கான உயில் உறுதிப்பாடு, பின்னர் இன்னொன்று $560,000-க்கு.

இந்தப் பரப்புரையின் நிறைவில், எங்கள் குழு எங்களுடைய மிகப்பெரிய எதிர்பார்ப்புகளைத் தாண்டிவிட்டது. நாங்கள் நன்கொடை நிறுவலுக்கு $2,729,863.14 திரட்டியிருந்தோம். இது எங்கள் இலக்கைப்போல் கிட்டத்தட்ட மும்மடங்காகும். இந்தப் பரிசுகளின் தாக்கம் என்றென்றும் வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மரபுச் சொத்தை உருவாக்கும்.

2025-க்குள் ரோட்டரி அறக் கட்டளை நன்கொடை நிறுவலை $2.025 பில்லியனுக்கு உறுதிப்படுத்தும் நம் இலக்கை எட்டுவதற்கு எந்த ஒரு தனிச் சங்கத்தாலோ மாவட்டத்தாலோ இயலாது. நம்மில் எல்லாராலும் இப்போதோ சொத்து வழங்கல் திட்டத்தின் மூலமோ $25,000-ஐ வழங்க இயலாது. ஆனால், நம்மில் பலரால் அது இயலும் என்பதும் எனக்குத் தெரியும்.

*rotary.org/legacy* என்ற பக்கத்துக்கு வாருங்கள், அந்த நன்கொடை நிறுவல் இலக்கை எட்டுவதற்கு நமக்கு உதவுங்கள்.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்

**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF அறங்காவலர் செய்தி**



# வெல்டன், இந்தியா!

ரோட்டரி அறக்கட்டளை ரோட்டரியின் முதுகெலும்பு போன்றது. நமது மண்டலங்களில் உள்ள ரோட்டேரியன்கள் அறக்கட்டளைக்கு அர்ப்பணிப்புடனும் முழு ஆதரவுடனும் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளனர். 2023–24-ம் ஆண்டில் இந்தியா TRF-க்கு 32 மில்லியன் டாலர் நிதிப் பங்களிப்புச் செய்து உலகில் இரண்டாவது இடத்தில் இருந்தது. ஐந்து மாவட்டங்கள் தலா 2 மில்லியன் டாலருக்கு மேலாகவும் 10 மாவட்டங்கள் தலா 1 மில்லியன் டாலருக்கு மேலாகவும் நிதிப்பங்களித்துள்ளன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் ஒரு மாவட்டம் (RID 3141) நிதிப் பங்களிப்பில் முதல் இடத்திலும் நான்கு மாவட்டங்கள் உலக அளவில் முதல் 10 இடத்திலும் இருந்தன. இது உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த சிறந்த முயற்சிக்காக 2023–24 மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட மற்றும் பிராந்திய TRF குழுக்களுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள் 2024–25-ம் ஆண்டுக்கு 500 மில்லியன் டாலர் நிதிதிரட்ட இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். நாம் எல்லோரும் ஒரு குழுவாக ஒன்றிணைந்து இந்த இலக்கை எட்டுவதற்கு செயலாற்ற வேண்டும்.

2024–25-**ம் ஆண்டுக்கான**
TRF **முன்னுரிமைகள்:**

- உங்கள் மாவட்டத்தில் உள்ள போலியோ பிளஸ் சமூகத்துக்கு பங்களிப்பதன் மூலம் End Polio Now திட்டத்தை ஆதரியுங்கள். உங்கள் மாவட்டத்தில் குறைந்தபட்சம் 50 புதிய உறுப்பினர்களைச் சேருங்கள் அல்லது போலியோ பிளஸ் சமூகத்தை 20 சதவீதம் வளர்க்க உதவுங்கள்.
- பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினராவதுடன் (ஆண்டுக்கு 1,000 டாலர் வருடாந்திர நிதி) மற்றவர்கள் சேருவதை ஊக்குவிக்கவும்.
- அனைத்து ரோட்டரி சங்கங்களும் வருடாந்திர நிதிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். மேலும் நன்கொடையாளர்களின் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரிக்க வேண்டும்.
- CSR இந்தியா நிதியுதவியைப் பெறுவதிலும் அதை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.
- 2025-ம் ஆண்டிற்குள் அறக்கட்டளை இலக்கான 2.025 பில்லியன் டாலர் இலக்கை அடைவதற்கு நாம் குழுவாக செயல்பட வேண்டும்.

நமது உதவித் தொகையை அதிகரிப்பதன் மூலம் ரோட்டரி நமது வாழ்நாளைத் தாண்டி உலகில் நல்லது செய்ய முடியும் என்பதை உறுதிசெய்ய முடியும்.

நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் ரோட்டரி குடும்பத்தில் உள்ளவர்களும் அனைத்து ரோட்டரி உறுப்பினர்களின் கனவுகளை நனவாக்குவதற்கும், சமூகத்திற்கும், உலகிற்கும் சேவை செய்வதற்கும் பணியாற்ற முடியும். நமது ரோட்டரி அறக்கட்டளை அவை நடப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

நாம் ஒன்றிணைந்து உலகிற்கு நல்லது செய்துகொண்டிருப்போம். அதுதான் ரோட்டரி மற்றும் TRF-இன் மாயாஜாலம்!

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

Rotary PEOPLE OF ACTION

# பாலியல் தொழிலாளிகளின் வாழ்வியலை மாற்றிய ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்



ரோட்டரி கிளப் அஃப் பரூச்சின் முன்னாள் தலைவர் ரிஸ்வானா ஜமீன்தார், பரூச் மற்றும் அங்கலேஷ்வர் நகரங்களில் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் மூலம் கண்ணியம் மற்றும் நிதி சுதந்திரம் இரண்டையும் கொண்டு வருவதற்கான தனது லட்சிய இலக்கை மேற்கொண்டபோது, அவர் ஒரு மந்திரத்தால் உந்தப்பட்டார். அது "அனைத்து பெண்களுக்கும் கண்ணியம் மற்றும் மரியாதைக்குரிய வாழ்க்கையை உறுதிசெய்ய ரோட்டரியின் மந்திரத்தின் மூலம் நம்பிக்கையை உருவாக்குவது எப்படி? ஏனென்றால் இது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமையாகும்."

அவரும் அவரது சங்க உறுப்பினர்களும் சகி என்ற தலைப்பில் திட்டத்தைத் தொடங்க முற்பட்டனர், இது "சமூகத்தின் இருண்ட பகுதிகளில் தொலைந்து போகும் பெண்களை இலக்காகக் கொண்டது". அவர்களின் ஒரே நோக்கம், வேறு வழிகள் இல்லாமல், விரக்தியில் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களை வெளியே கொண்டுவந்து அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் வேறு ஏதேனும் சாத்தியமான விருப்பத்தை அவர்களுக்கு வழங்குவதாகும்.

ரோட்டரியில் அவரது சமூக சேவைப் பணிகளுக்கு நிதியுதவி அளித்து உதவும் அவரது கணவரும் சங்கத்தின் முன்னாள் தலைவருமான டால்கின் மற்றும் மேம்பாட்டு ஆதரவு குழுவின் துணையுடன் ரிஸ்வானா தன்னுடன் பேசத் தயாராக இருக்கும் பெண்களைச் சென்றடையவும், அவர்களுக்கு உதவுவதற்கான தனது நேர்மையில் நம்பிக்கையை வளர்க்கவும் மிகுந்த உறுதியுடன் செயல்பட தொடங்கினார்.

"பரூச் மற்றும் அங்கலேஷ்வர் பகுதி முழுவதும் சிறிய மற்றும் பெரிய குழுக்களாக பெண் பாலியல் தொழிலாளர்களை சந்திக்க நானும் எனது குழுவும் விடாமுயற்சியுடன் உழைத்தோம். நாங்கள் அவர்களின் ரிக்ஷா பயணங் களுக்கு பணம் செலுத்துவதன் மூலம் போக்குவரத்து உதவிகளையும் வழங்கினோம், மேலும் விபச்சார விடுதி உரிமையாளர்கள் மற்றும் தரகர்களுடன் ஈடுபட்டு வெளியேற விரும்புவோர் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தோம்" என்று அவர் நினைவு கூர்ந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் வெற்றியை சந்திக்க முடிந்ததில் மற்றும் சமூக ஆர்வலர்களின் தடையான தகவல் தொடர்பு இல்லாமையை உடைக்க




RC பரூச் IPP *ரிஸ்வானா,* PP *டாக்கின் ஜமீன்தார்,* RC *சிக்லி ரிவர் ஃபிரண்ட்* PP *ஹசன் மாயத்,* RC *பரூச் நர்மதா நகரி* PP *துருவ் ராஜா மற்றும் சங்கத்தலைவர் மௌனேஷ் படேல் ஆகியோர் பாலியல் தொழிலாளர்களுக்கான சகி திட்டத்தை தொடங்கி வைத்தனர்.*

முடிந்ததில் ரிஸ்வானா பெருமிதம் கொள்கிறார் "அதற்கு முக்கிய காரணம் எங்கள் குழு அவர்களுக்கு நகரின் நன்கு அறியப்பட்ட மனநல மருத்துவரான டாக்டர் சாஜித் டே அவர்களுடன் மனநல ஆலோசனை அமர்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் நட்பான சூழலை உருவாக்கியது தான்."

படிப்படியாக, பெண்கள் பாலியல் தொழிலில் தங்கள் போராட்டங்கள் மற்றும் கவலைகள் பற்றி மனம் திறந்தனர். அவர்களின் மருத்துவ தேவைகளை மதிப்பிடுவதற்கும், தேவைப்பட்டால் உதவிகளை வழங்குவதற்கும் சுகாதார முகாம் களும் ஏற்பாடு செய்யப்பட்டன. மிக முக்கியமாக, அவர்கள் சற்றும் கேள்விப்படாத அரசாங்கத்தின் நலத்திட்டங்களின் கீழ் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சில வசதிகளைப் பெறுவதற்கு ரோட்டேரியர்கள் இந்த பெண்களுக்கு உதவினார்கள். பரூச் மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவைப் பெற்றபோது சகி திட்டம் ஒரு ஊக்கத்தைப் பெற்றது.

ரோட்டரி செய்தி நிறுவனத்திடம் பேசிய ரிஸ்வானா, ரோட்டேரியர் களுடனான ஒரு இதயபூர்வமான உரையாடலில், பாலியல் தொழிலாளிகள் இந்த வேலையைத் தழுவியதற்கான காரணங்கள் மற்றும் இதில் சந்தித்த பிரச்சனை பற்றி பேசுகையில், "ஒவ்வொரு பெண்ணும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழத் தகுதி யானவர்கள் என்று நான் எப்போதும் நம்புகிறேன். ஆனால், நம்மைச் சுற்றி வாழ்வாதாரத்திற்காக வேலை செய்யும் பல பெண்களைக் காண்கிறோம், ஆனால் அவர்களின் வேலை அவமரியாதையாகவோ அல்லது தடைசெய்யப்பட்ட தாகவோ கருதப்படுகிறது. எப்படி அல்லது ஏன் இந்த வேலையை அவர்கள் தேர்ந்தெடுக்க நேர்ந்தது என்பதைப் பற்றி சிந்திக்க யாராவது சிறிது நேரம் ஒதுக்குகிறார்களா?" என்றார்.

அப்படியானால் அவர் என்ன காரணங்களைக் கண்டுபிடித்தார் என நான் அவரிடம் கேட்க, "பல பெண்கள் இனிமையாகப் பேசி ஏமாற்றப்பட்டு பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுவதை நாங்கள் கண்டறிந்தோம். மற்றவர்கள் தீவிர வறுமையினால் இதில் ஈடுபடுகின்றனர்; அவர்கள் தங்கள் வீட்டை நடத்தவும், தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்கவும்,

பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தவும் தங்கள் உடலை விற்று வருகின்றனர். மற்றவர்கள் புலம் பெயர்ந்தவர்கள், வேறு என்ன செய்வது என்று தெரியாமல் இதில் சிக்கிக் கொண்டனர்.

ஏறக்குறைய ஒரு வருடமாக இந்தத் திட்டத்தில் பணிபுரிந்த ரோட்டேரியர்கள் இங்குள்ள பெண்கள் 18 வயதுள்ளவர்களாகவும், மேலும் சிலர் வயதானவர்களாகவும் இருப்பதைக் கண்டறிந்தனர். பல்வேறு வகையான நிர்ப்பந்தங்கள் மற்றும் கடமைகள் இந்த பெண்களை பாலியல் தொழிலில் உறிஞ்சுவதையும் அவர்கள் அறிந்தனர், ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக இருந்தது. "எந்த வாடிக்கை யாளர் தங்களுடன் எந்த விதத்தில் நடந்து கொள்வார் என்ற அச்சத்தில் அவர்கள் தொடர்ந்து இருக்கிறார்கள். இருப்பினும் ஒவ்வொரு நாளும், அவர்கள் நியமிக்கப்பட்ட பிக்-அப் இடங்களில் தான் நிற்கின்றனர்."

அவரும் அவரது குழுவினரும் முதலில் "இந்தத் திட்டத்திற்காக பெண்களைச் சந்திக்கத் தொடங்கிய போது, ஆரம்பத்தில் எங்களைப் பார்த்து அவர்கள் மிகவும் பயந்தார்கள், பேசுவதற்குக் கூட தயங்கினார்கள், ஆனால் மெதுவாக நாங்கள் அவர்களின் நம்பிக்கையை வென்றோம், படிப்படியாக அவர்கள் தங்கள் பயத்தையும் தடையையும் நீக்கி அவர்களின் கதைகள், எதிர்காலத்தைப் பற்றிய அவர்களின் கவலை, அவர்களின் அச்சங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டனர். சில இளம் பெண்கள் தாங்கள் படித்து நல்ல வேலையில் சேர விரும்பியதாகவும் ஆனால் அவர்களது குடும்பங்களில் பொருளாதார நிலைமையால் கல்லூரிக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் போனது என கூறினர்" என ரிஸ்வானா நினைவு கூர்ந்தார்.

பாலியல் தொழிலாளி ஒருவர் ரிஸ்வானாவிடம், அவர்கள் கல்லூரியில் படிப்பை முடிக்க சிரமப்பட்டு கொண்டிருக்கும்போது, "எங்கள் நண்பர்கள் சிலர் இதைச் செய்வதன் மூலம் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்று சொன்னார்கள், ஏன் முயற்சிக்கக்கூடாது என்று நாங்கள் நினைத்தோம். இந்த வேலையை ஓரிரு மணி நேரம் செய்து 500 முதல் 1000 ரூபாய் வரை சம்பாதித்தால் என்ன தவறு என்று ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால், பிழைப்பு நடத்த இது சரியான வழியல்ல என்பதை உணர்ந்து அங்கிருந்து வெளியேற முடிவு செய்தேன். இந்த தொழிலில் யார் வேண்டுமானாலும் எளிதாக நுழையலாம், ஆனால் ஒருவரின் சொந்த நிர்ப்பந்தங்கள் உட்பட பல காரணங்களால் இதிலிருந்து வெளியேறுவது மிகவும் கடினம். இதை நான் பெண்கள் அனைவருக்கும் சொல்ல விரும்புகிறேன்" என்றார்.

வெளியேறத் தயாராக இருந்த பாலியல் தொழிலாளர்களுடன் இதுபோன்ற நெருக்கமான தொடர்புகளுக்குப் பிறகு, ரிஸ்வானாவும் அவரது குழுவும் தங்கள் திட்டம் இந்த பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மற்றும்



*தையல் வகுப்பு*

அவர்களுக்கு கண்ணியமான வேலைவாய்ப்பை உறுதி செய்யும் என்பதில் இன்னும் உறுதியாக இருந்தனர். ''ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புகளை கட்டுப்பாடுடன் வைத்துக் கொள்ளுமாறு கூறினோம். இந்த வேலையை விட்டு வெளியேறிய பிறகு, நீங்கள் குறைவாகவே சம்பாதிப்பீர்கள். மேலும் சாப்பிடுவது, குடிப்பது, உடை அணிவது போன்ற உங்கள் வாழ்க்கைமுறையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். ஏனெனில் நீங்கள் இப்போது சம்பாதிக்கும் பணம் அதிகமாக இருக்காது, ஆனால் அது உங்களுக்கு கண்ணியம் மற்றும் மன அமைதி இரண்டையும் தரும் என்று எடுத்துரைத்தோம்'' என்று அவர் மேலும் கூறினார்.

இரு குழுக்களுக்கிடையில் படிப்படியாக நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டது, மேலும் போதுமான ஆலோசனை அமர்வுகளைத் தொடர்ந்து, ரோட்டேரியர்கள் பெண்களுக்கு ஒழுக்கமான





வாழ்க்கையை வாழ, சம்பாதிக்க பல வழிகளை கூறினார். அதில் அவர்கள் தையல் தொழிலை விருப்பமாக தேர்வு செய்தனர். ஒரு தொகுதி பெண்களுக்காக நன்கு வடிவமைக்கப்பட்ட தையல் படிப்புகள் திட்டமிடப்பட்டது, மேலும் 10 பேர் கொண்ட முதல் தையல் பாடத்திட்டத்தை ரோட்டரி கிளப் ஆஃப் பாரூச் நர்மதா நாக்ரியின் பெண்கள் அதிகாரமளிக்கும் மையத்தில் வெற்றிகரமாக முடித்ததன் மூலம் முதல் மைல்கல்லை எட்டப்பட்டது. வெற்றிகரமான பயிற்சிக்கான நன்றி சங்கத் தலைவர் யுவராஜ்சிங் மற்றும் முன்னாள் தலைவர் துருவ் ராஜா ஆகியோரைச் சேரும்.

ஆனால் ஒரு முக்கிய சவால் எஞ்சியிருந்தது - இந்த பயிற்சி பெற்ற பெண்களுக்கான தையல் இயந்திரங்களுக்கான நிதியைக் கண்டறிதல். அவர்கள் CSR நிதியுதவியைப் பெற முயற்சித்த போது, ''பல வணிக நிறுவனங்கள் இந்த முன்முயற்சியின் முக்கியத்துவத்தைப் பாராட்டினாலும், இந்தப் பெண்களின் மறுவாழ்வுடன் நேரடியாகத் தொடர்புகொள்வது இன்னும் சிலரால் தடைசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டது'' என்று ரோட்டேரியர்கள் கண்டறிந்தனர். அதிர்ஷ்டவசமாக, ரோட்டரி கிளப் ஆஃப் சிக்லி ரிவர்ஃபிரண்ட் மற்றும் அலிப்பூர் சமூக நல அறக்கட்டளை நல்ல தரமான தையல் இயந்திரங்களை வழங்க முன் வந்தன, உதவி ஆளுநர் ஹசன் மாயத் மற்றும் அவருடன் தொடர்புடைய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் முயற்சிக்கு நன்றி. அவர்கள் கூட்டாக அனைத்து இயந்திரங்களுக்கும் நிதியுதவி செய்தனர்.

''இது ஒரு முக்கியமான மாற்றத்தின் ஆரம்பம். சகி திட்டம் இரக்கம், விடாமுயற்சி மற்றும் ஒவ்வொரு நபரும் ஒரு கண்ணியமான வாழ்க்கைக்கு தகுதியானவர் என்ற அடிப்படை நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. கண்ணியத்துடனான அவர்களின் பயணம் தொடங்கிவிட்டது. பயிற்சி பெற்ற முதல் தொகுதி பெண்களிடம் புதிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டபோது அவர்களின் முகத்தில் புன்னகையை நாங்கள் பார்த்தது தான் எங்கள் வெகுமதி!'' என்று மகிழ்ச்சியுடன் ரிஸ்வானா கூறுகிறார்.■

# தீக்காயங்களால் பாதிக்கப்பட்டோருக்கு புதிய வாழ்க்கை

ஜெய்ஸ்ரீ



*ஹரித்வாரில் உள்ள ஒரு அறுவை சிகிச்சை முகாமில் தீக்காயத்தால் பாதிக்கப்பட்டவருடன் இன்டர்பிளாஸ்ட்-ஜெர்மனியைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு.*

RC ராணிப்பூர், RID 3080-ன் முன்னாள் தலைவரான ராஜீவ் பல்லா, “தற்செயலாகத் தொடங்கப்பட்டு, தீக்காயங்களால் பாதிக்கப்பட்ட 1,000 பேருக்குப் புதிய வாழ்க்கையை வழங்கிய” திட்டத்தைப் பற்றிப் பிரதிபலிக்கும் போது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் வெளிப்படுத்து கிறார். 2008-ம் ஆண்டு முதல், தீக்காயம் அடைந்தவர்களின் உடல் மற்றும் மன தழும்புகளுக்கு சிகிச்சை அளிக்க சங்கம் ஆண்டுதோறும் ஒரு முகாமை நடத்தி வருகிறது.

“எங்கள் முன்னாள் தலைவர் சஞ்சீவ் மேத்தா ரிஷிகேஷில் ஒரு சுற்றுலா பயணத்தின் போது இன்டர்பிளாஸ்ட்-ஜெர்மனியின் தலைவர் டாக்டர் ஹாஜோவை சந்தித்தபோது இது தொடங்கியது.” அவர்களின் உரையாடல் ரோட்டரி மற்றும் இன்டர்பிளாஸ்ட் (வளரும் நாடுகளில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்யும் இலாப நோக்கமற்ற நிறுவனம்) ஆகிய இரண்டு நிறுவனங்களைப் பற்றிய விவாதத்திற்கு வழிவகுத்தது, மேலும் இந்தியாவில் உள்ள அதிகமான மக்களுக்கு இன்டர்பிளாஸ்ட்-ன் அணுகலை விரிவுபடுத்துவதற்கான தனது விருப்பத்தை டாக்டர் ஹாஜோ வெளிப்படுத்தினார், ஆனால் அரசாங்க விதிமுறைகள் சவாலாக இருப்பதாக கூறினார். எங்கள் அடுத்த சங்க கூட்டத்தில் நாங்கள் இதைப் பற்றி மேலும் விவாதித்தோம், மேலும் இன்டர்பிளாஸ்ட் உடன் வேலை செய்ய நாங்கள் உற்சாகமாக இருந்தோம்.” ஹரித்வாரில் உள்ள ஒரு அரசு மருத்துவமனை, அதன் OPD வார்டு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கைப் பயன்படுத்த அனுமதியளித்தது.

அப்போதிருந்து, சங்கம் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிக்குப் பிறகு 15 நாட்களுக்கு ஒரு சிறப்பு முகாமை ஏற்பாடு செய்து வருகிறது, இதில் 10-12 மருத்துவர்கள், மயக்க மருந்து நிபுணர்கள், அவசர சிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்டிக் மற்றும் இண்டர்பிளாஸ்டில் உள்ள பொது அறுவை சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய குழு தீக்காயங்கள்/ஆசிட் தாக்குதலில் இருந்து தப்பியவர்களுக்கு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர். “ஒவ்வொரு முகாமிலும் சுமார் 70–80 பேர் சிகிச்சை பெறுகிறார்கள். சிலருக்கு காயத்தின் தீவிரத்தைப் பொறுத்து பல அறுவை சிகிச்சைகள் தேவைப்படலாம்” என்று பல்லா விளக்குகிறார். ஒவ்வொரு முகாமிலும் டாக்டர்கள் 150–200 அறுவை சிகிச்சைகள் செய்கிறார்கள் ஆனால் அவர்களின் சேவை களுக்கு கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை. “அவர்கள் தங்கள் செலவில் ஜெர்மனியில் இருந்து பயணிக்கிறார்கள். அவர்களின் தங்குமிடம் மற்றும் டெல்லியில் இருந்து ஹரித்வாருக்கான பயணச் செலவுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்” என்று அவர் கூறுகிறார். அடுத்த முகாம் நவம்பரில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. மேத்தா இந்த வருடாந்திர திட்டத்தின் தலைவராக உள்ளார், இது இப்போது 16வது ஆண்டாக நடந்துக் கொண்டிருக்கிறது.

முதல் இரண்டு நாட்களில், மருத்துவக் குழு, அறுவை சிகிச்சைக்காக நபர்களை பரிசோதித்து, பட்டியலிட்டு, அவர்களின் அறுவை சிகிச்சைகளை திட்டமிடுகிறது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு சுமார் இரண்டு வாரங்கள் நீடிக்கும் பிந்தைய சிகிச்சைக்காக உள்ளூர் மருத்துவர்களும் ஈடுபட்டுள்ளனர். அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய காலத்தில் ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் ஜெர்மன் மருத்துவர்கள் வீடியோ அழைப்புகளில் ஆலோசனைகளை வழங்குகிறார்கள். சிகிச்சையின் ஒரு பகுதியாக உளவியல் ஆலோசனையும் சேர்க்கப்பட்டுள்ளது. “ரோட்டரி ஆன்ஸும் திட்டத்தில் உதவு கிறார்கள். நோயாளிகளின் பராமரிப்பாளர்களுக்கும் ஜெர்மன் மருத்துவர்களுக்கும் இடையிலான தகவல்தொடர்புகளை மொழி பெயர்ப்பதற்கும், அறுவை சிகிச்சை காயங்களை ட்ரஸ்ஸிங் செய்யவும் அவர்கள் உதவுகின்றனர்” என்று அவர் கூறுகிறார்.

மாநிலம் முழுவதிலுமிருந்து குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மற்றும் நேபாளம், பீகார் மற்றும் உ.பி.யில் இருந்து மக்கள் முகாமுக்கு பதிவு செய்கிறார்கள். “ஆரம்ப ஆண்டுகளில் நாங்கள் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் மூலம் முகாமைப் பற்றி விளம்பரப்படுத்தினோம், ஆனால் இப்போது அது நன்கு அறியப்பட்டிருக்கிறது, இது அக்டோபர் இறுதியில் அல்லது நவம்பர் தொடக்கத்தில் இருக்கும் என்பதை மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்” என்று 1987 பட்டயப்படுத்தப்பட்ட சங்கத்தின் மூன்றாம் தலைமுறை ரோட்டேரியர் பல்லா கூறுகிறார். அவர் PDG பிரேம் பல்லாவின் மகன்; அவரது தாத்தா பன்வாரி லால் பல்லா RC ஹரித்வாரின் பட்டயத் தலைவராவார், அவரது தாயார் இன்னர் வீல் கிளப் ஆஃப் ஹரித்வாரின் பட்டயத் தலைவராக இருந்தார்.

அறுவை சிகிச்சை முகாம் “என் வாழ்க்கையின் ஒரு அங்கமாக உள்ளது. அது மீட்டெடுத்த பல உயிர்களைப் பற்றி நினைக்கும் போது, எனக்கு அரவணைப்பாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது” என்று ராஜீவ் பல்லா கூறுகிறார், அது ஒரு இளைஞரின் வாழ்க்கையை எவ்வாறு காப்பாற்றியது என்பதை அவர் விவரிக்கிறார். “பள்ளியில் தன்னைத் துன்புறுத்திய சிறுவர்கள் குழுவைப் பற்றி பள்ளித் தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்ததால், அனுபா ஆசிட் வீச்சுக்கு ஆளானார். அவர் ஐந்து வருடங்களாக எங்கள் முகாமிற்கு வந்துக் கொண்டிருக்கிறார். அவரது சிதைந்த முகத்தை மறுசீரமைக்க மருத்துவர்கள் வருடா வருடம் பல அதிசயங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் அவருடைய கண் இமைகள், காதுகள், மூக்கு மற்றும் வாய் ஆகியவற்றை சீரமைத்துள்ளனர்; இன்று அனுபா உலகை எதிர்கொள்வதில் அதிக நம்பிக்கையுடன் இருக்கிறார், மேலும் ஆசிரியராக வேண்டும் என்று கனவு காண்கிறார்.”

மற்றொரு வெற்றிக் கதை, சஹாரன்பூரைச் சேர்ந்த சப்னா. திருமணமான ஒரு வருடத்தில் சமையல் செய்யும் போது தீ விபத்தில் சிக்கினார். அவரது கன்னம் மற்றும் கைகள் அவரது உடற்பகுதியுடன் இணைந்தன, மேலும் தீக்காயங்கள் காரணமாக அவர் முகம் சிதைந்தது. “மனச் சோர்வடைந்த சப்னா நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவரது கணவரால் முகாமுக்கு அழைத்து வரப்பட்டார். மருத்துவர்கள் அவரது கை மற்றும் கன்னத்தில் அறுவை சிகிச்சை செய்தனர். பின்னர் அவர் கருவுற்றார் என்று கேள்விப் பட்டபோது நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்.”






40 ரோட்டேரியர்களைக் கொண்ட சங்கம், முகாமின் ஆண்டுச் செலவான ரூ.25–30 லட்சத்தை ஏற்கிறது. நோயாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களுக்கான போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் உணவு மற்றும் மருத்து வமனை நுகர்பொருட்கள் இதில் அடங்கும். உத்தரகண்ட் அரசாங்கத்தின் அனுமதிகள் மற்றும் மருத்துவக் குழுவின் விசா சம்பிரதாயங்கள் உட்பட விரிவான நடைமுறைகளை சங்கம் கையாள்கிறது. “சுற்றுலா விசாவில் பணிபுரிய அவர்களுக்கு அனுமதி இல்லாததால், நாங்கள் அவர்களுக்கு தற்காலிக வேலைவாய்ப்பு விசாவைப் பெறுகிறோம். இந்த மருத்துவர்கள் தேசிய மருத்துவ ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும், அங்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.”

கோவிட் நிவாரண நடவடிக்கைகளுக்காக சங்கத்திற்கு இன்டர்பிளாஸ்ட் ரூ.17 லட்சம் பங்களித்த மனதை நெகிழச்செய்யும் கதையை பல்லா பகிர்கிறார். “மார்ச் 2020-ல், ஜெர்மன் மருத்துவர்கள் தங்கள் வருடாந்திர முகாமுக்காக இந்தியாவுக்குச் செல்வதற்கான நிதியைத் திட்டமிட்டனர். ஆனால் கோவிட் தாக்கி பயணம் இடைநிறுத்தப்பட்டபோது, அவர்கள் தங்கள் சேமிப்பை கோவிட் நிவாரணப் பணிகளுக்காக எங்கள் சங்கத்திற்கு தாராளமாக வழங்கினர்.”

உத்தரகாண்டில் உள்ள பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயை பரிசோதிக்க, RC ராணிபூர் விரைவில் ரூ.1 கோடி மதிப்பிலான மொபைல் மேமோகிராம் திட்டத்தை உலகளாவிய மானிய ஆதரவுடன் தொடங்கவுள்ளது.■

# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE AND KLE ANNOUNCE

## 6 YEARS

PRE-MED TO

## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE

**PROGRAMME**





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherlands

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

## TO ATTEND WEBINAR

## REGISTER NOW

**XUSOM.COM/INDIA/**

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherlands

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**Session starts in September 2024**

To apply, Visit:
**application.xusom.com**
email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

ADVT.




# வயநாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ விரைந்த ரோட்டரி

ரஷீதா பகத்




Source: PTI

ஜூலை 30 அன்று, கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள இரண்டு கிராமங்கள் – சூரல்மாலா மற்றும் முண்டக்கை – பெருமழையால் உருவான நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஒரே இரவில் காணாமல் போனது. பிரபலமான சுற்றுலாத் தலமான வயநாட்டில், இந்த இரண்டு கிராமங்களும் அவற்றின் இயற்கைக் காட்சிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளுக்காக குறிப்பாக அறியப்பட்டவை. கடவுளின் சொந்த நாடு என்று பிரபலமாக அழைக்கப்படும் கேரளாவில், இந்த இயற்கைப் பேரழிவு, சிறிது மனிதனால் உருவாக்கப்பட்டதும் கூட, கடந்த பல ஆண்டுகளாக இந்த மாநிலத்தை விளிம்பிற்கு தள்ளிய தொடரான பேரழிவுகளில் ஒன்றாகும். 2018 வெள்ளத்திற்குப் பிறகு கேரளா கண்டிராத மிக மோசமான இயற்கை பேரிடராக வயநாடு பேரிடர் உள்ளது.



**மேலே:** *மேப்பாடி கிராமத்தில் நிவாரண முகாமில்* RID 3204 DG *சந்தோஷ் ஸ்ரீதர்* RC *சுல்தான் பத்தேரி சென்ட்ரலின் கண் மற்றும்* ENT *முகாமை திறந்து வைத்தார்.*

**கீழே:** RC *சுல்தான் பத்தேரி சென்ட்ரல் உறுப்பினர்களால் செய்யப்படும் நிவாரணப் பணிகள்.*





இந்த சோகத்தில் 430க்கும் மேற்பட்டோர் இறந்த நிலையில், 130-க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். இந்திய இராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF), தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகள், வன மற்றும் வனவிலங்கு அதிகாரிகள், காவல்துறை மற்றும் நூற்றுக்கணக்கான தன்னார்வலர்களுடன் இணைந்து உயிர் பிழைத்தவர்களைக் கண்டறிய ஒரு பெரிய மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டது. சுற்றியுள்ள வனப் பகுதிகளிலும் சேறும் சகதியுமான இடங்களிலும் சிக்கித் தவித்த மக்கள் மீட்கப்பட்டு 10,000-க்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உடனடி பிராந்தியமான RID 3204, கேரளாவின் மற்ற பகுதிகள் மற்றும் மாநிலத்திற்கு அப்பால் உள்ள ரோட்டேரியர்கள் உதவிக்கு வர வேண்டிய நேரம் இதுவாகும். “இது முன் எப்பொழுதும் இல்லாத அளவிலான சோகம்; பேரிடர் நடந்த இடத்தில் இருந்து 25–30 கிமீ தொலைவில் உள்ள சாலியாறு ஆற்றில் மனித உடல்கள் மற்றும் உடல் பாகங்கள் அடித்து சென்றன. நூற்றுக்கணக்கான மக்களின் உடமைகள், சேமிப்புகள் மற்றும் முழு வீடுகளும் அவர்களின் கனவுகளுடன் புதைக்கப்பட்டன” என்கிறார் வயநாட்டில் உள்ள ஐந்து சங்கங்களில் ஒன்றான RC சுல்தான் பத்தேரியின் உறுப்பினர் K P ரவீந்திரநாத்.

பல நிலச்சரிவுகளால் 1,555 வீடுகள், 209 கடைகள், இரண்டு பள்ளிகள் சேதமடைந்தன மற்றும் மூன்று பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன, 136 சமுதாயக் கட்டிடங்கள் சேதமடைந்தன மற்றும் 626 ஹெக்டேர் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டன. கேரளாவின்

## *நிலச்சரிவின் தோற்றம்*

*முண்டக்கை பகுதிக்கு அருகில் உள்ள புஞ்சிரிமட்டத்திற்கு மேலே உள்ள பள்ளத்தாக்கில் தான் நிலச்சரிவு தொடங்கியது என தி ஹிந்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இஸ்ரோவின் நேஷனல் ரிமோட் சென்சிங் சென்டர் (NRSC) வெளியிட்ட செயற்கைக்கோள் படங்களின்படி, "நிலச்சரிவின் கிரீடம்" அல்லது தோற்றம் கடல் மட்டத்திலிருந்து 1,550 மீட்டருக்கு மேல் உள்ளது மற்றும் முக்கிய சரிவின் தோராயமான அளவு 86,000 சதுர மீட்டர் - இது 12 கால்பந்து மைதானங்களுக்கு சமமானதாகும்" என்று அறிக்கை கூறியது.*

*இப்பகுதியில் பெய்த மழை பெரும் சிதை கூளத்தை ஏற்படுத்தியது, இது நிலச்சரிவை தீவிரப்படுத்தியது என NRSC அறிக்கை கூறியது. பேரழிவு கடுமையாக இருந்தது, முழு கிராமங்களும் தரைமட்டமாயின. பேரழிவுக்குப் பிந்தைய பிற ஆய்வுகள், அதிகரித்த மற்றும் அதிக தீவிரமான நிலச்சரிவுகளுக்கு மனித செயல்பாடுகள் முக்கியக் காரணமாக இருப்பதைக் கண்டறிந்தன. இதனுடன் அதிகப்படியான மற்றும் தொடர்ச்சியான மழையைச் சேர்ந்து பேரழிவாக மாறியது. ஜூலை 30 அன்று நிலச்சரிவுகள் ஏற்பட்டன, ஆனால் ஜூன் மாத இறுதியில் இருந்து இப்பகுதியில் கிட்டத்தட்ட தொடர்ச்சியான மழை பெய்து வந்துள்ளது.*

*இந்த பாரிய நிலச்சரிவுக்கு சில நாட்களுக்கு முன்னர் முண்டக்கையில் 48 மணிநேரத்தில் 572MM மழைவீழ்ச்சி பதிவாகியிருந்ததாகவும், அதில் முதல் 24 மணிநேரத்தில் 200MM மழை பதிவாகியுள்ளதாகவும், அடுத்த 24 மணிநேரத்தில் 372MM மழை பதிவாகியுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.*

வரலாற்றில் மிக மோசமான நிலச்சரிவான இதில் சுமார் 1,200 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என கேரள அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த எண்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அவர்களின் அன்பானவர்களையும் இழந்த மக்களின் அதிர்ச்சி, துயரம், துன்பம் மற்றும் வலிக்கு அவை ஈடாகாது. தங்கள் வாழ்விடத்திலிருந்து விலகி வந்த யானைகளால் பீதியடைந்த உள்ளூர்வாசிகளின் அழைப்புகளைப் பெற்ற பின்னர், வன மற்றும் காவல்துறை பணியாளர்கள் அடங்கிய முதல் குழு அந்த இடத்திற்கு விரைந்த பல வீடியோக்களை மலையாள சேனல்கள் காட்டின. விலங்குகளுக்கு இதுபோன்ற விஷயங்கள் எப்போதும் நன்றாகத் தெரிகிறது, இல்லையா?

ஊடகங்களுக்கு பேட்டியளித்த இந்த குழுக்களின் உறுப்பினர்கள், அவர்கள் அங்கே சென்றடைந்த இடத்தில் அவர்கள் கண்ட சோகத்தின் பயங்கரத்தையும் அளவையும் ஒருபோதும் மறக்க முடியாது என்றனர். "பெரிய பாறாங்கற்கள், மரங்கள், தண்ணீர் ஆர்ப்பரித்து எல்லாவற்றையும் அடித்துச் செல்ல, மக்கள் அலறிய சத்தம் நீண்ட நேரம் என் தலைக்குள் கேட்டுக் கொண்டிருந்தது" என்று பணியில் இருந்த போலீஸ்காரர் ஒருவர் கூறினார். அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்ததாக ஒப்புக்கொண்ட அவர், ஆனால் பெரும்பாலும் மண், கற்பாறைகள் மற்றும் மரங்களின் சரிவால் பலர் அடித்துச் செல்லப்படுவதை உதவியற்றவர்களாகப் பார்க்க வேண்டியிருந்தது என கூறினார்.

அப்பகுதியில் உள்ள ஒன்றிரண்டு கடைகளில் இருந்து மீட்கப்பட்ட CCTV காட்சிகள் பல லட்சம் வீடுகளின் தொலைக்காட்சியில் வயநாடு மக்கள் அனுபவித்த பேரழிவின் திகில் மற்றும் தீவிரத்தை வெளிப்படுத்தின. கண் இமைக்கும் நேரத்தில் மூடிய கடைகளுக்குள் வெள்ள நீர் புகுந்து ஷட்டர்களையும் கான்கிரீட் சுவர்களையும் அழித்ததைக் காட்சிகள் காட்டியது. பேரழிவில் முற்றிலும் அழிக்கப்பட்ட குக்கிராமங்களில் ஒன்றான சூரல்மாலாவில் உள்ள கடைகளின் CCTV கேமராக்களில் இருந்து மலையாள சேனல்கள் ஒளிபரப்பிய காட்சிகள் மனித கற்பனைக்கு அப்பாற்பட்டவை. பாறாங்கற்கள், மரங்கள், விலங்குகளின் சடலங்கள்... இவையனைத்தும் கொட்டும் நீரின் சீற்றத்தால் இந்தக் கடைகளின் மீது மோதியதைக் காண முடிந்தது.

ரவீந்திரநாத் மேலும் கூறுகையில், "வயநாடு பெரும்பாலும் கேரளாவின் காஷ்மீர் அல்லது பசுமையான சொர்க்கம் என்று

குறிப்பிடப்படுகிறது, அற்புதமான நீர்வீழ்ச்சிகள், நீரோடைகள், குகைகள், கம்பீரமான நீல மலைகள், பசுமையான பள்ளத் தாக்குகள் மற்றும் வனவிலங்குகளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் மிதமான கால நிலையுடன் இருப்பதால், இது சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாக உள்ளது. வயநாட்டின் 2,131 சதுர கிலோமீட்டர் பரப்பளவில், பல ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் தவிர, 5,000க்கும் மேற்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, என்றார்.

இப்பகுதி பருவமழைக் காலத்தில் (ஜூலை முதல் செப்டம்பர் வரை) அதிக மழைப்பொழிவை அனுபவிக்கிறது மற்றும் பல சுற்றுச்சூழல் உணர்வுப் பகுதிகளைக் கொண்டுள்ளது, குறிப்பாக மலைத்தொடர்களின் கிழக்குப் பகுதியில் நிலச்சரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பருவமழையின் போது, இப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர். ஆகஸ்ட் 2019 இல், மேப்பாடிக்கு அருகிலுள்ள தேயிலைத் தோட்டக் கிராமமான புதுமலை ஒரு பெரிய நிலச்சரிவினால் அழிக்கப் பட்டது. இந்த ஆண்டும் பெய்த கனமழையால் சில குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சில நாட்களுக்கு முன்பே இடம் பெயர்ந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

முண்டக்கை மற்றும் சூரல்மாலா இரண்டும் வட கேரளாவில் உள்ள மேப்பாடி பஞ்சாயத்தில் அமைந்துள்ள அழகிய சிறிய கிராமங்கள், அவை மலைப்பாங்கான நிலப்பரப்பு மற்றும் விவசாய நிலங்களுக்கு பெயர் பெற்றவை. அவை விவசாயக் குடும்பங்களைக் கொண்டுள்ளது மற்றும் அதில் பெரும்பாலான மக்கள் தேயிலை தோட்டங்களில் வேலை செய்தனர். பொதுவான பயிர்களில் காபி, தேநீர், மிளகு மற்றும் பல்வேறு மசாலாப் பொருட்கள் அடங்கும்.

இந்த ஆண்டு ஜூலை முதல், வயநாடு தொடர் மழையைப் பெற்று வந்தது. முண்டக்கையில் 48 மணி நேரத்தில் 572 MM மழை பெய்து அந்த கோரமான நாளுக்கு வழி வகுத்தது. ஜூலை 30 அதிகாலை முண்டக்கை மற்றும் சூரல்மாலா கிராமங்களில் மூன்று பயங்கரமான நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இவை முழு கிராமத்தையும் அழித்தன, வீடுகள் மற்றும் கட்டிடங்களை சேற்றில் புதைந்தன. “நாள் முழுவதும் மழை பெய்ததால், நாங்கள் பயந்தோம், ஆனால் நாங்கள் பல ஆண்டுகளாக இங்கு வாழ்ந்ததால், அசாதாரணமான எதுவும் நடக்காது என்று நினைத்தோம். ஆனால் நள்ளிரவில் நாங்கள் ஒரு பயங்கர சத்தத்தை கேட்டோம், சில நிமிடங்களில், தண்ணீருடன் சேறும் எங்கள் வீட்டிற்குள் கொட்ட ஆரம்பித்தது. அதிர்ஷ்டவசமாக, நாங்கள் உடனடியாக பாதுகாப்பான பகுதிக்கு சென்றோம். மிக விரைவில், வீடு முழுவதும் சேற்றிலும் தண்ணீரிலும் மூழ்கியது’’ என உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் கூறினார்.



RC சுல்தான் பத்தேரி சென்ட்ரல் உறுப்பினர்கள் மேப்பாடி கிராமம் பேரிடர் நிவாரண முகாமை பார்வையிட தயாராக உள்ளனர்.

மாவட்ட நிர்வாகத்தால் நிவாரணப் பணிகள் தொடங்கப்பட்டதும், உள்ளூர் தன்னார்வலர்கள், காவல்துறை, கேரள தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் பின்னர் இந்திய ராணுவம் இதில் ஈடுபட்டனர். வயநாட்டில் உள்ள ரோட்டரி கல்பெட்டா, கபனிவேளி மானந்தவாடி, பெப்பர் டவுன் புல்பள்ளி,  சுல்தான் பத்தேரி சென்ட்ரல் மற்றும் சுல்தான் பத்தேரி ஆகிய ஐந்து சங்கங்களின் ரோட்டேரியர்கள், பேரிடர் பகுதிக்குள் நுழைவது தடைசெய்யப்பட்டதால், நிவாரண முகாம்களுக்கு விரைந்து சென்று அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்கினர். ஐந்து ரோட்டரி சங்கங்களின் கூட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது மற்றும் இயற்கை பேரிடர்களின் போது ரோட்டரி சிறப்பாகச் செய்யும் உடனடி மற்றும் நீண்ட கால நிவாரணம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த சங்கங்கள் செய்த பணிகள் குறித்த விவரங்களை RC சுல்தான் பத்தேரி சென்ட்ரல் செயலர் T ஜெயச்சந்திரன் கூறியதாவது, நிலம்பூர் மற்றும் முக்கம் RC-க்கள் களத்தில் இறங்கி, சாலியாறு ஆற்றில் இறந்த உடல்களை மீட்டு, அவற்றை துணியால் சுற்ற உதவி அவற்றை வயநாட்டிற்கு கொண்டு செல்ல உதவினர். ரோட்டரி சுல்தான் பத்தேரி சென்ட்ரல் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தொடர்ந்து இரண்டு நாட்கள் மேப்பாடியில் உள்ள நிவாரண முகாமில் உயிர் பிழைத்தவர்களுக்கு கண் மற்றும் ENT முகாம்களை நடத்தியது. 170 பேருக்கு மேல் சோதிக்கப்பட்டு 140 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. RID 3204

DG சந்தோஷ் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மருந்துகளும் விநியோகிக்கப்பட்டன. இரண்டு நாட்களும் முகாமை DGE பிஜோஷ் மானுவல் பார்வையிட்டார்.

வயநாட்டில் உள்ள அனைத்து சங்கங்களும் நிவாரண முகாம் களுக்கு தேவையான கையுறைகள், முகமூடிகள், மருந்துகள், பெட்ஷீட்கள், தார்பாய், சானிட்டரி நாப்கின்கள், வாளிகள் போன்ற நிவாரணப் பொருட்களை உடனடியாக வழங்கின. ரோட்டரி கல்பெட்டா, ரோட்டரி மஞ்சேரி மற்றும் சைபர் சிட்டி மற்றும் RMB, கோழிக்கோடு இணைந்து நிவாரண முகாம்களில் மிகவும் தேவையான பயோ டாய்லெட்கள் மற்றும் தற்காலிக கழிப்பறைகளை வழங்கின.

நான் ஒரு ரோட்டேரியர் என்பதால், தளத்தைப் பார்வையிட அதிகாரிகளிடம் அனுமதி பெற முடிந்தது. சுமார் 5,000 தன்னார்வலர்கள் சேற்றை அகற்றி, மனித உடல்கள் மற்றும் அவர்களது உடைமைகளை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அங்கு ஒரு பயங்கரமான அமைதி நிலவியது, யாரும் பேசாததால் அதிர்ச்சி அப்பட்டமாக இருந்தது. பலரின் முகங்கள் உறைந்து போயிருந்தன, காணாமல் போன தங்களின் அன்புக்குரியவர்களை அல்லது குறைந்தபட்சம் அவர்களின் உடலையாவது கண்டுபிடிப்பார்கள் என்று சிலர் இன்னும் நம்பி காத்திருந்தனர்'' என்கிறார் RC மஞ்சேரியின் முன்னாள் தலைவர் பரத் தாஸ்.

இரண்டு அழகான குக்கிராமங்கள் – வெள்ளரிமலை மற்றும் சூரல்மலை – பாலம் இடிந்து, தண்ணீரால் அடித்து செல்லப்பட்டதால், ஆறு மற்றும் சேற்றால் பிரிக்கப்பட்டது. இராணுவப் படைகள் இரண்டு இடங்களையும் இணைக்க பெய்லி பாலத்தை கட்டினார்கள். மேப்பாடிக்கு தண்ணீர், சுகாதாரப் பொருட்கள், காய்கறிகள், உடைகள் போன்ற நிவாரணப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வரத் தொடங்கின. சிறிது நேரத்தில் அனைத்து குடோன்களும் நிரம்பியதால், ஆலோசனை மையங்கள் செயல்படத் தொடங்கின.

RC மஞ்சேரியைச் சேர்ந்த ரோட்டேரியர் குழுவினர் நிலம்பூருக்குச் சென்று, அங்கு சடலங்களை மீட்க இரவு பகலாக உழைக்கும் தன்னார்வலர்களுக்கு தண்ணீர், பிஸ்கட், பழச்சாறு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கினர். இந்த திட்டத்திற்கு சங்க உறுப்பினர் காலித் புதுச்சேரி நிதியுதவி செய்தார். "புனர்வாழ்வு மையத்தில் பயோ டாய்லெட்டுகள் தேவை என்று எங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பெரும் பான்மையான மக்கள் வசிக்கும் கல்பெட்டாவில் உள்ள SKMJ பள்ளிக்கு இரண்டு பயோ டாய்லெட்டுகளை நாங்கள் கொண்டு சென்றோம்'' என்று அவர் மேலும் கூறினார்.

"எங்கள் சங்க உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் மேகஸ்ரீயை சந்தித்து 150 பேருக்கு LPG சமையல் எரிவாயு இணைப்பையும், இரண்டு பர்னர்கள் கொண்ட அடுப்பையும் வழங்க உறுதி பூண்டோம்.'' சுமார் 10 லட்சம் ரூபாய் திட்டச் செலவை, கொண்டோட்டியில் உள்ள இந்தியன் ஆயில் காஸ் டீலராக இருக்கும் C அப்துல் கரீம் என்ற சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியர் ஏற்றுக்கொண்டார்.

DG ஸ்ரீதர், PDG V G நயினார், DGE பிஜோஷ் மானுவல், மற்ற மாவட்ட அதிகாரிகள் மற்றும் ஐந்து வயநாடு சங்கங்களின் தலைவர்களுடன் பேரிடர் பகுதிக்கு சென்று, நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு கொண்டிருந்த கேரள அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினர். நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக ரோட்டரியிடம் இருந்து சுமார் 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தனர். மேலும், மாவட்ட ஆட்சியர் மேகஸ்ரீயை நேரில் சென்று சந்தித்தனர், பேரிடரால் பாதித்தவர் களுக்கு ரோட்டரி செய்து வரும் பணிகளை அவர் பாராட்டினார்.

ரோட்டரி நாகர்கோயில் (RID 3212) மற்றும் ரோட்டரி திருப்பூர் குமரன் (RID 3203) துணிகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை விரைந்து கொண்டு வந்தன. ரோட்டரி புனலூர் ரிவர்சைடு (RID 3211) என்சைம் அடிப்படையிலான துப்புரவுப் பொருட்களை வழங்கியது, ரோட்டரி பாம்பே, இந்தியா மனிதநேய அறக்கட்டளை மற்றும் ரோட்டரி கல்கத்தா மகாநகர் ஆகியவற்றில் இருந்து 150 ஷெல்டர் கிட்கள் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று DG ஸ்ரீதர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "ரோட்டரி கல்பெட்டா அறக்கட்டளை – வயநாடு பேரிடர் நிவாரண நிதி'' என்ற பெயரில் பாதிக்கப் பட்டவர்களின் மறுவாழ்வுக்காக நிதி திரட்ட ICICI வங்கி கல்பெட்டா கிளையில் வங்கி கணக்கு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கணக்கு எண்: 075705002020, IFSC: ICIC0000757. இந்த நிதியில் பங்களிக்குமாறு அனைத்து சங்கங்கள் மற்றும் பரோபகாரர்களை நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.■

## Appeal to donate

Merchant Name : M/s The Rotary Kalpetta Charitable Trust - Wayanad Disaster Relief Fund
Mobile Number : 9495318552

Steps to Pay UPI QR Code:
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

# புதிய நண்பர்கள், பழைய நண்பர்கள்



பாரிசில் நடைபெற்ற 1953 மாநாட்டை ரோட்டரி இதழ் "மகிழ்ச்சியளிக்கும் நட்புப் பயணம்" என்று அழைத்தது. இந்த விவரிப்பு அதற்கு முந்தைய, பிந்தைய எல்லா மாநாடுகளுக்கும் பொருந்துகிறது. ஜூன் 21 முதல் 25 வரை கால்கரியில் நடைபெறவுள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில், பழைய நட்புகளைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள், ஒரு ரோட்டராக்டர் சொல்வது போல், அறிமுகமில்லாதவர்களிடம் "உடனடி நட்பை"க் கண்டுபிடியுங்கள். ரோட்டரியன்கள் மாநாட்டுக்கு வருவதற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்று, இந்த நட்புகள்.

**மாநாட்டு நண்பர்களைப்பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள், இதோ:**

"மாநாட்டில் யாருடனும் பேசுவதற்கு உங்களுக்கு அறிமுகம் தேவையில்லை. அதனால், புதிய நண்பர்களை உருவாக்கிக்கொள்ளுங்கள்." "நீங்கள் வருவீர்கள் என்று புதிய நண்பர் காத்திருக்கிறார். இது உறுதி. ஏனெனில், இதை நான் பல ஆண்டு களாகக் கண்டுள்ளேன்." "பிரேசில், தைவான், கென்யாவிலிருந்தெல்லாம் புதிய நண்பர்கள் வேண்டுமென்றால், ரோட்டரி மாநாட்டுக்குத்தான் செல்லவேண்டும்."

வயது வந்தோருக்கு நெருங்கிய நண்பர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது, தனிமை கூடி விட்டது என்கிறார்கள். அதனால், எல்லாருக்கும் நண்பர்கள் தேவை. உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் மன நலத்தில் உதவவேண்டும் என்று ரோட்டரி ஊக்குவிக்கிறது. ஆனால், 1914-லேயே ஒரு பத்திரிகைக் கட்டுரை "மதிப்புமிக்க மாநாட்டு நண்பர்கள் வாழ்க்கையின் கரடுமுரடான பாதையை இதமாக்கு கிறார்கள்" என்றது.

உண்மையில், ரோட்டரியின் நல்ல பணிகள் புதிய, பழைய நட்பு களிலிருந்துதான் வெளிப்படுகின்றன. நிறுவனர் பால் ஹாரிஸ் ரோட்டரியைத் தொடங்கிய போது, உண்மையான நண்பர்களைத் தேடினார், வெறும் தெரிந்தவர்களை இல்லை. சான் அன்டோனியோ-வில் நடைபெற்ற 2001 மாநாட்டுப் பேச்சில் முன்னாள் தலைவர் ஃபிரான்க் டெவ்லின் இதுபற்றிப் பேசினார், "நாம் புதிய நண்பர்களை உருவாக்குகிறோம். ஏனெனில், நாம் செய்யும் அனைத்துக்கும் அதுதான் அடித்தளம்." கனடாவில் நடைபெறும் மாநாட்டில் நீங்கள் அவர்களைக் கண்டறிவீர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகும் நீங்கள் தொடர்பில் இருப்பீர்கள் என்று நம்பலாம்.

## RI மாநாட்டில் யோசனைகளைப் பகிருங்கள், மக்களை ஊக்குவியுங்கள்

*ரோட்டரியின் பரந்த சமூகத்துக்கு ஒரு யோசனையையோ திட்டத்தையோ சொல்ல விரும்புகிறீர்களா? ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டின் பிரேக்கவுட் நிகழ்வுகள் பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கலாம், அவர்கள் தங்கள் தலைமைப்பண்புத் திறன்களை மெருகேற்ற உதவலாம், உறுப்பினர் எண்ணிக்கை, திட்டங்கள், நிதி திரட்டல், இன்னும் பலவற்றை வலுப்படுத்த அவர்களுக்குப் புதிய யோசனைகளை வழங்கலாம்!*

*ரோட்டரியின் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் ஒரு பிரேக்கவுட் திட்டத்தை உருவாக்க எங்களுக்கு உதவுங்கள். 12 ஆகஸ்ட் முதல் 14 அக்டோபர் வரை நீங்கள் நிகழ்வுகளுக்கான முன்வைப்புகளைச் சமர்ப்பிக்கலாம். உங்கள் யோசனையை முன்வைக்க, convention.rotary.org பிரேக்கவுட் நிகழ்வுகள் பக்கத்தைப் பாருங்கள். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், conventionbreakouts@rotary.org-க்கு எழுதுங்கள்.*

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org


Rotary
RID-3212
THE MAGIC OF ROTARY
T3
ROTARY CLUB OF SIVAKASI SPARKLER
ROTARY CLUB OF SIVAKASI DIAMONDS
ROTARY CLUB OF SENGOTTAI
MULTI DISTRICT
RYLA
ROTARY YOUTH LEADERSHIP AWARDS
Registration Fees 500/-
First 60 Registration only
(First Come First Serve Basis)
TOgether TOwards TOmorrow
27,28,29th SEPTEMBER 2024
K.R. Tiger Resorts, Courtallam.
Rtn.Major Donor. PAG.A.Raveendran
District Ryla Chairman - 3212.
Rotary Club Of Sivakasi Sparkler
Rtn. MPHF. S.Shivaprakasham
PRESIDENT
Rtn. PHF. S.K.B Kumaresan
SECRETARY
Rtn. MPHF. Aadharsh Hemanth
PROJECT CHAIRMAN
Rtn. Major Donor. N.S. Velayutham
Assistant Governor Zone 10
Rotary Club Of Sivakasi Diamonds
Rtn. S. Anitha
PRESIDENT
Rtn. PHF. M. Jothi Lakshmi
SECRETARY
Rtn. PHF. N. Kanchana Devi
PROJECT CHAIRMAN
Rtn. MPHF. A. Vijayakumar
Assistant Governor Zone 8
Rotary Club Of Sengottai
Rtn. K.M.P. Abu Annavi
PRESIDENT
Rtn. G. Thenrajan
SECRETARY
Rtn. M.S. Saravanan
PROJECT CHAIRMAN
Rtn. PHF. E. Paulraj
Assistant Governor Zone 14
For Details Contact:
Rtn. PAG. R. UMA MAHESHWARAN, 98947 27599

ADVT.

Rotary PEOPLE OF ACTION

# AI உதவியுடன் மார்பக புற்றுநோய் கண்டறியும் சாதனம்

ரஷீதா பகத்



*கேன்சர் கேர் இந்தியா நிறுவனர் Dr இந்திரா செயற்கை நுண்ணறிவு உதவி மார்பக புற்றுநோய் பரிசோதனை சாதனம் பற்றி விளக்குகிறார். (இடமிருந்து) அம்புஜா ஹெல்த்கேர் அறக்கட்டளை இயக்குநர் சத்யநாராயண் லட்சுமணன், Rtn அசார் கான், ITC ஃபில்ட்ரோனாவைச் சேர்ந்த கலாவதி, மற்றும் அஞ்சனாத்ரி சாரிட்டபிள் டிரஸ்டைச் சேர்ந்த கேசவ் மூர்த்தி ஆகியோரும் உள்ளனர்.*




செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் (AI) மூலம் மார்பக புற்று நோயை முன்கூட்டியே கண்டறிய முடியும் என்பதை தொழிலதிபர் ஆனந்த் மஹிந்திரா வெளியிட்டிருந்த ஒரு தகவலை நான் ஐந்து ஆண்டு களுக்கு முன்பு படித்தேன். இது துல்லியமாக இருந்தால், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் மதிப்பு மிக்கதாகவும், நாம் நினைத்ததைவிட பயனுள்ளதாகவும் இருக்கும். குறிப்பிடத்தக்க இந்த முயற்சி தொடர்பாக RID 3191-க்கு உட்பட்ட பெங்களூரு லேக்சைடு ரோட்டரி சங்கத்திடமிருந்து எங்களுக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது.

இது ரோட்டரி சங்கம், கேன்சர் கேர் இந்தியா, தி அம்புஜா ஹெல்த்கேர் பவுண்டேஷன் மற்றும் ITC ஃபில்ட்ரோனா ஆகிய நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டுமுயற்சியை விவரிக்கிறது. பெங்களூருவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நிர்மல் ஹெல்த் அனாலிடிக்ஸ் நிறுவனம் AI தொழில்நுட்பம் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தெர்மாலிடிக்ஸ்

# பெண்களின் மிகப்பெரிய புற்றுநோய்க் கொல்லி

*பெண்களிடம் மார்பக புற்றுநோய் கண்டறியும் வகையில் குறைந்த செலவில், எளிதில் பயன்படுத்தக் கூடிய இந்த நவீன கருவியை உருவாக்கிய பெருமை பெங்களூருவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நிராமல் ஹெல்த் அனாலிடிக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கீதா மஞ்சுநாத்தையே சேரும். 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் (AI) பி.ஹெச்டி பட்டம் பெற்ற கணினி விஞ்ஞானி என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். இப்போது சமூகத்தில் தொழில்முனைவோராக மாறியிருப்பதாகவும் விவரிக்கிறார். “செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் மார்பக புற்று நோயை கண்டறியும் புதிய வழியை நாங்கள் கண்டறிந்துள்ளோம். கதிர்வீச்சு இல்லாமல் தெர்மல் ஸ்கேன் முறையில் இந்த பரிசோதனை நடத்தப்படுகிறது. மார்பக புற்றுநோய் என்பது பெண்களுக்குள்ள மிகப்பெரிய ஆட்கொல்லிநோய். இன்றைய அளவில் மார்பக புற்றுநோய் 159 நாடுகளில் பெண்களுக்குள்ள முதன்மையான*



*நிராமை ஹெல்த் அனலிட்டிக்ஸ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் கீதா மஞ்சுநாத்.*

சாதனம் மூலம் கிராமப்புற பெண்களிடம் மார்பக புற்றுநோயைக் கண்டறியும் முகாம்களை நடத்தி வருகிறது. “இந்த சாதனத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், இது குறைந்த விலை உடையது. மேலும் துல்லியமானது, எளிதில் கையில் எடுத்துச் செல்லக்கூடியது. மேலும் நோயாளியின் தனியுரிமையை பாது காக்கிறது” என்று அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் நடத்தப்படும் பல்வேறு முகாம்களில் சுமார் 1,000 பெண்களை பரிசோதிக்கும் வகையில் மொத்தம் ரூ.12 லட்சம் CSR நிதியுதவி மூலம் இந்த மார்பக புற்றுநோய் கண்டறியும் சிகிச்சை திட்டத்தை ரோட்டரி சங்கம் மேற்கொண்டுள்ளது. “இந்த சாதனத்தின் நன்மை என்னவென்றால் இது கைக்கு அடக்கமானது. எளிதில் எடுத்துச் செல்லக்கூடியது. மேலும் இந்த சாதனத்தை இயக்குவதும் எளிது. துணைமருத்துவர்கள் மட்டுமின்றி, தொழில்நுட்ப வல்லுநர் களும் இதை இயக்குவதற்கு பயிற்சி பெற்றுள்ளனர். மற்றொரு நன்மை என்னவென்றால் இதில் பெண்களின் தன்னுரிமை பாதுகாக்கப்படுகிறது. இந்த பரிசோதனைக்காக ஒரு பெண், தனது ஆடைகளை கழற்ற வேண்டியதில்லை. சோதனையின் போது யாரும் அவரை



*மாவட்ட CSR இயக்குனர் காசிநாத் பிரபு (இடமிருந்து நான்காவது), லக்ஷ்மன், அசார், கலாவதி, சங்கத் தலைவர் அபிலாஷா பண்டிட் மற்றும் டாக்டர் இந்திரா, சுகாதார மற்றும் ஆஷா பணியாளர்களுடன்.*

*நோயாகவும் மற்ற நாடுகளில் இரண்டாவது பெரிய நோயாகவும் உள்ளது. இந்தியா மற்றும் இதர வளரும் நாடுகளில் மார்பக புற்றுநோய் காரணமாக ஆண்டுக்கு 6,80,000 பெண்கள் உயிரிழக்கிறார்கள். மார்பக புற்றுநோயால் இறப்போர் விகிதம் 50 சதவீதமாக உள்ளது. அதாவது பெண் நோயாளிகள் இருவரில் ஒருவர் மார்பக புற்றுநோயால் இறக்கும் நிலை உள்ளது. மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்தால் அதை குணப்படுத்த முடியும். யாரும் இதனால் உயிரிழக்க வேண்டியதில்லை'' என்றார்.*

*மார்பக புற்றுநோய் தாமதமாக கண்டறியப்படுவதே இறப்பு விகிதம் அதிகரிக்க காரணமாகும் என்று ஐ.நா. பிரதிநிதிகளிடம் டாக்டர் கீதா விளக்கினார். ''இந்தியா போன்ற நாடுகளில் மம்மோகிராபி, அல்ட்ரா சவுண்ட் உள்ளிட்ட தொழில்நுட்ப வசதிகள் மற்றும் அதை இயக்கு வதற்கான நிபுணர்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தால் மார்பக புற்றுநோயை கண்டறிய ஒருங்கிணைந்த பரிசோதனைகளுக்கான நடைமுறைகளைச் சரிவர செயல்படுத்த முடியவில்லை. இன்றளவும் சில இடங்களில் பழைய முறையிலேயே மார்பக புற்றுநோய் பரிசோதனை நடத்தப்படுகிறது. இந்த பரிசோதனை களின் முடிவை அறிவதில் காலதாமதம் ஏற்படுவதால் நோய் முற்றி பலர் இறந்து விடுகின்றனர். இதனால் இறப்பு விகிதம் 50 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

*பெண்களிடம் மார்பக புற்றுநோய் என்பது உலகளாவிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளதால் இந்த விவகாரத்தை அனைவரும் தீவிரமாக கருத வேண்டும் என்று Dr கீதா கேட்டுக்கொண்டார். தனது ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட குறைந்த செலவிலான AI தொழில்நுட்ப உதவியுடனான கருவியின் செயல்பாட்டையும் அவர் விளக்கினார். கைக்கு அடக்கமான இந்த கருவியை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும். விலையும் குறைவு என்றும் குறிப்பிட்டார். கதிர்வீச்சு பாதிப்பு இல்லாத இந்த நவீன கருவி மூலம் முன்கூட்டியே நோயை கண்டறிந்து சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும் என்றார்.*

*தாம் கண்டுபிடித்த சாதனம் மருத்துவ ரீதியில் பயன்படுத்தக்கூடியது, பல நாடுகளில் இந்த சாதனத்தின் மூலம் தான் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதன் முடிவுகள் துல்லியமாக இருக்கின்றன. இதுவரை இந்த பரிசோனை மூலம் 1,20,000 பெண்கள் பலனடைந்துள்ளனர். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியால் சமுகத்திற்கு என்ன பயன் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். பெண்கள்தான் ஒரு குடும்பத்தின் முக்கியப் புள்ளி. அந்த நிலையில் ஒரு பெண் நோயாவாய்ப்பட்டால் குடும்பமே கொந்தளிக்கும் சூழ்நிலை உருவாகும். அவள் ஆரோக்கியமாகவும் உடல்நலத்துடனும் இருந்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். மேலும் பெண் தொழில் முனைவோரை அனைவரும் ஆதரிக்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்தி தனது உரையை முடித்துக்கொண்டார்.*



தொடமாட்டார்கள்'' என்கிறார் இத்திட்டத்தை மேற்பார்வையிடும் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மாவட்ட CSR இயக்குநருமான காசிநாத் பிரபு.

CSR நிதியுதவி வழங்கிய தங்களின் கூட்டாளியான ITC ஃபில்ட்ரோனாவுக்கு நன்றி தெரிவித்த அவர், மின்வசதியுள்ள, ஸ்மார்ட் போன்கள் வேலை செய்யும் இடங்களில் இந்த நவீன சாதனத்தை பயன்படுத்த முடியும் என்பதால் கிராமப்புறங்களில் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை செய்ய இந்த கருவியை பயன்படுத்த சங்கம் முடிவு செய்துள்ளதாக கூறினார். கணினி உதவியுடன் நோய்கண்டறியும் இந்த சாதனத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் இயக்க முடியும். ''வெப்ப உணர்திறன் கொண்ட இந்த சாதனம், துல்லியமான, நம்பகமான வெப்ப பகுப்பாய்வு வரைபடங்கள் மூலம் மார்பக புற்றுநோய், அதற்கான தீர்வுகளை விவரமாக தெரிவிக்க வல்லது'' என்று அவர் மேலும் கூறினார்.

கர்நாடக மாநிலம், பெங்களூரு ஊரக மாவட்டம், தொட்டபல்லா புரத்தில் உள்ள அரசுப் பள்ளியில் கடந்த ஜூலை 27-ம் தேதி பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாம் நடைபெற்றது. உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனம், பொது சுகாதார மையத்தைச் சேர்ந்த ஆஷா பணியாளர்கள் மற்றும் அதன் கார்ப்பொரேட் கூட்டாளர்களின் உதவியுடன் பரிசோதனைக்கான பெண்கள் அடையாளம் காணப்பட்டார்கள். கேன்சர் கேர்



இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் Dr R இந்திரா, AI பரிசோதனைக்கான வழிமுறைகளை விளக்கினார்.

சங்கத்தின் தலைவர் அபிலாஷா பண்டிட் கூறுகையில், "ஏழை மற்றும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த கிராமப்புற பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பரிசோதனை நடத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த பரிசோதனை முகாம்கள் கிராமங்களில் உள்ள சமூகக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசுப் பள்ளிகளில் நடைபெறும்," என்றார். இந்த திட்டத்தின் முதல் கட்டமாக பெங்களூரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 1,000 பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாம் நடத்தப்படும். முகாமில் யாருக்கேனும் புற்றுநோய்க்கான அறிகுறிகள் இருப்பது தெரியவந்தால் அடுத்த கட்டமாக எங்களுடைய மருத்துவமனை கூட்டாளர்களான கித்வாய் மருத்துவமனை அல்லது பெங்களூரு HCG மருத்துவமனையில் ஆலோசனையும் மேல் சிகிச்சையும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

புற்றுநோய் அறிகுறி இல்லாத ஆனால், அபாயத்தின் அறிகுறியுள்ள நபர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு, வாழ்க்கை முறையில் மாற்றங்கள் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக வழக்கமான மருத்துவப் பரிசோதனைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்படும். இதனால், பிரச்னை உடனடியாக அவற்றை சமாளிக்க முடியும்.

இந்த திட்டத்தை பற்றி மேலும் பிரபு "புதிய யோசனைகளுக்காக காத்திருந்தேன். இப்போது எங்களிடம் இருக்கும் நிதியைக் கொண்டு கிராமப்புறங்களைச் சேர்ந்த 1,000 பெண்களுக்கு இந்த நவீன கருவி மூலம் மார்பக புற்றுநோய் பரிசோதனை நடத்த இயலும். ஒவ்வொருவரையும் பரிசோதிக்க ரூ.250 செலவாகும். மேலும் 15 இல்லது 20 நிமிடங்களில் இந்த பரிசோதனை முடிந்துவிடும். ஆலோசனை உள்பட ஒவ்வொரு வருக்கும் 30 நிமிடங்கள் செலவிட்டால் போதுமானது. இந்த முகாம்களில் தினமும் 50 பெண்களுக்கு பரிசோதனை நடத்த முடியும் என்றார்.

இந்த திட்டத்தின் முதல் கட்ட வெற்றியைப் பொறுத்து இதே நிறுவனம் அல்லது பிற நிறுவனங் களிடமிருந்து CSR நிதி கிடைக்க வழியேற்படும். வாய் புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

மார்பக புற்றுநோய் பரிசோதனை போன்ற முக்கியமான மருத்துவ பரிசோதனையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயனை இத்திட்டத்தின் மூலம் பெண்கள் பெறுகிறார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.■


Rotary
END POLIO NOW
இன்று ரோட்டரி அறக்கட்டளைக்கு
நன்கொடை வழங்கி... எதிர்கால
தலைமுறையை வாழவைப்போம் ...
Rtn. AKS. Dr. K. ஸ்ரீனிவாசன்
District officer Media Publicity.
Rotary Club of Tiruchirappalli, RID 3000, zone - 5
Phone : +91 938 181 8690
E-mail : ksrinisubha@gmail.com
5, Vyasaraja Nagar, Srirangam - 620 006. South India.

ADVT.

# மொரீஷியஸில் கண் மருத்துவ முகாம்

**கிரண் ஜெஹரா**

ஜூன் 2024ல், விட்ரியோரெடினல் குறைபாடுகளால் துன்புறும் மக்களைப் பரிசோதிக்கவும் குணப்படுத்தவும் மொரீஷியஸில் ஐந்து நாள் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தின தாணே ரோட்டரி சங்கம், RID 3142 மற்றும் RC ஃபீனிக்ஸ் மொரீஷியஸ், RID 9220. விழித்திரையையும் விட்ரியஸையும் பாதிக்கும் இந்தக் கண் நோய்களைக் குணப்படுத்தாவிட்டால் தீவிரப் பார்வைக் குறைபாடு அல்லது பார்வையிழப்பு ஏற்படலாம்.

மொரீஷியஸில் உள்ள மோகா-வில் இருக்கும் சுப்ரமணிய பாரதி கண் மருத்துவமனையில் நடைபெற்ற இந்த முகாமுக்கு இந்தியாவைச் சேர்ந்த இரண்டு கண் மருத்துவர்களுடன் சென்றார் RC தாணே-யின் அப்போதைய தலைவரான ஆனந்த் கலே. இந்த மருத்துவர்கள் இந்தத் தீவு



*மொரீஷியஸில் உள்ள மருத்துவ முகாமில் ஒரு அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது.*



*RC தானே IPP ஆனந்த் காலே (இடது), Dr A K கரண் மற்றும் Dr ஸ்வேதா பத்ரோ (இடமிருந்து 4வது) மொரீஷியஸைச் சேர்ந்த கண் மருத்துவர்களுடன்.*

நாட்டில் 120 பேரைப் பரிசோதித்து, 40 அறுவைச் சிகிச்சைகளை நடத்தினார்கள். இந்த முன்னெடுப்பு, இந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவத் தொழில் வல்லுனர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தது. “நாங்கள் உள்ளூர் மருத்துவர்களுக்கு மேம்பட்ட திறன்கள், அறிவை வழங்கி ஆற்றல் அளிக்க விரும்பினோம்” என்கிறார் RC தாணே முன்னாள் தலைவர் அஜய் கெல்கர்.

2017ல், தொழில் பயணமாக மொரீஷியஸ் வந்திருந்த கலெ, RC ஃபீனிக்ஸில் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார். இதனால் இந்தச் சங்கங்களுக்கிடையில் நட்பு உருவானது. 2017ல், இந்தச் சங்கம் $3,000 நன்கொடையளித்து RC தாணே-யை ஆதரித்தது, தடுப்பணை ஒன்றைக் கட்ட உதவியது. அதன்பிறகு, இவர்கள் இணைந்து பணிபுரியலானார்கள்.

அடுத்த ஆண்டு, RC ஃபீனிக்ஸ் உறுப்பினர்கள் இந்தியாவுக்கு வந்து மருத்துவர்களைச் சந்தித்தார்கள், ஏழைக் குழந்தைகளுக்கு மாறுகண் அறுவைச் சிகிச்சைகளைப்பற்றிக் கற்றுக்கொண்டார்கள். அத்துடன், இவர்கள் தாணே-யில் உள்ள பெண்கள் பள்ளி ஒன்றில் கழிப்பறைத் தொகுதி கட்டுவதற்கு $2,500 பங்களித்தார்கள். அதன்பிறகு, கெல்கர் தலைமையில் RC தாணே அதுல் சேத், சித்தார்த் கேசர்வானி என்ற கண் மருத்துவர்களை மொரீஷியஸுக்கு அனுப்பி ஆதரித்தது. அங்கு இவர்கள் மாறுகண் உள்ள 160 குழந்தைகளைப் பரிசோதித்து, 100 குழந்தைகளுக்குத் திருத்த அறுவைச் சிகிச்சைகளைச் செய்தார்கள். அடுத்த ஆண்டு, மேலும் 50 குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மாறுகண் அறுவைச் சிகிச்சைக்கான தேவை குறைந்ததால், இந்தச் சங்கங்கள் விட்ரியோரெடினல் குறைபாடுகளில் கவனம் செலுத்தின.

இந்தியாவிலிருந்து வந்த கண் மருத்துவர்களான A K கரண் மற்றும் சுவேதா பட்ரோ இருவரும் பயிலகங்கள், நேரடிப் பயிற்சியை நடத்தி, சிக்கலான விழித்திரை அறுவைச் சிகிச்சைகளைக் கையாள்வதற்கான திறன்களை உள்ளூர் மருத்துவர் களுக்கு வழங்கினார்கள். இந்தத் திட்டத்துக்கான செலவு, சுமார் ரூ.85 லட்சம்.■

---

## மருத்துவமனைக்கு TB பரிசோதனைக் கருவிகள்

ரோட்டரி செய்திக் குழு



*நாமக்கல் மாவட்ட ஆட்சியர் S உமாவுடன் IPDG S ராகவன் காசநோய் பரிசோதனை வசதிகளை தொடங்கி வைத்தார். திட்டத் தலைவர் N P ராமசாமி இடதுபுறம் உள்ளார்.*

தமிழ் நாட்டின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நகரம் ராசிபுரம். இங்கு, நோயாளிகளுக்குக் காசநோய்ப் பரிசோதனை, சிகிச்சை வழங்கும் நோக்கத்துடன் அரசு மருத்துவமனைக்கு ஒரு மூலக்கூறுப் பரிசோதனை இயந்திரத்தையும், GH, நாமக்கல்லுக்கு ஒரு ஃப்ளோரசென்ட் நுண்ணோக்கியையும், ராசிபுரத்தைச் சுற்றியுள்ள 10 முதன்மை நல மையங்களுக்குத் தலா ஒரு நுண்ணோக்கியையும் கொடையளித்துள்ளது RC ராசிபுரம், RID 2982. ரூ.27.4 லட்சம் மதிப்புள்ள பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாக வழங்கப்பட்ட இவை இப்பகுதியின் TB பரிசோதிக்கும் வசதிகளை மேம்படுத்தும்.

இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர், RC கார்னெட்டெ-ஃபார்க்விம் காஸ்ட்ரோ, RID 4630, பிரேசில். சிகிச்சை பெறும் நோயாளிகளின் நோயெதிர்ப்பாற்றலை மேம்படுத்துவதற்குப் பருப்புகள், முட்டை, சமையல் எண்ணெய் போன்றவற்றைக் கொண்ட ஊட்டச்சத்தான உணவு வழங்கப்படுவதைத் தேசிய TB அகற்றல் திட்டம் கட்டாயமாக்குவதால், “நாங்கள் ரூ.72,000 செலவில் 20 TB நோயாளிகளுக்கு ஆறு மாதத்துக்கு மாதம் ரூ.600 மதிப்புள்ள பருப்புகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்” என்றார் திட்டத் தலைவர் N P ராமசாமி.

ராசிபுரம் அரசு மருத்துவமனையில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் S உமா TB பரிசோதனை இயந்திரத்தைத் தொடங்கிவைத்தார். அப்போதைய சங்கத் தலைவர் P ஸ்ரீனிவாசன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் IPDG S ராகவன், PDG P சரவணன், DRFC கு லோகநாதன், மாவட்ட நல்கைகள் தலைவர் பாபு கந்தசாமி, ராமசாமி, மருத்துவ வல்லுனர்கள் கலந்துகொண்டார்கள்.■

# மக்களின் நல்வாழ்வுக்காக தத்தெடுக்கப்பட்ட கிராமம்

ரஷீதா பகத்

வடாச்சி வாடி என்பது அவுரங்காபாதிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமம். இங்கு மொத்தம் 385 பேர் கொண்ட 40 குடும்பங்கள்தான் வசித்து வருகின்றன. பெரும்பாலான குடும்பங்கள் வருமானத்திற்கு விவசாயத்தையே நம்பியுள்ளன. சிறிய விவசாயிகளிடம் 2 முதல் 3 ஏக்கர் நிலமும், பெரு விவசாயி களிடம் 5 முதல் 6 ஏக்கர் நிலமும் உள்ளது. அவர்களில் பெரும்பாலோர் மக்காச்சோளம், கம்பு, பருத்தி, பருப்பு வகைகள் மற்றும் காய்கறிகளைப் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களாக RID 3132-க்கு உட்பட்ட அவுரங்காபாத் ரோட்டரி சங்கம், இந்த கிராமத்தை தத்தெடுத்து, குழந்தைகளின் கல்வி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கிராமத்துப் பெண்களின் வருமானத்தை பெருக்குவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. இதன் மூலம் கிராமத்தில் வளர்ச்சி மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கிராமங்களை முன்னேற்று வதற்கான முன்முயற்சியின் கீழ் ரோட்டரி சங்கத்தினர் சில ஆண்டுகளுக்கு முன் இந்த கிராமத்தை தத்தெடுத்து தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர். ‘‘கிராம மக்களின் தேவை என்ன என்பதை அறிந்து அதை பூர்த்தி செய்யவும், கல்வி, விவசாயம் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு நிலையான தீர்வுகாணவும், பெண்களின் திறமையை மேம்படுத்தவும், அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதுமே எங்களின் நோக்கமாகும்’’ என்று சங்கத்தின் முன்னாள் தலைவர் சரிதா சதீஷ் லோனிகர் தெரிவித்தார்.

பெண்களின் கல்வியை மையமாக வைத்து சங்கம், அந்த கிராமத்தில் உள்ள ஆரம்பப்பள்ளியை பழுது பார்த்து, சீரமைத்து, மாணவர்கள், மாணவிகளுக்கு என தனித்தனியே கழிப்பறை வசதி செய்து கொடுத்து பள்ளி புதுப்பொலிவுடன் திகழ நடவடிக்கை எடுத்து வருகிறது. மேல்நிலைப் பள்ளிக்கு 8 கி.மீ. தொலைவு நடந்து செல்ல வேண்டிய நிலையில் 10 மாணவிகளுக்கு IPDG ஸ்வாதி ஹெர்கல் மூலம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மேலும் 8 மாணவிகளுக்கு தலா ரூ.5,000

*IPDG சுவாதி ஹெர்கல் (இடமிருந்து நான்காவது) மற்றும் RC அவுரங்காபாத்தின் IPP சரிதா சதீஷ் லோனிகர் வடச்சி வாடி கிராமத்தில் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு சைக்கிள் பரிசளித்தனர்.*



மதிப்புள்ள சைக்கிள்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

அடுத்ததாக, சமூகமாற்றத்தை மேம்படுத்துவதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கும் ஒருபரந்த நோக்கத்தின் அடிப்படையில் பல்வேறு முன்முயற்சிகள் மூலம் உள்ளூர் தொழில்முனைவு- பெண்களின் சுயதொழில் ஆகியவற்றை ஆதரிப்பதில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது. ''பெண்களை தொழில்முனைவோராக ஊக்குவிக்கவும், அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் ஆர்வம் உள்ள ஆறு பெண்களுக்கு சிறப்பு பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களில் மூவர் இப்போது பணியமர்த்தப் பட்டுள்ளனர்'' என்கிறார் RID 3132 தலைவரின் உதவி ஆளுநர் பூனம் தேவ்தர்.



கிராமத்தைச் சேர்ந்த 6 பெண் களுக்கு அரவை இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இப்போது அவர்கள் மிளகாய் தூள், மஞ்சள் தூள் உள்ளிட்ட இதர உணவு தானியங்களை அரைப்பதன் மூலம் தொடர் வருமானம் பெறுகிறார்கள். துணிப்பைகள், பர்சுகள் மற்றும் பவுச்சுகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு தையல் இயந்திரம் நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த பெண்கள் தயாரிக்கும் மசாலாப் பொடி, ஊறுகாய், அப்பளம் உள்ளிட்ட பொருள்களை மார்க்கெட்டில் விற்பனை செய்யவும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் உதவி வருகின்றனர்.




அடுத்ததாக, விவசாயிகளுக்கு நிபுணர்கள் மூலம் இயற்கை விவசாயத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வழிகாட்டப்படுகிறது. சில பண்ணைகளில் பழமரங்களும் நடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கிராமத்தில் சுமார் 500 மூங்கில் மரங்கள் நடவும் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த திட்டத்துக்காக இதுவரை சுமார் ரூ.3 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனாளிகளில் ஒருவரான சவிதா ''அரவை இயந்திரம் மூலம் எனக்கு தினமும் ரூ.200 முதல் ரூ.300 வரை வருமானம் கிடைக்கிறது'' என்றார்.

சங்கத்தின் தலைவர் சரிதா கூறுகையில், ''எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர் மாதம் ஒரு முறை இந்த கிராமத்திற்குச் சென்று பார்வையிடுகிறார்கள்'' என்றார்.

''பெண் கல்வியை ஊக்குவிக்க வேண்டும் என்பதே எங்களின்



சங்கத்தால் புதுப்பிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் கிராமப் பள்ளி.




எதிர்காலத் திட்டமாகும். இந்த இலக்கை நோக்கிச் செல்லும் வகையில் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறோம். மேலும் டிஜிட்டல் வகுப்பறைகள், டிஜிட்டல் கற்றல் முறைகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்'' என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ''அடிக்கடி மருத்துவ முகாம்கள் மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். பெண்கள் திறன் வளர்ப்பு பயிற்சி தொடர்ந்து நடத்தப்படும். மரங்கள் நடுவது, இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் எடுத்துச் சொல்வது மற்றும் அவர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் தொடரும்'' என்றார்.

''எங்களுடைய திட்டங்கள் அனைத்தும் கிராம மக்களிடம் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும், அவர்களின் நல்வாழ்க்கையை மேம்படுத்தும் என்று நம்புகிறோம்'' என்கிறார் புன்னகையுடன் பூனம்.■

# இம்பாலில் ஊட்டச்சத்துக்கு முட்டை வங்கி

ரோட்டரி செய்திக் குழு



*சங்கத் தலைவர் சரத்சந்திர சிங் பிஜாம் (இடமிருந்து மூன்றாவது) மற்றும் உறுப்பினர்கள் முட்டைகளை புண்யா குழந்தைகள் இல்லத்தின் ஊழியர்களிடம் ஒப்படைத்தனர்.*

RC இம்பால், (RID 3240) 2021-ம் ஆண்டு முதல் ரோட்டரி முட்டை வங்கி திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் மூலம் மணிப்பூர் மாநிலம், இம்பாலில் உள்ள சனூரா லீகோல் பெண் குழந்தைகள் இல்லம் மற்றும் புண்ணியா பெண் குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வாரம் 1890 முட்டைகளை வழங்கிவருகிறது. இங்குள்ள 114 பெண் குழந்தைகளுக்கு வாரத்தில் நான்கு நாட்கள் முட்டை வழங்கப்படுகிறது. சங்கத்தின் தலைவர் சரத்சந்திர சிங் பீஜம் விளக்கம் அளிக்கையில், "இந்த திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துகளை வழங்கி அவர்களின் ஆரோக்கியம் மேம்பட உதவுகிறோம். ரோட்டரி சங்க உறுப்பினர்கள் வழங்கும் நன்கொடைகள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது'' என்றார்.

தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு, ராஜேந்திரா மருத்துவ அறிவியல் கழகத்துடன் இணைந்து சங்கம் நடத்திய மருத்துவ முகாமில் 200-க்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் சங்கத்தின் சார்பில், இம்பால் கிழக்கு பகுதியில் உள்ள பாபினா பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் 170 மரக்கன்றுகள் நடப்பட்டன.■

# திரும்பக் கிடைத்த புன்னகை

ரோட்டரி செய்திக்குழு



IPDG T R *விஜயகுமார் (இடது), மாவட்ட இயக்குநர் கோகுல்ராஜ்,* RC *கோயம்புத்தூர் மொனார்க்ஸ்* IPP Dr *விகாஸ் குப்தா மற்றும் செயலாளர்* D *சுதாகர், நிவேதா (வலது) மற்றும் அவரது தந்தையுடன் அவரது சிகிச்சைக்குப் பிறகு.*

நிவேதா (27) இப்போது மகிழ்ச்சியில் துள்ளுகிறார்; அவருடைய முகத்தில் ஒரு சிறப்பான மாற்றம் நிகழ்ந்துள்ளது. காரணம், RC கோயம்பத்தூர் மொனார்க்ஸ், RID 3201 ஆதரவில் நடைபெற்ற ஒரு பல் அறுவைச் சிகிச்சை.

2 ஆண்டுகளுக்குமுன், இவர் இந்தச் சங்கத்தின் IPP டாக்டர் விகாஸ் குப்தாவைச் சந்தித்தபோது, ஆர்வமில்லாத, ஊட்டச்சத்து கிடைக்காத, எடை குறைந்த, தீவிர மாக்சிலரி அட்ரோபி கொண்ட ஒரு பெண்ணாக இருந்தார். இவருடைய மேல் தாடை எலும்பு அரிக்கப்பட்டு, இவருடைய பற்கள் ஆதரவின்றி ஈறுகளில் ஆபத்தாகத் தொங்குவது போல், உடையப்போவதுபோல் தெரிந்தன.

நிவேதாவால் சரியாகச் சாப்பிட இயலவில்லை என்றும், திரவ உணவுகளால் தான் அவர் உயிர் வாழ்கிறார் என்றும் அவர் தாய் மருத்துவரிடம் சொன்னார். அவருடைய கன்னங்களும் உதடுகளும் அழுந்தியிருந்தன. தன் தோற்றத்தைப் பிறர் கேலி செய்வார்கள் என்ற அச்சத்தில் அவர் வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை, அவருக்கு நண்பர்களும் இல்லை. குப்தா குவாட் ஜைகோமா என்ற அறுவைச் சிகிச்சைகளையும், ஆல்-ஆன்-4 என்ற பல் மறுவாழ்வுத் திட்டத்தையும் பரிந்துரைத்தார். இதற்கான மொத்தச் செலவு, ரூ.9 லட்சம். நிவேதாவின் பெற்றோரிடம் அவ்வளவு பணம் இல்லை.

ரோட்டரியன்கள் கஜல் நிகழ்ச்சி மூலம் அவருக்காக நிதி திரட்ட முன்வந்தார்கள். ஐந்து பெருநிறுவனங்கள் (துல்சி வாடிகா, ரீபோஸ், சக்தி RO, இம்பெல் மற்றும் டாக்டர் குப்தாவின் சொந்த நிறுவனமான டென்டல் கேர் புரொஃபஷனல்ஸ்) தலா ரூ.50,000 வழங்கித் தாராளமான ஆதரவு அளித்தன. மொத்த நிதி இந்தச் சிகிச்சைக்கான முழுச் செலவை எட்டாவிட்டாலும், சிகிச்சையைத் தொடங்கத் தீர்மானித்தார் அவர். கங்கா மருத்துவமனை தன் இடத்தை வழங்கியது. குப்தாவும் அவரது மருத்துவர் குழுவும் நிவேதாவுக்கு மறுகட்டமைப்பு அறுவைச் சிகிச்சையைச் செய்து, அவருக்குத் தாற்காலிகப் பல் உள்வைப்புகளை வழங்கினார்கள்.

“இப்போது அவர் தன்னம்பிக்கையுடன் உள்ளார். அவருடைய முகம் இயற்கை வடிவத்தைத் திரும்பப் பெற்றுவிட்டது என்றார் குப்தா. இவருக்குத் திருமணமும் நடைபெறவுள்ளது. “ஓர் ஆண்டில் இவருக்கு நிரந்தரப் பல் கிடைக்கும்,” என்றார் அவர்.

இந்த ஆண்டு, CN சரவணா தலைமையில் சங்கம் அரசு பள்ளிகளில் கைகழுவும் வசதி மற்றும் சானிடைசர் மற்றும் சோப்பு ஆகியவற்றை வழங்க உள்ளது. மேலும் மாணவர்களுக்கு மென் திறன்களை கற்றுத்தர ஏற்பாடு செய்துள்ளது.■



*மென்திறன் பயிற்சிக்குப் பிறகு சங்கத்தலைவர்* C N *சரவணா (நடுவில்) மாணவர்களுடன்.*

# சூரிய ஆற்றல் நாயகர்களை நாடும் RI

ரஷீதா பகத்

ரோட்டரி இன்டர்நேஷனல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு நிலையான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் பாரம்பரியத்திலிருந்து புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறுவதை ஊக்குவிக்கும் ஒரு உந்துதலைத் தொடங்கியுள்ளது.

இந்த நோக்கத்திற்காக RI-ன் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ரோட்டரி நடவடிக்கை குழு (ESRAG) ஒரு மில்லியன் சோலார் பேனல்கள் சவால் (MSPC) முயற்சியைத் தொடங்கியுள்ளது, இதில் ஒரு மில்லியன் சோலார் பேனல்களை நிறுவ ரோட்டேரியர்கள் வலியுறுத்தப்படுகிறார்கள். "இது முடிக்கப்படும் போது 7.5 மில்லியன் டன் கார்பன் உமிழ்வைச் சேமிக்கும். ஏற்கனவே உலகெங்கிலும் உள்ள பல ரோட்டரி சங்கங்கள் சூரிய ஆற்றல் திட்டங்களை மேற்கொண்டுள்ளன என்பதை அறிவோம், ஆனால் ரோட்டேரியர்கள் செய்யும் இந்த வேலையின் அளவு தெரியாது. எனவே சோலார் பேனல்களைப் பயன்படுத்தி திட்டங்களைச் செய்த சங்கங்கள் மற்றும் தங்கள் வணிக நிறுவனங்கள் அல்லது வீடுகளில் சோலார் பேனல்களைப் பயன்படுத்தும் ரோட்டேரியர்கள் தாங்கள் வைத்திருக்கும் சோலார் பேனல்களின் விவரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" என்கிறார் ESRAG - தெற்கு ஆசியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இயக்குனர் ஜெய்தீப் மாளவியா.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதில் இந்தியா விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது, குறிப்பாக சூரிய ஆற்றலில். தற்போது, சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகளவில் சூரிய சக்தியை உற்பத்தி செய்வதில் மூன்றாவது இடத்தில் உள்ளது. ஜப்பானின் 110 BU உடன் ஒப்பிடும்போது 2023 இல் இந்தியா 113 பில்லியன் யூனிட் (BU) சூரிய சக்தியை உருவாக்கியது. நமது வெப்பமண்டல தட்பவெப்பத்தில் ஏராளமான சூரிய ஒளி கிடைப்பதால், இந்த ஆற்றலை மாற்றும் எண்ணம் நம் நாட்டில் புதிதாக தோன்றவில்லை.



# சோலார் சவாலின் நுணுக்கங்கள்

*உங்கள் கூரை அல்லது வளாகத்தில் உள்ள உங்கள் சோலார் பேனல்கள் மூலம் நீங்கள் உருவாக்கும் மின்சாரம், உங்கள் நுகர்வுக்கு ஏற்ப சரிசெய்யப்படும் அரசாங்கத்தின் மின் கட்டமைப்பில் செலுத்தப்படுகிறது. நீங்கள் அதிகமாகப் பயன்படுத்தினால், நிகர வித்தியாசம் உங்களுக்கு விதிக்கப்படும், எனவே நிகர அளவீடு என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது.*

*இது தவிர, ESRAG-ன் இயக்குனர் ஜெய்தீப் மாளவியா, இந்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் பெரிய சோலார் பண்ணைகள்/பூங்காக்களும் உள்ளன என்று விளக்குகிறார். சீனா மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு, இந்தியா இப்போது மூன்றாவது அதிக சூரிய சக்தி உற்பத்தியாளராக உள்ளது, மேலும் பல ரோட்டேரியர்கள் சோலார் பண்ணைகளில் முதலீடு செய்துள்ளனர், அவற்றில் சில 100 மெகாவாட் உற்பத்தி செய்யும் அளவுக்கு பெரியவை.*

**ஒரு ரோட்டேரியன் சூரிய நாயகனாக மாற மூன்று வழிகள் உள்ளன -**

- *உங்கள் வீடு அல்லது வணிக வளாகங்ண்களில் சோலார் பேனல்களை நிறுவவும்.*
- *மற்றவர்களுக்கு - குடும்பம்/ நண்பர்கள், தனிநபர், சங்கம் அல்லது மாவட்ட அளவில் சோலார் பேனல்களை நிறுவவும்.*
- *ஏழ்மையானவர்கள் சூரிய சக்தியைப் பயன்படுத்த ரோட்டேரிய கூட்டாளர்களுக்கு நன்கொடை அளிக்கவும்.*

*பள்ளியின் மேற்கூரையின் மேல் சோலார் பேனல்கள் அமைத்தல், மின்சார வாகனம் சார்ஜ் செய்யும் இடங்கள், விவசாயம் பம்பிங், சமுதாய குடிநீர், தண்ணீர் வடிகட்டுதல், தையல் அலகுகள், சக்கிகள் (தானியம் அரைத்தல்), பால், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான குளிர் சேமிப்பு மற்றும் தடுப்பூசிகளை சேமித்து வைப்பது ஆகியவை திட்ட யோசனைகளில் அடங்கும்.*

*ஒவ்வொரு வாட் சூரிய சக்தியுடனும், நாம் பணத்தை மட்டும் சேமிப்பதில்லை; எதிர்கால சந்ததியினருக்கு வாழத்தகுந்த ஒரு உலகில் முதலீடு செய்கிறோம்.''*

தெற்காசியாவில் உள்ள பல ரோட்டேரியர்கள் ஏற்கனவே சோலார் பேனல்களை நிறுவி யுள்ளதாக மாளவியா கூறுகிறார். சங்க திட்டங்களில், அவர்களது வீடுகள் அல்லது அலுவலகங்களில் அல்லது CSR நிதியுதவியுடன் கூடிய முயற்சிகள் மூலமாகவும் அத்தகைய நிறுவல்களை செய்த ரோட்டேரியர்களை *www. rotarysolarinitiative.com* என்ற இணையதளத்தில் கிடைக்கும் எளிய, பயனர் நட்பு படிவத்தில் விவரங்களை நிரப்புமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் கூறுகிறார். நிறுவப்பட்ட சூரிய ஆற்றல் அமைப்பின் திறன், பேனல்களின் எண்ணிக்கை, சங்கம் மற்றும் RI மாவட்டத்தின் பெயர் மற்றும் எண் மற்றும் மின்னஞ்சல் ஐடி ஆகியவை ளளளதேவைப்படும் அடிப்படைத் தகவல்.

இதுவரை தெற்காசியாவில் நிறுவப்பட்டுள்ள கிட்டத்தட்ட 25,000 பேனல்களின் விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்றார். “சேலத்தைச் சேர்ந்த ஒரு ரோட்டேரியர், சம்பந்தன் ஸ்பின்னிங் மில்லின் S தேவராஜன், 10,000 சோலார் பேனல்களை பதிவு செய்து இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார், இது MSPCயில் ஒரு ரோட்டேரியரிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான பேனல்கள்.''



சூரிய சக்தியைப் பயன் படுத்துவது வணிக ரீதியாக சாத்தியமானது மற்றும் விவேகமானது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டும் அவர், சிறிய மற்றும் பெரிய பண்ணைகளில் விவசாயத்தில் பம்பிங் அமைப்புகளை இயக்க சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவதில் பெரும் வாய்ப்பு உள்ளது என்று கூறுகிறார். “டீசலுக்குப் பதிலாக, நமது விவசாயிகள் சூரிய சக்தியை எரிபொருளாகப் பயன்படுத்தலாம். குசும் சோலார் பேனல் யோஜனா எனப்படும் அரசு திட்டத்தில் இருந்து அவர்கள் பயனடையலாம், இதன் கீழ் விவசாயிகள் சூரிய ஆற்றல் அமைப்புகளை அமைப்பதற்கு 60 சதவீதம் வரை மானியம் பெறுகிறார்கள்,'' என்றார்.■




**இடமிருந்து:** PRIDs *மகேஷ் கோட்பாகி மற்றும் மனோஜ் தேசாய்,* RID *அனிருதா ராய்சௌத்ரி,* PRIP *சேகர் மேத்தா,* RIDE M *முருகானந்தம், சுமதி, உமா,* RIDE K P *நாகேஷ்,* PRIP K R *ரவீந்திரன்,* RID *ராஜு சுப்பிரமணியன்,* PRID C *பாஸ்கர், நீலாவதி மற்றும்* PDG P *கோபாலகிருஷ்ணன் திருச்சியில் நடந்த பாராட்டு விழாவில்.*

# உள்வரும் இயக்குனர்களுக்கு வரவேற்பு

ஜெய்ஸ்ரீ மற்றும்
V முத்துகுமரன்

நாகேஷில் நாம் ஒரு வெற்றியாளரைக் கொண்டுள்ளோம் – 1,725 புதிய உறுப்பினர்கள், 52 புதிய சங்கங்கள், 160 ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் TRF-க்கு 2.2 மில்லியன் பங்களிப்பு – வியக்கத்தக்க சாதனை” என்று RID 3191 மற்றும் 3192-ன் உள்வரும் RI இயக்குனர்கள் K P நாகேஷ் மற்றும் M முருகானந்தம் ஆகியோரை பாராட்டுவதற்காக பெங்களூருவில் நடந்த கூட்டத்தில் PRIP K R ரவீந்திரன் கூறினார். 2015–16ஆம் ஆண்டில் RID 3190-ன் DG-ஆக RIDE நாகேஷ் செய்த சாதனையை அவர் நினைவு கூர்ந்தார். உறுப்பினர் சேர்க்கை மற்றும் TRF பங்களிப்பில் மாவட்டம் உலக அளவில் முதலிடத்தை பிடித்த அந்த ஆண்டில் ரவீந்திரன் RI தலைவராக இருந்தார்.

ரவீந்திரன் தனது சொந்த பயணத்தின் நுண்ணறிவைப் பகிர்ந்து கொண்டு, புதிய இயக்குனர்களுக்கு ஒரு வழிகாட்டு தலையும் வழங்கினார். “நீங்கள் இருவரும் வாரியத்தில் இந்தியாவிற்கும், உலகில் வாரியத்திற்கும் சிறந்த தூதர்களாக இருக்க முடியும். நீங்கள் இந்த நாட்டை பெருமைப்படுத்த விரும்பினால், அங்கு சிறப்பாக செயல்படுங்கள். ரோட்டரியின் நிலப்பரப்பில் ஆசியா ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது,



விமர்சனங்களை எதிர்கொண்ட போதிலும், அவர் உறவுகளின் முக்கியத்துவத்தைப் பேணினார், ஒரு மதிய உணவின் போது நடந்த உரையாடல் சிக்கலை எவ்வாறு தீர்த்தது என்பதை விவரித்தார். ‘‘சில நேரங்களில் நீங்கள் ஒரு பிரச்சினையில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருக்கும், ஆனால் அது உறவுகளில் தலையிடக்கூடாது'' என்று அவர் அறிவுறுத்தினார்.

RI இயக்குனர் ராஜு சுப்ரமணியன், பெங்களூரு ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டின் தலைவராக நாகேஷின் அசைக்க முடியாத ஆதரவை எடுத்துரைத்து, அவருடன் பணிபுரிந்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். ‘‘அவரிடமிருந்து ஒருபோதும் முடியாது என்ற வார்த்தை வந்ததில்லை. நிகழ்வின் போது நாங்கள் விடுத்த அனைத்து கோரிக்கைகளுக்கும், அவர் எப்போதும் அது செய்யப்படும் என்று பதிலளித்தார்.'' ரோட்டரியின் நெறிமுறைகளை நிலைநிறுத்த, ‘‘எப்பொழுதும் நிதி வெளிப்படைத்தன்மை மற்றும்

40 சதவீத உறுப் பினர்களையும், TRF பங்களிப்பில் முன்னணி மாவட்டங்களில் பாதியையும் பங்களிக்கிறது'' என்று அவர் வலியுறுத்தினார்.

தனது வழிகாட்டியான PRIP ராஜேந்திர சாபூவுடன் நடந்த உரையாடலை நினைவு கூர்ந்த ரவீந்திரன், ‘‘RI இயக்குநராக நான் பரிந்துரைக்கப்பட்ட போது, ஒரு சிறிய நாட்டின் பிரதிநிதியாக இருந்ததை குறித்து நான் கவலைப் பட்டேன். ஆனால் ராஜா என்னிடம், ‘நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதை வைத்து உங்களை மதிப்பிட மாட்டார்கள். வாரியத்தில் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதை வைத்தே உங்கள் நாட்டை மதிப்பிடுவார்கள்.' இதுதான் இப்போது நீங்கள் இருவரும் சுமக்கும் பொறுப்பு,'' என்றார்.

சில அனுபவமிக்க அறிவுரைகளுடன் தொடர்ந்து அவர் கூறினார்: ‘‘தலைமைத்துவத்துக்கும் தலைவருக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. ஒரு தலைவர் மிக உயர்ந்த பதவியை வகிக்கலாம், ஆனால் மற்றவர்கள் கடமைக்காக அல்லாமல் விருப்பத்துடன் பின்பற்றுவதுதான் தலைமைத்துவம். நீங்கள் சர்ச்சையான பகுதிகளை எதிர்கொள்வீர்கள், நீங்கள் எந்தப் பாதையைத் தேர்வு செய்தாலும், விமர்சனத்திற்கு உள்ளாவீர்கள். துதி விரைந்து மறையும்; மரியாதை நீடித்து இருக்கும். உங்கள் நம்பிக்கைகள், வரலாறு அல்லது நற்சான்றிதழ்கள் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.''

RI இயக்குநராக, RI நியமனங்களுக்காக ஒரு மாவட்டத்தில் மூன்றாண்டுகள் தடை விதிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையைத் தொடர்புபடுத்தி, ஆரோக்கியமான விதத்தில் உடன்படாமல் இருப்பதைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். கடுமையான



ஒருமைப்பாட்டைக் கடைப் பிடிக்கவும். அதுதான் நம் நாட்டில் ரோட்டரியின் எதிர்காலத்தை நிலைநிறுத்தும்'' என RIDE-களையும் அவர் வலியுறுத்தினார்.

RID அனிருதா ராய்சௌத்ரி, சிக்கலான சவால்களுக்கு அபாரமான முடிவுகளுடன் தீர்வு வழங்கியதற்காக நாகேஷைப் பாராட்டினார். TRF அறங்காவலர் பரத் பாண்டியா, ஒரு வீடியோ செய்தியில், புதிய இயக்குநர்கள் தங்கள் வாய்ப்புகளை நியாயப்படுத்தவும், சிறந்த ரோட்டரிக் காக பணியாற்றவும் ஊக்குவித்தார்.

PRIP சேகர் மேத்தா, இரண்டு RIDE-க்களுக்கும் தனது பாராட்டுக் களை வழங்கி, ''நீங்கள் அவர்களை வழிநடத்துகிறீர்கள் என்று மக்கள்



RIDE *நாகேஷ், உமா.*

மகிழ்ச்சியடையும் போது, அதுவே உங்கள் நல்லெண்ணமும், நீங்கள் சம்பாதித்த லாபமும் ஆகும். நீங்களும் முருகானந்தமும் எங்களை உயர்ந்த மட்டத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கலவையாக இருக்குறீர்கள். உங்கள் இருவரின் தலைமையிலும் பெரிய விஷயங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.''

மண்டலம் 5க்கு ரோட்டரி ஒருங்கிணைப்பாளராக இருந்த போது, DG ஆக இருந்த நாகேஷுடன் தன் தொடர்பை PRID C பாஸ்கர் நினைவு கூர்ந்தார். ''மற்றவர்கள் சாத்தியமற்றது என்று நினைக்கும் இலக்குகளை நாகேஷ் தனக்கு தானே அமைத்துக் கொண்டார். அவர் ஒரு புதிய உறுப்பினர் உத்தியை உருவாக்கினார் - வளர பிரிக்கவும், பிரிக்க வளரவும்'' இது மாவட்டங்களை பிரிக்க வழி வகுத்தது. வரவிருக்கும் இரு இயக்குனர்களின் ஆற்றல், வளம் மற்றும் லட்சியத்தையும் அவர் பாராட்டினார். ''அவர்களது தலைமையின் கீழ், ரோட்டரி உலகம் நம்மை திரும்பி பார்க்க வைக்கும் மிகப்பெரிய சீர்திருத்தங்களைக் காண்போம்'' என்று அவர் கூறினார். நாகேஷ் மற்றும் முருகானந்தம் ஆகியோர் மாவட்ட கவர்னர்களாக இருந்த காலத்தில் RI இயக்குநராகப் பணியாற்றிய PRID மனோஜ் தேசாய் அவர்கள் புதிய பொறுப்புகளை ஏற்றதைக் கண்டு பெருமிதம் கொண்டார். PRID மகேஷ் கோட்பாகி, ''நாம் மேலும் வளர அனுமதிக்க பிராந்திய மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்'' என்று உள்வரும் இயக்குனர்களை வலியுறுத்தினார். முருகானந்தம்

தனது உரையில் நாகேஷுக்கு தனது ஆதரவை உறுதியளித்தார் மற்றும் வளர்ச்சியுடன் உறுப்பினர் தக்கவைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். ''ரோட்டரியை விட்டு வெளியேறும் உறுப்பினர்கள் ரோட்டரியின் பொது உருவத்துக்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட வேண்டும்.'' இரண்டு உள்வரும் தலைவர்கள் வடிவமைத்த ''12-புள்ளி' திட்டங்களில் ஒன்றை அவர் விளக்கினர் - 1:2:3 சூத்திரம். ''ஒவ்வொரு ரோட்டேரியரும் 2 ரோட்டராக்டர்கள் மற்றும் 3 இன்டராக் டர்களை கொண்டு வருவதை உறுதி செய்ய வேண்டும். இதனால் அடுத்த 5–6 தசாப்தங்களுக்கு நம் ரோட்டரி சக்கரம் சுழல்வதை காணலாம்.''

நாகேஷ், தனது பதிலில், ''30 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ரோட்டரியை அறிமுகப்படுத்திய'' Rtn ஜெயக்குமார் மற்றும் அவரது வழி காட்டியான PDG யோகானந்தாவுக்கு நன்றி தெரிவித்தார். உறுப்பினர் வளர்ச்சி மற்றும் TRF வழங்குவ தற்கான தனது திட்டங்களை அவர் விளக்கினார். ''DGயாக நான் 52 வாரங்களில் 52 புதிய சங்கங்களைத் திட்டமிட்டேன். இப்போது இயக்குனராக நான் ஒரு வருடத்தில் 365 சங்கங்களை பட்டயப்படுத்து வதையும், TRF பங்களிப்பை $100 மில்லியனாக உயர்த்துவதையும், தற்போதைய CSR பங்களிப்புகளை இரட்டிப்பாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளேன். நம் மூத்த தலைவர் களின் பாரம்பரியத்தை நாம் தொடருவோம்'' என்று அவர் கூறினார்.

நாகேஷின் குடும்பத்திடமிருந்து மனதை நெகிழ செய்யும் ஒரு காணொளி நிகழ்வை நிறைவு செய்தது. அதில் அவரது மகன், மகள் மற்றும் மனைவி ஆகியோர் தங்கள் பாராட்டுகளையும் ஆதரவையும் தெரிவித்தனர். ''ரோட்டரி எங்கள் குடும்பத்திற்கு உண்மையிலேயே பயனளித்துள்ளது, நாங்கள் அதற்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எங்கள் வீட்டின் கட்டிடக் கலைஞர், எங்கள் நாய்களுக்கான மருத்துவர், எனது கல்லூரியின் அறங்காவலர், எனது அலுவலக இடத்தின் உரிமையாளர் மற்றும் ஆடிட்டர் -

அனைவரும் ரோட்டேரியர்கள். அப்பா, நீங்கள் ஒரு சிறந்த வழிகாட்டி'' என்று அவரது மகன் தேஜஸ் கூறினார். அவரது மகள் நிதி மேலும் கூறுகையில், ''அவரது மகள் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். அவருடைய ஞானம் என்னை எண்ணற்ற வழிகளில் வடிவமைத்துள்ளது.'' வரவிருக்கும் புதிய சவால்களை எதிர்கொள்ளும் நாகேஷின் திறமையில் அவரது மனைவி உமா நம்பிக்கை தெரிவித்தார்.




### திருச்சியில் பாராட்டு விழா

திருச்சியில் நடைபெற்ற RIDE முருகானந்தம் அவர்களின் பாராட்டு விழாவில் பேசுகையில், ''தலைமைத்துவம் என்பது பெரும்பான்மை கருத்துக்களுக்கு தலை வணங்குவதற்குப் பதிலாக, உரிமையை நிலை நிறுத்துவதற்கான தைரியம் கொண்டிருப்பதும் மற்றும் ஒருவரின் மதிப்புகள் மற்றும் ஒருமைப்பாட்டிற்கு உண்மையாக இருப்பதாகும்'' என PRIP ரவீந்திரன் கூறினார்.

வெற்றி என்பது பொறுப்பான நிலையில் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதில் உள்ளது. ஒவ்வொரு வாய்ப்பும் பதவியும் ஒரு நிர்பந்தம், பொறுப்பு மற்றும் கடமையுடன் வருகின்றன என ரவீந்திரன் சுட்டிக் காட்டினார். RI வாரியத்தின் பொருளாளராக இருந்த தனது அனுபவத்தை மேற்கோள் காட்டி, அப்போதைய RI தலைவர், RI மாநாட்டிற்கு சுமார் 500 DGகளின் வருகைக்கு நிதியளிப்பதற்காக சங்கங்களில் இருந்து நிதி சேகரிக்க வேண்டும் என்று விரும்பியபோது, நான் பணிவுடன் உடன்படவில்லை'' மற்றும் குழு விவாதங்களில் கடினமான முடிவுகள் மற்றும் சவால்கள் உள்ளன என அவர் RIDE-களிடம் கூறினார்.



*RIDE M முருகானந்தம் மற்றும் சுமதி.*

RID அனிருதா ராய்சௌத்ரி, சில ஆண்டுகளுக்கு முன்பு முருகானந்தத்துடன் அமெரிக்காவிலிருந்து திரும்பிய விமானப் பயணத்தை நினைவு கூர்ந்தபோது, ''அவருடன் நீண்ட, தீவிரமான உரையாடலில் ஈடுபட்டேன். அவரது சிந்தனை செயல்முறையால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன், ஒரு நாள் அவர் ரோட்டரி இந்தியாவை வழிநடத்துவார் என்று உணர்ந்தேன், அது இப்போது உண்மையாகி விட்டது.'' முருகானந்தம் DGயாக (2016–17) பல பெரிய திட்டங்களில் அமைதியாக, ஆனால் திறமையாக பணியாற்றினார், மேலும் ''ரோட்டராக்டராக அவர் போலியோ பிளஸ் இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டுகளைப் பெற்றார்'' என்றார். அவரது ரோட்ராக்ட் பணியின் போது அவரால் அமைக்கப்பட்ட ஒரு தொழிற்கல்வி மையம் இன்னும் செயலில் உள்ளது என்று RID குறிப்பிட்டார்.

RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் கூறுகையில், 2025–27 முதல் RI வாரியத்தில் நாகேஷ் மற்றும் முருகானந்தம் இருப்பது ரோட்டரியை பெரிய பரிமாணங்களுக்கு கொண்டு செல்வதில் இந்தியாவின் விடாமுயற்சியையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்தும் என்றார். ''அவர்களின் 10-புள்ளி செயல்பாட்டின் சாசனத்தைக் கேட்டு எனக்கு மெய்சிலிர்த்தது. இந்த இரண்டு தலைவர்களும் ஒரு வளமான பாரம்பரியத்தை விட்டுச் செல்ல வல்லவர்கள், ஏனெனில் அவர்கள் தோல்விக்கு பயப்படாமல்

கவனம் செலுத்துகிறார்கள்,'' என்று PRIP சேகர் மேத்தா கூறினார். முருகானந்தம் ஆளுநராக இருந்த போது செய்த எட்டு கின்னஸ் சாதனைகளை நினைவுகூர்ந்த PRID பாஸ்கர், "ரோட்டரியின் உண்மையான தூண்களான சங்கங்களில் கவனம் செலுத்தாமல், மாவட்டத்தை மையமாகக் கொண்டு செயல் படுகிறோம்'' என்று எச்சரிக்கையுடன் ஒரு குறிப்பைச் சேர்த்தார். RI இயக்குநர்கள், இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களை உறுப்பினர் களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஊக்குவித்து, அதிகாரம் அளிக்க வேண்டும், என்றார்.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் முருகானந்தம் போன்ற பன்முகத் தலைவர்களால் தான் தமிழ்நாட்டில் உள்ள RI மாவட்டங்கள் மற்றும் சங்கங்களின் வளர்ச்சி (மண்டலம் 5) அருமையாக உள்ளது என்று PRID மகேஷ் கோட்பாகி கூறினார். மனத்தாழ்மையும், பெரிய சாதனைகளை செய்ய அயராது உழைப்பதும் அவரது தனிச் சிறப்புகளாகும் என்று PRID மனோஜ் தேசாய் கூறினார். TRF அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும் PRID கமல் சங்வி ஆகியோர் வீடியோ இணைப்புகள் மூலம் பாராட்டுகளை வழங்கினர்.

RIDE நாகேஷ் தனது உரையில், "எங்கள் பதவிக்கு அதிக பொறுப்பு உள்ளது என்பதை நாங்கள் நன்கு புரிந்துகொண்டுள் ளோம்'' என்றார். தனது பெற்றோர், மனைவி சுமதி மற்றும் பிள்ளைகளுக்கு நன்றி தெரிவித்த முருகானந்தம், ரோட்டரியில் பணிபுரிந்த காலத்தில் சாமுவேல் கிறிஸ்துதாஸ், PDGக்கள் D வள்ளியப்பன் மற்றும் PSD சந்திரசேகரன் ஆகிய மூன்று ரோட்டரியர்களால் தான் வழிநடத்தப்பட்டதாக அவர் கூறினார். 16 வயதில் ரோட்டராக்டராக ரோட்டரியில் சேர்ந்த அவர், அவரது காலத்தின் இளைய கவர்னர்களில் ஒருவராக RC BHEL சிட்டி திருச்சிராப் பள்ளியின் பட்டயத் தலைவராக இருந்தார்.

ரோட்டராக்ட்டுக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு ரோட்டேரியர்களை வலியுறுத்திய அவர், "74 சதவீத ரோட்டரி சங்கங்கள் ரோட்டராக்ட் சங்கத்திற்கு நிதியுதவி செய்ய வில்லை, 79 சதவீதம் பேர் இண்டராக்டிற்கு எதுவும் செய்ய வில்லை, 80 சதவீதம் பேர் RCC-க்கு ஸ்பான்சர் செய்யவில்லை'' என்றார். முருகானந்தம் கூறுகையில், ரோட்டரி இந்தியா தலைமைத்துவ மாநாடு சென்னையில் ஆகஸ்ட் 2025-ல் நடைபெறும் மற்றும் மண்டல நிறுவனம் இலங்கையில் நடைபெறும் என கூறினார்.



முன்னதாக, அவரது சொந்த சங்கமான RC BHEL சிட்டி திருச்சிராப்பள்ளியால் மதுரையில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் 2981, 2982, 3203, 3212 மற்றும் 3233 ஆகிய RIDகளின் தலைவர்களான PRID C பாஸ்கர், DG R ராஜா கோவிந்தசாமி, IPDG R ஆனந்த ஜோதி, DGE J கார்த்திக், DGN R சுப்ரமணி மற்றும் மற்ற தலைவர்கள் முருகானந்தம் மற்றும் சுமதியை வாழ்த்தினர்.■



PRIP *சேகர் மேத்தாவுடன்* RIDE *முருகானந்தம் மற்றும் சுமதி.*




*RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் மைதிலி நட்கர்னி மற்றும் அவரது கணவர் ராகுல் நிதியுதவியுடன் ஒரு மடிக்கணினியை பார்வையற்ற தனிஷ் கினால்கருக்கு கொடுக்கிறார். சங்கத்தலைவர் தன்வி அத்ரேயா சாவந்த் வலமிருந்து இரண்டாவதாக உள்ளார்.*

# இரண்டு அன்புச் செயல்கள்

ரோட்டரி செய்திக்குழு

சமீபத்தில், இரக்கம் பல வடிவங்களில் வருகிறது, தனி நபர்களின் அன்பான, தாராளமான சிறு செயல்களில் வெளிப்படுகிறது என்பதை பனாஜி ரிவேரா, RI மாவட்டம் 3170, ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் நிரூபித்துள்ளனர். இந்தச் சங்கத்தின் நிறுவல் நாளன்று, தனிஷ் கினால்கர் என்ற பார்வைக் குறைபாடுள்ள இளைஞருக்குப் புதிய நம்பிக்கை பிறந்தது. இவர் தன்னுடைய உடல் ஊனத்தையும் பொருட்படுத்தாமல் 10-ம் வகுப்புப் பொதுத் தேர்வில் 84% மதிப்பெண் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இவர் மேற்படிப்புக்குச் செல்லவேண்டும் என்று விரும்பியபோது, இவருடைய கல்வியில் உதவக்கூடிய ஒரு மடிக்கணினி கண்டிப்பாகத் தேவை என்பது தெரியவந்தது. உடனடியாக, சங்க உறுப்பினர் மைதிலி நட்கர்னியும் அவருடைய துணைவர் ராகுலும் சுமார் ரூ.28,000 மதிப்புள்ள ஒரு மடிக்கணினியை வாங்க உதவினார்கள்.

இன்னோர் இரக்கச் செயல், சுருதி, சாக்ஷி, சமர்த் மட்கைகர் என்ற மூன்று சிறு குழந்தைகள் ஆதரவற்றவர்களான நேரத்தில், அவர்களுடைய வருங்காலம் இருண்டு தோன்றிய நேரத்தில், இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ஜயேஷ் ராய்கர் ஓராண்டுக்கு இந்தக் குழந்தைகளுடைய கல்வியை ஆதரிக்க முன்வந்தார். இவர் ரூ.1.2 லட்சம் நன்கொடையை அறிவித்தார். இதன்மூலம், இந்தக் குழந்தைகளின் கல்விக் கட்டணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகளுக்கென மாதந்தோறும் ரூ.10,000 கிடைக்கிறது.■



*சங்க உறுப்பினர் ஜெயேஷ் ராய்கர் உடன்பிறப்புகள் சாக்ஷி, சமர்த் மற்றும் ஸ்ருதி ஆகியோருடன்.*

# நீர் கல்வியில் தலைவர்களை உருவாக்குதல்

கல்பனா கவுண்ட்



IHE டெல்ஃப் இன்ஸ்டிடியூட் ஃபார் வாட்டர் எஜுகேஷன்–ல் 2021–23 MSc வகுப்பு மாணவர்கள்.

ரோட்டரி அறக்கட்டளை மற்றும் UNESCO IHE இன்ஸ்டிடியூட் ஃபார் வாட்டர் எஜுகேஷன் ஆகியவை இணைந்து தண்ணீர் மற்றும் சுகாதார நிபுணர்களுக்கு உதவித்தொகைகளை வழங்குகின்றன. இந்த உதவித் தொகை வளரும் நாடுகளில் உள்ள உலகின் நீர் மற்றும் சுகாதார சவால்களுக்கு தீர்வுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் உலகெங்கிலும் உள்ள இளம் தொழில் வல்லுநர்களுக்கு நெதர்லாந்தின் IHE டெல்ஃப்ட்டில் நீர் மற்றும் நிலையான மேம்பாட்டில் முதுகலைப் பட்டம் படிக்க வழங்கப்படுகிறது. 2012 முதல், ரோட்டரி அறக்கட்டளை 31 நாடுகளைச் சேர்ந்த 96 மாணவர்களுக்கு 165-க்கும் மேற்பட்ட உதவித் தொகைகளை வழங்கியுள்ளது, இதன் மொத்த மதிப்பு $5 மில்லியனுக்கும் அதிகமாகும்.

கோவிட் தொற்றுநோய் பரவிய காலத்தில்தான், அஸ்ஸாமின் குவஹாத்தியைச் சேர்ந்த சஜிப் மனாஷ் மஹந்தா, புது தில்லியில் உள்ள TERI ஸ்கூல் ஆஃப் அட்வான்ஸ்டு ஸ்டடீஸில் சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் வள மேலாண்மையில் MSc பட்டம் பெற்றவர், இந்த மதிப்புமிக்க படிப்பில் சேர விருப்பம் தெரிவித்தார். RID 3240-ன் DG மற்றும் பிற மாவட்ட அதிகாரிகளுடன் ஒரு ஆன்லைன் நேர்காணல் ஏற்பாடு செய்யப்பட்டது, அவர் RC திப்ருகார் மூலம் பரிந்துரைக்கப்பட்ட மாவட்டத்தின் வேட்பாளராக அங்கீகரிக்கப்பட்டார். TRF மற்றும் ரோட்டரி மாவட்டங்கள் 1600 மற்றும் 3240 ஆகியவற்றின் தாராள ஆதரவுடனான உலகளாவிய மானியம் அவரை IHE-ல் சேர அனுமதித்தது மட்டுமல்லாமல், நீர் துறையில் ஒரு பெரிய கூட்டாண்மையின் ஒரு பகுதியாக இருக்கும் வாய்ப்பையும் அவருக்கு வழங்கியது.

சஜிப் தண்ணீர் சேவைகள் பற்றிய ஆய்வுக்கு ஈர்க்கப்பட்டார், தண்ணீர் அணுகல் என்பது இன்று உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும் என்று உறுதியாக நம்பினார். நெதர்லாந்தில் உள்ள அழகிய நகரமான



டெல்ஃப்டில் தான் அவர் 2021-ல் ஒரு உருமாறும் கல்விப் பயணத்தைத் தொடங்கினார், அதை அவர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றிகரமாக முடித்தார்.

பட்டப்படிப்பின் ஆரம்ப கட்டத்தில், நெதர்லாந்தின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரம் மற்றும் அவர்கள் தொடர்பு கொண்ட ரோட்டரி குடும்பத்துடன் மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. மாணவர்கள் IHE டெல்ஃப்ட் இல் இந்த உதவித் தொகைக்கான நிதி திரட்டும் நிகழ்வுகளிலும் மற்றும் நெதர்லாந்து அல்லது அருகிலுள்ள நாடுகளில் உள்ள ரோட்டரி மாவட்டங்கள் ஏதேனும் ஒன்றில் நடைபெறும் மாவட்ட நிகழ்வுகளிலும் பங்கேற்றனர். IHE டெல்ஃப்ட்டுக்கு வந்ததும், சஜிப் ரோட்டரியின் ஆலோசகர்களான நீக் ஜாங்க்மேன் மற்றும் டிடியாவை சந்தித்தார், அவர்கள் அவருக்கு ஒரு குடும்பம் போல் ஆனார்கள். அவர் ஜாங்க்மேனுடன் பல ரோட்டரி நிகழ்வுகளுக்குச் சென்றார் மற்றும் இந்தியாவிலிருந்து IHE-க்கு வந்த தனது பயணத்தைப் பகிர்ந்து கொண்டார்.

RC-க்கள் ரிஜ்ஸ்விஜ்க், வூர்பர்க் மற்றும் கிரான்வென்ஹேஜ் ஓஸ்ட் என நெதர்லாந்தில் உள்ள பல ரோட்டரி சங்கங்களின் கூட்டங்களுக்கும் மற்றும் பெல்ஜியத்தில் உள்ள சங்கங்களின் கூட்டங் களுக்கும் அவரை PDG பாஸ் ஹென்ட்ரிக்சன் அழைத்துச் சென்றார்.



அவரது Msc ஆய்வறிக்கை யானது, நெதர்லாந்தில் உள்ள நீர் ஆபரேட்டரான விடென்ஸ் எவிட்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் தென்கிழக்கு ஆப்பிரிக்காவின் மலாவியில் உள்ள நீர் வாரியங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை



*சிங்கப்பூரில் நடந்த RI கன்வென்ஷனில் TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி, அவரது மனைவி கேயுடன் PDG கல்பனா கவுண்ட் (வலமிருந்து இரண்டாவது).*

ஆராய்வது மற்றும் நீர் ஆபரேட்டர் கூட்டாண்மைகளில் கவனம் செலுத்தியது. அவரது ஆராய்ச்சியின் மூலம், கூட்டாண்மைகளின் செயல்திறன் மற்றும் வெற்றியில் பரஸ்பரம் ஒரு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது, ஆனால் அது தெளிவான, நேரியல் மதிப்பீட்டு செயல்முறையைக் கொண்டிருக்கவில்லை. ஆழ்ந்த நுண்ணறிவைப் பெற, சஜிப் இரண்டு மாதங்கள் மலாவியில் தங்கி தரவுகளை சேகரித்து மற்றும் நேர்காணல்களை நடத்தி தனது ஆராய்ச்சியை மேற்கொண்டார். இந்த அனுபவம் அவரது ஆய்வறிக்கையை செழுமைப்படுத்தியது மற்றும் நாட்டில் நீர் அணுகல் சவால்கள் பற்றிய ஆழமான புரிதலை வழங்கியது. இது மலாவியில் உள்ள உள்ளூர் மக்களுடன் வாழ்நாள் முழுவதும் நட்பை ஏற்படுத்தவும் அவருக்கு உதவியது.

பட்டப்படிப்பைத் தொடர்ந்து, அவர் நெதர்லாந்தின் ஹேக் நகரைத்




*மலாவி லிலோங்வேயில் உள்ள பிராந்திய நீர் வாரிய அலுவலகத்தில் சஜிப் மஹந்தா.*



*திருவாரூரில் WASTE NL, நெதர்லாந்து சார்பில் களப்பணியில் மஹந்தா.*

தலைமையிடமாகக் கொண்ட NGOவான வேஸ்ட் NL உடன் தனது பயணத்தைத் தொடங்கினார். வேஸ்ட் NL-ல், அவரது பொறுப்புகள் தாக்க மதிப்பீட்டு ஆராய்ச்சி முயற்சி களை வழிநடத்துதல், திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதைச் சுற்றியே இருந்தன. தற்போது, அவர் பினிஷ் மான்டியல் திட்டத்தில் ஈடுபட்டுள்ளார், அது ஒவ்வொரு தனிநபரும் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் சுகாதாரத்தை அணுகக்கூடிய மற்றும் நிதி ரீதியாக அதிகாரம் பெற்ற ஒரு உலகத்தை உருவாக்க பாடுபடும் ஒரு லட்சிய முயற்சியாகும். 2009-ல் தொடங்கப் பட்டதிலிருந்து, இந்த திட்டம் குறிப்பிடத்தக்க சாதனைகளுடன் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக உள்ளது. இன்றுவரை, இது 1.5 மில்லியன் கழிப்பறைகளைக் கட்டுவதற்கு உதவியுள்ளது, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் உள்ள எட்டு மில்லியன் நபர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதாரத்தின் நன்மைகளை விரிவுபடுத்தியுள்ளது. மேலும், இந்த முயற்சிகள் 16 மில்லியன் வேலை நாட்களை உருவாக்கி, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றை உருவாக்கியது.

நெதர்லாந்தில் வளர்க்கப்பட்ட அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் செல்வத்தைப் பயன்படுத்தி, சஜிப் இந்தியாவில் கள ஆய்வுகளை மேற்கொண்டார், அங்கு அவர் திட்டத்தின் வெற்றிகளை உறுதியான விளைவுகளாக மாற்ற முயற்சி செய்கிறார். இந்தியாவில் உள்ள சமூகங்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களுக்கு ஏற்ப புதுமையான தீர்வுகள் மற்றும் உத்திகளை செயல்படுத்துவதற்கான முக்கியமான தளங்களாக இந்த கள ஆய்வுகள் செயல்படுகின்றன. கூடுதலாக, அவரது தொழில்முறை பயணம் அவரை உலகின் பல்வேறு மூலைகளுக்கு அழைத்துச் சென்றது, கென்யாவிற்கு கள விஜயங்கள் உட்பட. இந்த அனுபவங்கள் விலை மதிப்பற்ற நுண்ணறிவை வழங்கியுள்ளன, உள்ளூர் சூழலைப் பற்றிய அவரது புரிதலை வளப்படுத்தியுள்ளன, மேலும் உலகளாவிய அளவில் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அவரது உறுதிப்பாட்டை வலுப் படுத்தியுள்ளன.

அந்த இளம் ரோட்டரி மாணவர் நீர் மேலாண்மை களத்தில் பங்களிப்பதற்கும் மற்றும் இந்த விலைமதிப்பற்ற வளத்திற்கு நல்ல அணுகல் இல்லாதவர்களுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்து வதற்கும் தயாராக உள்ளார். நெதர்லாந்தின் ரோட்டேரியர்களிட மிருந்து பெற்ற அறிவு, நட்பு, வழிகாட்டுதல் மற்றும் கவனிப்பு ஆகியவை அவரது இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும், மேலும் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதில் உறுதியுடனும் இரக்கத்துடனும் முன்னேற அவரைத் தூண்டுகிறது.

ஒரு ரோட்டேரியன் என்ற முறையில், IHE டெல்ஃப்ட் நெதர்லாந்தில் எங்களின் அற்புதமான உதவித்தொகை திட்டத்தின் மூலம் ஒரு இளம் நீர் தொழில் வல்லுநரின் கனவை நனவாக்க கிடைத்த வாய்ப்புக்கு நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

(எழுத்தாளர் RID 3240-ன் முன்னாள் ஆளுநர்)

மேலும் விவரங்களுக்கு:
https://www.un-ihe.org/education/master-programmes/rotary-scholarships-water-and-sanitation-professionals

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு



**டயாலிசிஸ் திட்டம்**
RID 5810
*உறுப்பினர்கள் கோட்டயத்தில் டயாலிசிஸ் திட்டத்தைப் பார்வையிட்டபோது.*

## டயாலிசிஸ் திட்டம்

கோட்டயத்தில் இரண்டு மருத்துவ மனைகளுக்கு $118,450 மதிப்புள்ள ஒரு மருத்துவ உதவி வண்டியையும் சிறுநீரக டயாலிசிஸ் கருவிகளையும் வழங்கின RC கோட்டயம் ஈஸ்ட், RID 3211, மற்றும் RC மெக்கின்னெ, டெக்ஸாஸ், RID 5810 இவற்றின் மூலம் 40க்கும் மேற்பட்ட ஏழைகள் பலன் பெறுவார்கள்.



**சக்கர நாற்காலி வழங்கல்**
*சங்க உறுப்பினர்கள் பயனாளிகளுடன்.*

## சக்கர நாற்காலி வழங்கல்

ரோட்டரி குவஹாத்தி லுயிட் அறக்கட்டளை ஆதரவுடன் 50 மாற்றுத் திறனாளிகளுக்குச் சக்கர நாற்காலிகளை வழங்கியது RC குவஹாத்தி லுயிட், RID 3240.



**மறுவாழ்வு பூங்கா**
IPDG R *முத்தையா பிள்ளை, சங்க உறுப்பினர்களுடன் மயோபதி இன்ஸ்டிடியூட்டில்.*

## மறுவாழ்வுப் பூங்கா

RC தின்னவேலி, RID 3212, RC லெக்சிங்டன் ஆஃப்டர் ஹவர்ஸ், RID 6740, USA, மற்றும் TRF இணைந்து, திருநெல்வேலி மயோபதி கல்வி அமைப்பில் சக்திமான் பூங்கா என்னும் தசை வளக்கேடு கொண்ட குழந்தைகளுக்கான மறுவாழ்வுப் பூங்கா ஒன்றை ரூ.64.18 லட்சம் செலவில் அமைத்துள்ளன.



**தலசீமியாப் பராமரிப்பு**
*சங்க உறுப்பினர்கள் DY பாட்டீல் மருத்துவ மனையில்.*

## தலசீமியாப் பராமரிப்பு

நவி மும்பை DY பாட்டீல் மருத்துவ மனைக்குத் தலசீமியாக் குறைபாட்டுச் சிகிச்சைக்கென வருகிற 35 குழந்தைகளுக்கு ரத்த வடிகட்டல் செயல்முறையை மகிழ்ச்சி அனுபவமாக ஆக்குவதற்கென ஒரு மகிழ்ச்சிப் பகுதியை உருவாக்கியது RC நவி மும்பை, RID 3141. ■



*கனேகௌடனஹள்ளி கிராமத்தில் சங்கத்தின் 50-வது மகிழ்ச்சி பள்ளியில் மாணவர்கள்.*

# பெங்களூரு ரோட்டரிக்கு 90 ஆண்டுகள்

V முத்துகுமரன்

RID 3192-க்கு உட்பட்ட பெங்களூரு ரோட்டரி சங்கம் கூட்டுறவிலும் சேவையிலும் தொய்வில்லாமல் சங்கமிக்கிறது. அதன் 300-க்கும் மேலான உறுப்பினர்கள், மெகா திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன் சங்கத்தின் 90-வது ஆண்டை மகிழ்ச்சியாக கொண்டாடு கின்றனர். 1934-ம் ஆண்டு ஜூலை மாதம் பட்டயப்படுத்தப்பட்ட இந்த சங்கம், தென்னிந்தியாவிலேயே இரண்டாவது பழமையான சங்கமாகும். மேலும் உறுப்பினர்கள் சேர்க்கையில் நான்காவது இடத்தில் உள்ளது. பல தசாப்தங்களாக மருத்துவம், கல்வி மற்றும் சமூக சேவை திட்டங்களை வழங்குவதற்கான மிகப்பெரிய கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

தொடக்கத்திலிருந்து மிகப்பெரிய சங்கமான பெங்களூரு ரோட்டரி சங்கம், ரூ.58 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, பெங்களூரு நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 40 லட்சத்துக்கும் மேலான மக்களின் மனதில் இடம்பிடித்துவிட்டது. மேலும் 17 மாவட்ட ஆளுநர்களை உருவாக்கியுள்ளது. மறைந்த கல்வியாளரும், தொழிலதிபருமான PRID பாண்டுரங்க செட்டி, இந்த சங்கத்தைச் சேர்ந்தவராக இருந்தவர். 1959-ம் ஆண்டிலிருந்து கர்நாடகத்தில் சேவை மனப்பான்மை கொண்ட ரோட்டேரியன்களுக்கு அவர் வழிகாட்டியாக இருந்தார். “மிகப்பெரிய, தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நான், ரோட்டரி வாழ்க்கையில் சரியான ஒரு சங்கத்தை தேர்ந்தெடுக்க முடியாமல் ஒருவித நெருக்கடியை சந்தித்தபோது, என்னை, தமது சங்கத்துக்கு வரவேற்று சேர்த்துக் கொண்டவர் செட்டி. தோழமையுடனும் அன்புடனும் என்னை அழைத்துக் கொண்டனர். நான் என் வீட்டில் இருப்பதைப் போலவே உணர்ந்தேன். பெங்களூரு ரோட்டரி சங்கம் என்பது மற்றொரு ரோட்டரி சங்கம் அல்ல, அது “பாஹுபலி” போன்ற ஒரு நிறுவனமாகும்” என்கிறார் DGN ரவிசங்கர் டகோஜு. இவர் ரோட்டரி உலகில் பிரபலமானவர் மட்டுமல்ல, இந்தியாவிலிருந்து TRF-க்கு ரூ.100 கோடி நன்கொடை அளித்த பெருநன்கொடையாளர்.

### பெயர் சொல்லும் திட்டங்கள்

1984-ல் 3-H மற்றும் இதர பொருத்தமான மானியங்கள்

மூலம் 1 லட்சம் டாலர் மதிப்பில் அமைக்கப்பட்டது பெங்களூர் ரோட்டரி TTK இரத்த வங்கி. ஒவ்வொரு ஆண்டும் 40,000 யூனிட் இரத்தம் சேகரித்து, அதை பதப்படுத்தி, பெரிய மருத்துவ மனைகளுக்கு விநியோகிக்கும் வகையில் அதிநவீன கருவிகளைக் கொண்டது. “நாங்கள் ஸ்டெம்செல் பதிவு, நோய்த்தடுப்பியல், குருதியியல், திசு வங்கி மற்றும் ஸ்டெம்செல் மாற்று அறுவைச் சிகிச்சைக்காக ஜெர்மனியின் DKMS உடன் இணைந்துள்ளோம். இதுவரை இரத்த வங்கிக்காக நாங்க ரூ.15 கோடி வரை செலவிட் டுள்ளோம்” என்றார் சங்கத்தின் முன்னாள் தலைவர் V S ரங்கா ராவ். இரத்த வங்கியை நடத்துவதற்கான செலவு மாதாந்திர வருவாய், CSR நிதியுதவி மற்றும் TTK குழுமத்தின் ஆதரவின் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

35 வயதுடைய பெங்களூரு ரோட்டரி வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, ஆரம்ப நிலை முதல் 10-ம் வகுப்பு வரை சுமார் 550 மாணவ, மாணவிகள் மற்றும் 30 ஆசிரியர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ரோட்டரிப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு பள்ளிச் சீருடைகள், ஷூக்கள், பாட புத்தகங்கள், புத்தகப்பை மற்றும் மதிய உணவு இலவசமாக வழங்கப் படுகிறது. இந்த பள்ளியை 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுடன் மேனிலைப் பள்ளியாக தரம் உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

“இந்தப் பள்ளியில் புதிய வகுப்புக்கு இடமளிக்க நாங்கள், ரூ.1 கோடி மதிப்பில் இரண்டு புதிய கட்டடங்களை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்” என்று சங்கத்தின் தலைவர் கௌரி ஓஸா மகிழ்ச்சி பொங்க கூறினார். கடந்த சில ஆண்டுகளில் தங்கள் சங்கம், மாநகராட்சி மற்றும் BBMP உடன் இணைந்து 40 பசுமைப் பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் இவற்றில் 48,000 மாணவர்கள் படித்து வருவதாகவும் கூறினார். “நன்கு அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் உள்ளாட்சி நிர்வாகம் அளித்த நிலத்தில் நாங்கள் பள்ளிகளை கட்டித்தந்துள்ளோம். ஒவ்வொரு பள்ளியும் தலா ரூ.45 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பள்ளிகளில் 7-ம் வகுப்பு வரை கல்வி வழங்கப்படுகிறது” என்று அவர் விளக்கினார்.

கடந்த 5–6 ஆண்டுகளில் சங்கம் 128 மகிழ்ச்சிப் பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளது. ரோட்டரியின் கற்பித்தல் முயற்சியின் மூலம் இத்திட்டத்துக்கு ரூ.3.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவை தவிர மாணவர்கள், மாணவி களுக்கான கழிப்பறைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் வகுப்பறைகளுக்குத் தேவையான பெஞ்சுகள், மேஜைகள், விளையாட்டு உபகரணங்கள், கட்ட்டங்கள் பழுது பார்ப்பு, குடிநீர் சுத்திகரிப்பு கருவி அமைப்பது, கைகழுவும் நிலையங்கள் அமைப்பது என பல்வேறு வசதிகளும் செய்துதரப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்க 81 அங்கன் வாடிகள் ரோட்டரி சங்கத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளன. புதிய சமையலறை, கழிப்பறைகள், மேஜைகள், பெஞ்சுகள், சிறிய பழுதுபார்ப்பு பணிகள் என ஒரு அங்கன்வாடிக்கு ரூ.2.2 லட்சம் செலவிடப்பட்டு சீரமைக்கப் பட்டுள்ளன என்றார் ரங்கா ராவ். இதன் மூலம் 15,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். “மேலும் அங்கன்வாடி களில் வேடிக்கையான கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள், மேஜைகள், நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. இது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தரும்” என்று கூறி புன்னகைக்கிறார் கௌரி.

### மருத்துவ சுகாதாரத் திட்டங்கள்

மருத்துவத் துறையில், 156 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பிரிட்ஜ், வாக்குவம் கிளீனர், வாஷிங் மெஷின் முதல் ஆக்ஸிஜன் சிலிண்டர், நோயாளிகளுக்கான படுக்கைகள், அறுவைச்சிகிச்சைக்குத் தேவையான விளக்குகள், நெபுலைசர்கள், ECG கருவிகள், டிஜிட்டல் ஸ்டெதாஸ்கோப், இரத்தக்



*ரோட்டரி ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்-ல் சங்கத் தலைவர் கௌரி ஓசாவுடன் உறுப்பினர்கள். (அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து): DGN ரவிசங்கர் டகோஜு, M C தினேஷ் மற்றும் செயலாளர் சோஹில் ஷா.*

கொதிப்பை அளவிடும் கருவிகள், நிர்வாக வசதிக்குத் தேவையான மடிக்கணினிகள், UPS கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும் ஆண்டுக்கு 20 லட்சம் நோயாளிகள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும் ரூ.2 லட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். SELCO மற்றும் ஷுனிடர் எலெக்டிரிக் ஆகிய நிறுவனங்களுடனான கூட்டு முயற்சியில், கிராமப்புறங்களில் உள்ள 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மருத்துவப் பிரிவில் 24 மணிநேரமும் மின்சாரம் கிடைக்கும் வகையில் ஒவ்வொரு மையத்திலும் தலா ரூ.3.5 லட்சம் மதிப்பில் சோலார் பேனல்கள் (சூரியசக்தி மின்வசதி) ரோட்டரி சங்கம் மூலம் நிறுவப்படும்.

இந்தியாவின் தகவல் தொழில் நுட்ப தலைநகராக இருக்கும் பெங்களூருவில் சிறுநீரக கோளாறால் பாதிக்கப்படுவோர் அதிகரித்து வரும் நிலையில், "நாங்கள் மருத்துவ மனைகள் மற்றும் பொது சுகாதார நிலையங்களுக்கு 50 டயாலிசிஸ் சிகிச்சை இயந்திரங்களை (தலா ரூ.8.5 லட்சம் மதிப்பில்) நன்கொடையாக வழங்கியுள்ளோம். அவை அனைத்தும் CSR நிதியுதவி மற்றும் சங்க உறுப்பினர்களின் நன்கொடைகள் மூலம் வழங்கப் பட்டுள்ளன என்றார் கௌரி. ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு கெங்கேரியில் உள்ள ராஜராஜேஸ்வரி மருத்துவமனையில் 27 டயாலிசிஸ் சிகிச்சை இயந்திரங்கள் நிறுவப்பட்டன. அங்கு சலுகை கட்டணத்தில் ஒவ்வொரு மாதமும் 800 சிறுநீரக நோயாளிகள் சிகிச்சை பெற்று பலனடைந்து வருகிறார்கள். சன்னசந்திராவில் உள்ள ரோட்டரி முத்தப்பா அட்டாவர் நினைவு மருத்துவமனையில் ஒவ்வொரு மாதமும் சுமார் 1,000 நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள். ரோட்டரி சங்கம் மற்றும் ராஜராஜேஸ்வரி மருத்துவமனை ஆதரவுடன் இது செயல்பட்டு வருகிறது. சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் 100 இதய அறுவைச்சிகிச்சைகள் நடத்த திட்டமிடப்பட்டு இதுவரை 60 இதய அறுவைச்சிகிச்சைகள் நடத்தப்பட்டுள்ளன. தகுதியான நோயாளிகளுக்கு ஒவ்வொரு அறுவைச்சிகிச்சைக்கும் ரூ.56,000 மானியம் வழங்கப்படுக்கிறது என்று ராவ் தெரிவித்தார்.

தென்னிந்தியாவின் மிகப்பெரிய தீவிர தீக்காயங்களுக்கான சிகிச்சை பிரிவு ஒன்று குயீன் விக்டோரியா மருத்துவமனையில் 26 படுக்கைகளும் செயல்பட்டு வருகிறது.

### பாலாறு நதிப்படுகை புனரமைப்பு

பாலாற்றின் மேல்படுகை உருவாகும் இடமான சிக்கபல்லாபூர் மாவட்டத்தில் உள்ள சிறிய நகரமான கைவாரா மற்றும் அதனைச் சுற்றியுள்ள 400 ஏக்கர் பரப்பில் பசுமைப் போராளிகள் குழு 50,000-த்துக்கும் மேலான மரக் கன்றுகளை நட்டுள்ளது. "ஊரக கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 6 கிராமங்களில் பள்ளிகள், அங்கன்வாடிகள், பொது சுகாதார நிலையங்கள், நூலகங்கள் உள்ளிட்டவற்றை நாங்கள் தரம் உயர்த்தியுள்ளோம். பல இடங்களில் உயர்கோபுர விளக்குகள் நிறுவப் பட்டுள்ளன" என்று அவர் விளக்கினார். பாலாற்றை சீரமைக்கும் திட்டத்துக்காக இதுவரை ரூ.2.2 கோடி செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

"வீடற்றவர்களுக்கு வீடு" என்னும் நம்பிக்கையை உருவாக்கும்



*ரோட்டரி பெங்களூர் வித்யாலயா பள்ளியில் சுதந்திர தினத்தையொட்டி சங்கத் தலைவர் கௌரி, தலைமை ஆசிரியை T சுதா, பிரிகேடியர் (ஓய்வு) B G ஜெகதீஷ், மற்றும் NCC உறுப்பினர்கள்.*

வகையில் திறன் வளர்ப்பு மையம் மூலம் ஆதரவற்ற பெண்கள், வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் உள்ள பெண்களுக்கு லேத் பட்டறை, தச்சு வேலை, தையல்வேலை, நர்சரி வளர்ப்பது என 800 பேருக்கு பயிற்சி அளித்து வருகிறோம். இது தொடர்பாக சங்கம் காலின்ஸ் ஏரோஸ்பேன் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்த திறன் வளர்ப்பை மையத்தை ஆட்டோ ராஜா என்னும் சமூக சேவகர் நடத்தி வருகிறார்.

### உதவித்தொகை

பள்ளி அளவில் மாணவிகளுக்கான விசாலா ஹயக்ரீவ் உதவித்தொகை உள்பட ஒவ்வொரு ஆண்டும் 200-க்கும் மேலான உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ரோட்டரி மெண்டா கல்வி உதவித்தொகை மூலம் 175 மாணவர்கள் ஆண்டுதோறும் பயன்பெற்று வருகின்றனர். இந்த உதவித் தொகை மிகவும் பிரபலமானது.

ஜெனித் மற்றும் அசிம் பிரேம்ஜி அறக்கட்டளைகள் ஒவ்வொரு ஆண்டும் 100 ஏழை மாணவர்களுக்கு B.Ed உதவித் தொகையை வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை நடத்தி வரும் பள்ளியில் இதுவரை 400-ஆசிரியர்கள் பயிற்சிபெற்றுள்ளனர். இதற்காக ஆண்டுக்கு ரூ.43 லட்சம் செலவிடப்படுகிறது. CSR நிதிக் கூட்டாளர்கள் மூலம் 184 பார்வயற்றை நபர்களுக்கு ரூ.45,000 மதிப்புள்ள சிறப்பு கண் கண்ணாடிகள் வழங்கப் பட்டுள்ளன. இவர்கள் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் மற்றும் ஆடியோ-முகம் அறிதல் கருவிகள் பொருத்தப்பட்ட சிறப்பு கண்ணாடிகள் மூலம் எல்லோரையும்போல இயல்பான வாழ்க்கையை நடத்த முடியும்.

மாநகராட்சி மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரோட்டரி சங்கம் ரூ.28 லட்சம் செலவில் வெறிநாய்க்கடி நோய்க்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டுள்ளது. சுற்றுச்சூழலை நிலைநிறுத்துவதில் கழுகுகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. ஆனால், இந்தியாவில் உயரப் பறக்கும் இந்த கழுகுகளின் எண்ணிக்கை இரசாயனம் கலந்த உணவை உண் பதால் 10,000-மாக குறைந்துவிட்டது. எனவே இதுபற்றிய விழிப்புணர்வை நாங்கள் ஏற்படுத்தி வருகிறோம் என்கிறார் ராவ்.



### நட்புறவின் இருப்பிடம் ரோட்டரி

1960-ம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ரூ.50,000-க்கு ஒரு நிலத்தை சங்கம் வாங்கியது. ஆனால், சொந்தமாக கட்டடம் கட்டுவதற்கு 7 ஆண்டுகளானது என்று நினைவுகூர்ந்தார் ராவ். அந்த கட்டடத்தின் மொட்டை மாடியில் நட்புறவு மற்றும் இரவு விருந்துக்காக 200 பேர் கூடமுடியும் என்றார்.

ரோட்டரியில் தீவிரமாக ஈடுபட்டு செயலாற்றி வரும் AKS உறுப்பினரான N S ஸ்ரீனிவாசமூர்த்தி, “பெங்களூரு ரோட்டரி சங்கத்திற்கு நாங்கள் அடிமையாகிவிட்டோம். அங்கு நட்புறவு சிறப்பாக இருக்கும். நான் இருபது ஆண்டுகளுக்கு முன்பு சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தேன். அது சேவைக்கான எனது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியது” என்கிறார் அவர். அனைவரும் உற்சாகமாக செயல்பட்டு வருகிறோம் என்று அவர் கூறியதை ஆமோதிக்கிறார் ரவிசங்கர் டகோஜு. “பெங்களூரு ரோட்டரி சங்கத்தில் ஒருவர் உறுப்பினராக இருந்தால், அவருக்கு வேறு எந்த சமூக அமைப்பும் தேவையில்லை. ஏனெனில் அனைத்தும் இங்கே கட்டமைக்கப்பட்டுள்ளன” என்று அவர் மேலும் கூறினார்.

13 வயதில் மாணவர்களுக்கான உதவித்தொகையைப் பெற்றவர் பகுதியாக செவித்திறன் குறை பாடுள்ள சந்தனா C இவர் பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான “அபிலிடிஸ்” (திறனாளர்கள்) ரோட்டரி சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

கௌரி ஓஸா 26 ஆண்டுகளுக்கு முன் சங்கத்தில் சேர்ந்தார். “12 ஆண்டுகள் வட்டமேஜையில் (பெண்கள் வட்டத்தில்) இருந்தேன். ரோட்டரி சங்கத்தில் நட்புறவு மற்றும் பிணைப்பு ஏற்பட்டதை அடுத்து எனது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன” என்கிறார் அவர்.

இரண்டு AKS உறுப்பினர்கள், 10 பெருநன்கொடையாளர்களுடன் சங்கத்தில் மொத்தம் 330 உறுப் பினர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் இதுவரை $12 மில்லியன் TRF நிதியாக பங்களிக்கப்பட்டுள்ளது. 100 சதவீத PHF சங்கம் 34 ரோட்டரி, 4 ரோட்ராக்ட் மற்றும் 11 இன்டராக்ட் சங்கங்களை ஆதரித்து வருகிறது. பெங்களூரு ரோட்டரி சங்கம், இந்தியாவிலேயே மிகவும் பழமையான சங்கமாகும். 56 ஆண்டு களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்த சங்கம் பயனுள்ள பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.■

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on July, 2024

(in US Dollars)

| District Number | | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|---|
| 2981 | | 91,254 | 2,335 | 29,777 | 48,101 | 171,467 |
| 2982 | | 78,602 | 2,171 | 32,160 | 64,429 | 177,362 |
| 3000 | | 272,496 | 55,048 | 53,760 | 1,024,105 | 1,405,409 |
| 3011 | | 253,520 | 35,898 | 52,080 | 1,721,151 | 2,062,649 |
| 3012 | | 111,174 | 544 | 0 | 444,544 | 556,263 |
| 3020 | | 153,971 | 190,803 | 160,214 | 535,670 | 1,040,657 |
| 3030 | | 219,895 | 31,911 | 13,609 | 262,015 | 527,430 |
| 3040 | | 16,144 | 1,200 | 100 | 122,183 | 139,627 |
| 3053 | | 106,572 | 1,934 | 10,000 | 86,705 | 205,211 |
| 3055 | | 159,351 | 5,702 | 60,727 | 9,728 | 235,509 |
| 3056 | | 126,817 | 886 | 50,000 | 40,400 | 218,102 |
| 3060 | | 378,455 | 11,100 | 86,639 | 638,308 | 1,114,503 |
| 3070 | | 42,740 | 751 | 0 | 24 | 43,516 |
| 3080 | | 176,828 | 29,133 | 49,125 | 100,180 | 355,265 |
| 3090 | | 107,453 | 2,830 | 26,000 | 192,807 | 329,089 |
| 3100 | | 128,793 | 7,212 | 25,301 | 80,550 | 241,857 |
| 3110 | | 19,809 | 1,030 | 0 | 109,179 | 130,018 |
| 3120 | | 73,665 | 631 | 16,684 | 10,342 | 101,322 |
| 3131 | | 912,836 | 23,651 | 262,244 | 1,847,427 | 3,046,157 |
| 3132 | | 202,902 | 8,259 | 10,000 | 128,705 | 349,866 |
| 3141 | | 757,132 | 87,636 | 144,121 | 3,127,937 | 4,116,826 |
| 3142 | | 432,731 | 121,545 | 25,985 | 196,835 | 777,096 |
| 3150 | | 102,484 | 32,825 | 161,423 | 161,836 | 458,569 |
| 3160 | | 88,668 | 2,572 | 0 | 3,432 | 94,672 |
| 3170 | | 410,238 | 51,962 | 27,102 | 231,608 | 720,910 |
| 3181 | | 310,815 | 3,682 | 31,000 | 1,581 | 347,078 |
| 3182 | | 104,322 | 5,687 | 25,624 | 67,557 | 203,189 |
| 3191 | | 160,729 | 16,190 | 60,976 | 765,403 | 1,003,298 |
| 3192 | | 170,812 | 21,746 | 421,687 | 500,581 | 1,114,825 |
| 3201 | | 356,009 | 85,764 | 50,784 | 1,682,028 | 2,174,585 |
| 3203 | | 92,970 | 45,055 | 12,348 | 32,672 | 183,045 |
| 3204 | | 71,769 | 4,628 | 0 | 34,292 | 110,689 |
| 3211 | | 228,905 | 5,086 | 27,325 | 138,443 | 399,759 |
| 3212 | | 243,334 | 65,164 | 52,602 | 129,400 | 490,501 |
| 3231 | | 9,273 | 10,240 | 5,314 | 28,392 | 53,218 |
| 3232 | | 113,585 | 31,875 | 55,973 | 2,533,263 | 2,734,697 |
| 3240 | | 232,417 | 17,470 | 34,000 | 478,338 | 762,225 |
| 3250 | | 86,036 | 11,554 | 26 | 103,684 | 201,300 |
| 3261 | | 215,226 | 15,630 | 25,181 | 70,214 | 326,251 |
| 3262 | | 82,836 | 8,741 | 16,078 | 93,350 | 201,005 |
| 3291 | | 294,376 | 10,958 | 169,311 | 59,549 | 534,193 |
| 3220 | Sri Lanka | 106,758 | 14,130 | 34,953 | 9,766 | 165,607 |
| 3271 | Pakistan | 15,857 | 87,578 | 0 | 93,141 | 196,576 |
| *3272 | Pakistan | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| *3281 | Bangladesh | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| *3282 | Bangladesh | 90,726 | 4,982 | 1,000 | 9,116 | 105,824 |
| 3292 | Nepal | 185,298 | 44,142 | 19,999 | 470,312 | 719,752 |
| 63 | (former 3272) | 16,036 | 1,288 | 0 | 0 | 17,324 |
| 64 | (former 3281) | 31,517 | 5,479 | 2,000 | 0 | 38,996 |
| 65 | (former 3282) | 4,945 | 321 | 0 | 9,000 | 14,266 |

*** Undistricted**

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

**Million dollar districts from South Asia and their worldwide rank in total giving**

| Zone | District | Total TRF Contribution | Worldwide Rank | Rank in South Asia |
|---|---|---|---|---|
| 4 | 3141 | $4,116,626 | 1 | 1 |
| 7 | 3131 | $3,051,157 | 4 | 2 |
| 5 | 3232 | $2,734,456 | 6 | 3 |
| 5 | 3201 | $2,174,585 | 11 | 4 |
| 4 | 3011 | $2,062,649 | 13 | 5 |
| 5 | 3000 | $1,405,409 | 26 | 6 |
| 7 | 3192 | $1,114,825 | 44 | 7 |
| 4 | 3060 | $1,113,794 | 45 | 8 |
| 7 | 3020 | $1,040,657 | 52 | 9 |
| 7 | 3191 | $1,003,298 | 56 | 10 |

**Top districts from South Asia in Annual Fund giving and the corresponding worldwide rank**

| Zone | District | Annual Fund Total | Worldwide Rank in Annual Fund giving | Rank in South Asia in Annual Fund giving |
|---|---|---|---|---|
| 7 | 3131 | $917,836 | 15 | 1 |
| 4 | 3141 | $756,932 | 24 | 2 |
| 4 | 3142 | $432,731 | 75 | 3 |
| 7 | 3170 | $405,550 | 84 | 4 |
| 4 | 3060 | $378,455 | 100 | 5 |

**ரோட்டரி ஆண்டு 2023–24க்கான தெற்கு ஆசிய நிதி திரட்டல் சிறப்பம்சங்கள்:**

- இந்தியா TRFக்குத் தன் மிகப் பெரிய பங்களிப்பை ($31.8 மில்லியன்) வழங்கி உலக அளவில் 2வது மிகப் பெரிய பங்களிப்பாளர் என்ற இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது.
- RID 3141 (உலகில் முதல் இடத்தை பெற்றது) மொத்த TRF பங்களிப்பு $4.1 மில்லியன்.
- முதன்முறையாக, 5 இந்திய மாவட்டங்கள் $2 மில்லியனைத் தாண்டின, 10 மாவட்டங்கள் $1 மில்லியனைத் தாண்டின.
- தெற்கு ஆசியாவிலிருந்து 29 புதிய AKS உறுப்பினர்கள் (நிலை மாற்றங்கள் உள்பட), இந்தியாவில் 27 AKS உறுப்பினர்கள்.
- 75% சங்கங்கள் TRF-க்குப் பங்களித்தன; 11 மாவட்டங்கள் (3055, 3141, 3142, 2982, 3220, 3100, 3240, 3020, 3131, 3132 மற்றும் 3182) 100% வழங்கும் சங்கங்கள் என்ற நிலையை சாதித்தன.
- தெற்கு ஆசியா தன் மிகப் பெரிய கொடையாளர் சதவிகிதத்தைப் (37%) பெற்றது. 95% கொடையாளர் பங்கேற்புடன் RID 3292 முதல் இடத்தையும், 69% கொடையாளர் பங்கேற்புடன் RID-கள் 3060, 3181 அடுத்த இடங்களையும் பிடித்தன.
- தெற்கு ஆசியப் பட்டியலில் மொத்தம் 614 புதிய மிகப் பெரிய கொடையாளர்கள் (நிலை மாற்றங்கள் உள்பட) சேர்க்கப்பட்டார்கள். இதன்மூலம் இந்தப் பகுதியில் 7,000க்கும் மேற்பட்ட மிகப் பெரிய கொடையாளர்கள் உள்ளார்கள்.
- தெற்கு ஆசியாவின் பால் ஹாரிஸ் சமூகத்தில் 362 புதிய உறுப்பினர்கள் சேர்ந்தனர். இதன்மூலம், இந்த எண்ணிக்கை 2,064-ஆக உயர்ந்தது.

**ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்**

ரோட்டரி அறக்கட்டளையின் ஆண்டு நிதிக்கு நீங்கள் கொடையளிக்கும் போது, உங்கள் பங்களிப்புகள் நல்கைகளாக மாற்றப்பட்டு உள்ளூர் மற்றும் பன்னாட்டுத் திட்டங்கள், கல்வி உதவித் தொகைகள் மற்றும் பிற செயல்பாடுகளுக்கு நிதியளிக்கின்றன.

**GIVE TODAY:** *rotary.org/donate*
**LEARN MORE:** *my.rotary.org/annual-fund*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**சேதன் தேசாய்**
ஐ.டி. ஆலோசகர், RC போரிவிலி, RID 3141

## சங்கங்களை துடிப்பாக, தவிர்க்க முடியாததாக மாற்றுவேன்

சங்கங்களை துடிப்பானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் ரோட்டரியை கட்டமைக்க முடியும் என்கிறார் சேதன் தேசாய். 700 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், 12 புதிய பட்டய சங்கங்களையும் நிறுவி, 2025-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் 130 சங்கங்கள் மூலம் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 6,700-க்கும் மேலாக அதிகரிப்பதும் நோக்கம் என்கிறார் அவர்.

"வலிமையான, துடிப்பான அங்கன்வாடிகள்" (Vibrant Anganwadis) திட்டத்தின் மூலம் மும்பையிலிருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள ஜவஹர், மொகாடா உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 436 குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை மேம்படுத்தி 26,000 குழந்தைகளின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ரூ.6 கோடியிலான இத்திட்டம் சர்வதேச மானிய உதவி மற்றும் CSR நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படுகிறது. பாரமரிப்பு மையங்களில் பணிபுரியும் சேவகர்களுக்கு பயிற்சி அளிப்பது, அங்கன்வாடிகளில் வசதிகளை மேம்படுத்தி புதுப்பிப்பது ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும்.

வலியற்ற, கதிர்வீச்சு பாதிப்பு இல்லாத அமெரிக்க தொழில்நுட்பம் மூலம் 1 லட்சம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை, 2,000 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அரசுப்பள்ளி ஆசிரியர்கள் 1,000 பேருக்கு பயிற்சி மற்றும் 200 முதியோர் இல்லங்களுக்கு அத்தியாவசிய வசதிகள் செய்துகொடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரோட்டரி சங்கங்கள் CSR மற்றும் இந்திய நிதியுதவியை பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார். இதன் மூலம் அவை TRF பங்களிப்பாக அங்கீகரிக்கப்படும். TRF பங்களிப்பாக $7 மில்லியன் நிதி திரட்டப்படும். முதல் 25 நாட்களில் 8 ரோட்டேரியன்கள் AKS உறுப்பினர்காக உறுதிமொழியேற்றுள்ளனர்.



**S விக்ரம்தத்தா**
கல்வி, RC டெரலகட்டே, RID 3181

## முதியோர் நோயாளிகள் 1000 பேருக்கு மருத்துவ உதவி

இந்திய கடற்படையின் முன்னாள் தலைமை தொழில்நுட்ப அதிகாரியான விக்ரம்தத்தா, சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். கடற்படையில் 15 ஆண்டுகள் சேவை மற்றும் பல்வேறு நாடுகளுக்கு பயணம் சென்றுள்ள அவர், 2010-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். "சமூக சேவை, கூட்டுறவு, ஒழுக்கம்தான் என்னை ரோட்டரிக்குள் இழுத்தது" என்கிறார் அவர். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் புதிதாக 300 உறுப்பினர்களைச் சேர்ப்பதும், 6 புதிய சங்கங்களை பட்டயப்படுத்துவதும், 95 சங்கங்கள் மூலம் உறுப்பினர்கள் எண்ணிக்கை 4,000 என்று உயர்த்துவதுமே தமது இலக்காகும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

தமக்கு பிடித்தமான "சந்தியா சுரக்ஷா" (முதியோர் பாதுகாப்பு) திட்டத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் உள்ள பல்வேறு நோய்களை எதிர்கொள்ளும் முதுமையான நோயாளிகள் 1,000 பேருக்குத் தேவையான மருந்துகள், சாய்வான படுக்கைகள், நடப்பதற்கான உபகரணங்கள், மேற்கத்திய கழிப்பறைகள் வசதி செய்து தரவேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். 450 கல்வி நிறுவனங்கள் மூலம் கர்பப்பை வாய் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தடுப்பூசி களின் விலை குறையும்பட்சத்தில் தடுப்பூசி போடும் முகாம்களையும் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். சிறப்பு குழந்தைகளுக்கான பிஸியோதெரபி மையங்களுக்குத் தேவையான மருத்துவ கருவிகளை (ரூ.50 லட்சம் சர்வதேச மானிய உதவி) RC சுல்லியா நன்கொடையாக வழங்க உள்ளது. புத்தூர் ரோட்டரி சங்கம், அரசு மருத்துவ மனையுடன் இணைந்து ரூ.35 லட்சம் சர்வதேச மானிய உதவியுடன் மார்பக புற்றுநோய் சோதனை முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

TRF பங்களிப்பாக $4,00,000 நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் நாங்கள் 9 திட்டங்களை தொடர்கிறோம் என்று அவர் கூறினார்.



**யாக்யான்சிஸ் மொஹாபாத்ரா**

ஊடகம்
RC புவனேஸ்வர் டோஷாலி, RID 3262

## ஏழை வியாபாரிகளுக்கு தள்ளு வண்டிகள்

மனித குலத்துக்கு சேவை செய்வது கடவுளுக்கு சேவை செய்வதற்கு நிகரானதாகும் என்பதை லட்சியமாகக் கொண்டுள்ளார் மொஹாபாத்ரா. புதிதாக 250 உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை 4,250 ஆக உயர்த்த வேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என்கிறார் மொஹாபாத்ரா. தற்போது 117 சங்கங்கள் உள்ளன. மேலும் குறைந்தபட்சம் 15 புதிய சங்கங்களை பட்டயப்படுத்த வேண்டும் என்பது இவரது விருப்பமாகும்.

இந்த ஆண்டு 10 முதல் 15 திட்டங்களைச் செயல்படுத்த சர்வதேச மானிய உதவி கேட்டு விண்ணப்பிக்க மாவட்டம் திட்டமிட்டுள்ளது. பெர்ஹாம்பூரில் உள்ள மீனாட்சி மருத்துவமனையில் ரூ.60 லட்சம் சர்வதேச மானிய உதவி மூலம் டயாலிசிஸ் மையத்தை சமீபத்தில் அவர் தொடங்கிவைத்தார். ரூ.20 லட்சம் CSR நிதியுதவி மூலம் “ஸ்வபலாம்பி” (சுயசார்பு திட்டம்) திட்டத்தின் கீழ் 80 சங்கங்கள் மூலம், வறுமை கோட்டுக்கு கீழே உள்ள 300 சில்லறை வியாபாரிகளுக்கு தள்ளுவண்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. விரைவில் பாலாசூரில் உள்ள அரசு மருத்துவமனையில் ரூ.25 லட்சம் சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் நோய் கண்டறியும் மையம் அமைக்கப்பட உள்ளது.

ஒடிசாவின் ஊரகப்பகுதிகளில் சுமார் 50 சுகாதார மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும். TRF அறக்கட்டளைக்கு நிதிப் பங்களிப்பாக 2,50,000 நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமது சமூக சேவையை விரிவுபடுத்துவதற்காக மொஹாபாத்ரா 2008-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். ரோட்டரியில் எனக்கு முன்மாதிரியாக இருப்பவர் PRIP ராஜேந்திர சாபூதான் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் அவர்.



**M ராஜேந்திரபாபு**
கட்டுமானம், RC திருவண்ணாமலை, RID 3231

## மாவட்ட தலைவர்களுக்கு தொடர் பயிற்சி

“மிஷன் எக்ஸலென்ஸ்” என்பது ராஜன்பாபுவின் மாவட்ட கருப்பொருளாகும். “சங்கத்தின் தலைவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிப்பதே எங்களின் நோக்கமாகும். அப்போதுதான் அவர்கள் பொறுப்புடன் தங்கள் கடமைகளைச் செய்ய தயாராக இருப்பார்கள்” என்கிறார்.

புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் ரோட்டேரியன்கள் அங்கீகரிக்கப்படுவார்கள் மற்றும் புதிதாக 1,000 உறுப்பினர்கள் சேர்க்கவும், 10 புதிய சங்கங்களை பட்டயப்படுத்தவும் இவர் திட்டமிட்டுள்ளார். 104 சங்கங்கள் மூலம் 4,500-க்கும் மேலாக உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதே நோக்கமாகும். “அரசுப் பள்ளிகளில் 20 கழிப்பறை தொகுதிகளை கட்டவும் 50 கைகழுவும் நிலையங்களை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். இவை சர்வதேச மானிய உதவி அல்லது CSR நிதியுதவி மூலம் நிறைவேற்றப்படும்” என்று விளக்கினார் ராஜேந்திரபாபு. “தினம் தினம்” திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சங்கமும் 365 நாளும் செடிகள், மரக்கன்றுகள் நடவும் நகர்ப்புற பகுதிகளில் மியாவாகி காடுகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 100 மருத்துவ முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று சங்கங்கள் சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் டயாலிசிஸ் மையங்கள் அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றன. தலா ரூ.50 லட்சம் மானிய உதவியிலான 10 திட்டங்களைச் செயல்படுத்தவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. TRF நிதிப் பங்களிப்பாக 7,00,000 நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. “நான் 2005-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தேன். அறக்கட்டளை திட்டங்கள் என்னை சுறுசுறுப்பாக செயல்பட வைக்கின்றன” என்கிறார் ராஜேந்திரபாபு. ■

# சங்கச் செய்திகள்













**RC நாகப்பட்டினம் விங்க்ஸ் — RID 2981**

காலில் காயம் பட்ட தினக்கூலித் தொழிலாளி வெங்கடேஷ் (44) என்பவரின் சிகிச்சைக்கென ரூ.25,000 வழங்கப்பட்டது.

**RC சோனேப்பட் மிட்-டவுன் — RID 3012**

தில்லி எல்லை அருகில் குன்ட்லி, சோனேப்பட் பகுதிகளில், பார்வைக் குறைபாடுள்ள 40 பேருக்கு, நடக்க உதவக்கூடிய, உணரிகளுடன் கூடிய வெள்ளைக் கைத்தடிகள் கொடையளிக்கப்பட்டன.




**RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி — RID 3020**

PDG பாஸ்கர் ராம், முன்னாள் தலைவர் காசி விஸ்வேஸ்வர ராவ் தொடங்கி வைத்த ஆறு நாள் அக்குபிரெஷர் முகாமில், 3 வல்லுனர்கள் 500க்கும் மேற்பட் டோருக்கு சிகிச்சையளித்தார்கள்.

**RC அம்ராவதி — RID 3030**

RC பர்ஹான்பூர் உடன் இணைந்து டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் நினைவு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறியும் பாப் ஸ்மியர் பரிசோதனை முகாமில் 100க்கும் மேற்பட்ட செரோபாசிட்டிவ் பெண்கள் பரிசோதிக்கப்பட்டார்கள்.

**RC வாத்வான் மெட்ரோ — RID 3060**

ரோட்டரி ஆண்டின் முதல் மாதத்தில் நடைபெறும் வாரத் திட்டமாகிய அன்னபூர்ணா திட்டத்தின்கீழ், நூற்றுக்கணக்கான மக்களுக்கு உணவும் மோரும் வழங்கப்பட்டது.













**RC ஜலந்தர் சவுத் — RID 3070**

காப்சன் அறக்கட்டளையின் CSR நிதியைக் கொண்டு, புதியானா கிராமத்தில் உள்ள பிரித் ஆஷ்ரம் என்ற முதியோர் இல்லத்தில் ஒரு கழிப்பறைத் தொகுதி (ரூ.90,000) கட்டப்பட்டது.

**RC நஹன் சிர்மௌர் ஹில்ஸ் — RID 3080**

இமாச்சலப் பிரதேசத்தின் சிர்மௌர் மாவட்டம், நாஹன் வட்டம், பர்பியோன் கிராமத்தில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குக் குளிருடைகள், காலுறைகள் வழங்கப்பட்டன.




**RC ஆக்ரா — RID 3110**

ஆக்ரா மாவட்டச் சிறையில் நடந்த நல முகாமில் சுமார் 300 கைதிகள் (பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள்) பலன் பெற்றார்கள், மருந்துகள், கண், காது சொட்டு மருந்துகள், சிரப்கள், பற்பசைகள், மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

**RC பிரயாக்ராஜ் பிளாட்டினம் — RID 3120**

உலகப் பிளாஸ்டிக் பை இல்லா நாளில் (ஜூன் 3), சாலையோரப் பழ, காய்கறி வணிகர்களுக்கு ரோட்டரிச் சக்கரத்துடன் கூடிய சுமார் 5,000 துணிப் பைகள் வழங்கப்பட்டன. இந்த விழாவின் தலைமை விருந்தினர், நகரத் தலைவர் உமேஷ் சந்திரா கேசர்வானி.

**RC பந்தார்பூர் — RID 3132**

“விட்டோபா” கடவுளுக்கான புனிதப் பயணத்தின் கடைசி நாளான ஆஷாடி வாரி அன்று, பந்தர்பூர் வருகிற புனிதப் பயணிகளுக்குப் பெரிய தாள் பைகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அங்கு குப்பை குறைக்கப் பட்டது. 1,000க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

# சிறப்புக் குழந்தைகளைத் திருப்பதிக்கு அழைத்துச்சென்ற RID 3233

ரோட்டரி செய்திக்குழு



ரோட்டரியர்களும் குழந்தைகளும் திருப்பதியில் பாலாஜி தரிசனம் பிறகு.



**வலது:** RI *இயக்குனர் அனிருதாராய் சௌத்ரி சென்னை ரயில் நிலையத்தில் குழந்தைகளுடன்.*



சென்னையைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிக் குழந்தைகளை ஒரு சிறப்பு ரயிலில் திருப்பதி அழைத்துச் சென்று, அவர்களை வெங்கடாசலபதிக் கடவுளைச் சிறப்புத் தரிசனம் செய்யவைத்தது RID 3233.

இந்தச் சிறப்பு ரயிலைத் தொடங்கிவைத்த RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி இந்தத் திட்டத்தின் தலைவர் பங்கஜ் கன்காரியா, அவருடைய குழுவினர், அவர்களை வழிநடத்திய மாவட்ட ஆளுநர் மகாவீர் சந்த் போத்ரா ஆகியோரைப் பாராட்டினார்.

சென்னை ரயில் நிலையத்தில் அதிகாலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்,





**வலமிருந்து:** PDGs *தாராசந்த் துகர்,* N *நந்தகுமார்,* I S A K *நாசர், பாபு பேரம்,* S *முத்துபழனியப்பன்,* G *சந்திரமோகன் மற்றும்* R *சீனிவாசன்.*



DG *மகாவீர் போத்ரா குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுகிறார்.*






தமிழ்நாடு அமைச்சர் P K சேகர் பாபு. இவருடன் தெற்கு ரயில்வே பிரிவு மேலாளர் விஸ்வநாத் ஈர்யா, மற்ற அலுவலர்கள் விழாவில் கலந்துகொண்டார்கள். ரேணிகுண்டா ரயில் நிலையத்தில், இந்தச் சிறுவர்களை ஆந்திரப்பிரதேச அமைச்சர் அனம் ராமநாராயண ரெட்டி, திருப்பதி MLA அரனி ஸ்ரீநிவாசுலு, TTD செயல் அலுவலர் சியாமளா ராவ் வரவேற்றார்கள்.

“36 AP மாநில அரசுப் பேருந்துகள் இந்தக் குழந்தைகளைத் திருமலைக்கு அழைத்துச்சென்றன, நண்பகல் நேரத்தில் இவர்கள் வெங்கடாசலபதிக் கடவுளின் நல்ல தரிசனத்தைப் பெற்றார்கள் என்றார் DG போத்ரா.

சென்னையைச் சேர்ந்த அறுசுவை உணவு நிறுவனம் குழந்தைகளுக்கு மூன்று வேளை சுவையான உணவுகளை வழங்கியது. இவர்களுக்கு ஓர் கைப்பை, வெங்கடாசலபதிக் கடவுள் படத்துடன் டி-சட்டை, குடிநீர், பிஸ்கட்கள், எழுதும் அட்டை, பேனா ஆகியவையும் வழங்கப் பட்டன. பயணம் முழுவதும் குழந்தைகளின் நலனை உறுதி செய்வதற்கென, ரோட்டரியன்களும் மருத்துவர்களும் அவர்களுடன் பயணம் செய்தார்கள்.

TTD-ல் அன்னதானத்துக்கு RID 3233 ரூ.1.51 லட்சம் நன்கொடையளித்தது. “சிறப்புக் குழந்தைகளுடன் திருப்பதிக்கு ரயிலில் சென்றது நெடுநாள் எங்கள் இதயங்களிலும் மனங்களிலும் தங்கியிருக்கும்’’ என்று தொடர்ந்து குறிப்பிட்டார் DG போத்ரா.■

# ஒலிம்பிக்கும் ரோட்டரியும்

**ஜேசன் கீசர்**

*ஒலிம்பிக்கில் நீண்டகாலமாக ஆர்வம் காட்டி வரும் தன்னார்வலர், விளையாட்டிலும் ரோட்டரியிலும் ஒற்றுமையைக் காண்கிறார்.*



RC டெலாண்ட் (ப்ரேக்ஃபாஸ்ட்) உறுப்பினர் எர்னி பீட்டர்சன்.

1950-களில் குழந்தையாக இருந்த போது ஒலிம்பிக் போட்டிகளை தொலைக் காட்சியில் பார்த்ததை நினைவுகூர்கிறார் எர்னி பீட்டர்சன். "நான் அவற்றைப் பார்க்கும்போது, ஒருநாளாவது அந்த போட்டிகளில் நேரில் கலந்துகொள்வது நன்றாக இருக்கும் என நினைத்தேன்". இந்த கோடையில் பாரிசில், நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பீட்டர்சன், 6-வது முறையாக தன்னார்வலராக கலந்து கொண்டார். டிக்கெட் எடுப்பது, பார்வை யாளர்கள் தங்கள் இருக்கையைக் கண்டறிய உதவுவது என ஒலிம்பிக் விளையாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ குழுவினரில் அவரும் ஒருவராக இருந்தார்.

ப்ளோரிடாவின் டீ லேண்டில் நிலம் மற்றும் சொத்து மதிப்பீட்டாளராகப் பணியாற்றிய பீட்டர்சன், ஓய்வுக்குப்பிறகு 2002-ம் ஆண்டு முதல் சால்ட் லேக் சிட்டி, டொரினோ, வான்கூவர், சோச்சி மற்றும் ரியோ ஆகிய இடங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது, பெரும்பாலும் நிகழ்ச்சிக்குப் பிந்தைய நேர்காணல்களுக்கு விளையாட்டு வீரர்களுக்கு ஊடக உதவியாளராகப் பணியாற்றினார். பனிச்சறுக்கு விளையாட்டு வீரர் லிண்ட்ஸே வோன், நீச்சல் சாம்பியன் மைக்கேல் பெல்ப்ஸ் மற்றும் பனிச்சறுக்கு விளையாட்டு வீரர் ஷான் ஒயிட் உள்ளிட்ட தங்கம் வென்ற வீரர்களை அவர் சந்தித்துள்ளார். அவர்களின் கவனம் மற்றும் அவர்களின் தீவிர விளையாட்டுப் பற்று குறித்து வியப்படைந்துள்ளார்.

அவரது மறக்கமுடியாத தருணங் களில் ஒன்று இரண்டு பனிச்சறுக்கு வீரர்கள் ரஷியாவின் சோச்சியில் நடை பெற்ற போட்டியின் முடிவில் தங்கள் தாயை தழுவிக்கொண்டதுதான்.

இந்த ஆண்டு பீட்டர்சனுக்கு இனிமை தந்தது என்னவாக இருக்கலாம். தொடக்க விழா நிகழ்ச்சி மற்றும் ஈஃபில் கோபுரம் அருகே நடைபெற்ற வெளிப்புற கடற்கரை வாலிபால் போட்டிகளில் பணியாற்றினார். மற்றொரு அதிர்ஷ்டம்- அவருக்கு தங்குவதற்கு இடம் கிடைக்காத நிலையில் சக ரோட்டேரியன் ஒருவர் அவருக்கு இடம் கொடுக்க முன்வந்தார். இது ஒன்றும் முதல் முறையல்ல, ஏற்கெனவே நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போதும் இதுபோல் நடந்துள்ளது. பீட்டர்சனும் பதிலுக்கு அவர்களை ப்ளோரிடாவுக்கு அழைத்து விருந்தளித்துள்ளார்.■

# வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள மறுக்கும் பாடங்கள்

Wordsworld

*சீனாவைப் பற்றிய ஒரு பழைய புத்தகம், அதிகாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதைக் கவனிக்கச் செய்து வாசகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.*



**சந்தியா ராவ்**

முழுமையான அதிகாரம் சர்வாதிகாரத்தை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை வரலாற்று பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. நாகரிகங்கள் வந்து செல்கின்றன, மன்னராட்சிகள் ஆட்சி செய்கின்றன மற்றும் சிதைகின்றன, அரசாங்கங்கள் அவற்றின் வரம்பைக் கடக்கின்றன மற்றும் வெளியேற்றப்படுகின்றன, தலைவர்கள் குழுக்கள், சமூகங்கள், கிராமங்கள், நகரங்கள், தேசங்கள், பிராந்தியங்கள் ஆகியவற்றிலிருந்து மக்கள் தவறான செயல்கள் மற்றும் நியாயமற்ற நடைமுறைகள் என்று கருதும் செயல்களுக்காக வெளியேற்றப்படுகிறார்கள். பீட் தலைமுறையின் பாடல்கள், போலந்தின் கப்பல்துறை தொழிலாளர்களின் ஜனநாயக சார்பு முயற்சிகள், அரபு வசந்தத்தின் தோற்றம், கறுப்புச் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டங்கள் மற்றும் பங்களாதேஷில் மாணவர்களின் கோபம் என மிக சமீபகாலமாக மாற்றத்தை ஏற்படுத்தும் இதுபோன்ற எடுத்துக்காட்டுகளுடன் நமது சமீபத்திய வரலாறு விரிவடைகிறது. இதற்கான திறவுகோல் மக்களின் கைகளில் உள்ளது.

**சைனா வேக்ஸ்:** தி ஸ்ட்ராக்கிள் ஃபார் தி சோல் ஆஃப் எ ரைசிங் பவர் என்ற ஒரு பெரிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த போது இந்த எண்ணங்கள் அனைத்தும் மனதில் தோன்றின. இது ஒரு பழைய புத்தகம், முதன் முதலில் 1994-ல் பத்திரிகையாளர்களான நிக்கோலஸ் டி கிறிஸ்டோஃப் மற்றும் ஷெரில் வூடன் ஆகியோரால் வெளியிடப்பட்டது. பத்திரிகைக்கான புலிட்சர் விருதை வென்ற முதல் தம்பதிகள் இவர்கள் தான். 1990-ல், ஜனநாயகத்திற்கு ஆதரவான மாணவர்கள் இயக்கம் மற்றும் 1989-ம் ஆண்டு தியனன்மென் சதுக்க போராட்டங்கள் பற்றிய அறிக்கைகளுக்காக அவர்களுக்கு அவ்விருது வழங்கப்பட்டது. இந்நூல் இன்றைய பொருளாதார வல்லரசாக அன்று வளர்ந்து கொண்டிருந்த சீனாவை பற்றிய அவர்களின் ஆய்வு மற்றும் புரிதலை அடிப்படையாகக் கொண்டது; ஒரே நேரத்தில், இது படிக்க ஒரு த்ரில்லர் போல இருந்தது, பரவலான ஊழல், அதிகார துஷ்பிரயோகம், உரிமைக்குரல் கொடுப்பவர்களை ஒடுக்குதல், விவசாயிகளை அடிபணியச் செய்தல் என ஒரு சர்வாதிகார அரசின் ஆட்சியை உள்ளடக்கிய விவரங்களை வழங்குகிறது. ஆசிரியர்கள் மாற்று அத்தியாயங்களை எழுதியுள்ளனர், சீன வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கர் ஷெரில் வுடன் தனது பார்வைக்கு கூடுதல், தனிப்பட்ட பரிமாணத்தை அளித்துள்ளார்.




புத்தகத்தைப் படிக்கும் போது, ஏப்ரல் 2022 வேர்ட்ஸ்வொர்ல்டு பத்தியில் பங்களாதேஷின் ஐம்பது ஆண்டுகள் என்ற தலைப்பில் தஹ்மிமா ஆனாமின் புனைகதை முத்தொகுப்பு இடம்பெற்றது; பங்களாதேஷின் விடுதலையைத் தொடர்ந்து IIM-கல்கத்தாவின் மூன்று மாணவர்களின் தன்னிச்சையான டாக்கா வருகையை அடிப்படையாகக் கொண்டது இப்புத்தகம்; மற்றோன்று சலில் திரிபாதியின் தி கர்னல் ஹூ வுட் நாட் ரிபெண்ட்: தி பங்களாதேஷ் வார் அண்ட் இட்ஸ் அன்கொயட் லேகசி. அதிலிருந்து மேற்கோள் காட்ட: தலைப்பு ... லெப்டினன்ட் கர்னல் ஃபரூக் ரஹ்மானைக் குறிக்கிறது, அவர் ஆகஸ்ட் 15, 1975-ல், “இராணுவத்தின் டாங்க் பிரிவான பெங்கால் லான்சர்ஸ் பிரிவை அவரது தலைமையில், ஷேக் முஜிப்பிற்கு விசுவாசமான ஒரு துணை ராணுவப் படையான ரோக்கி பாஹினியை வீழ்த்த வழிநடத்தினார்.” பின்னர் ஷேக் முஜிப் மற்றும் அவரது குடும்பத்தினரை கொல்ல அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் அடங்கிய குழுவைக் கொலைவெறியுடன் வழிநடத்தினார். இரண்டு மகள்கள் மட்டுமே, அவர்களில் ஒருவரான தற்போதைய பிரதமர்

ஷேக் ஹசீனா, அந்த நேரத்தில் அவர்கள் வெளிநாட்டில் இருந்ததால் தப்பித்துவிட்டார்கள். ஷேக் ஹசீனா பங்களாதேஷை விட்டு வெளியேறிவிட்டார் என்பதை இப்போது நாம் அறிவோம், மேலும் கும்பல் வெறித்தனத்தால் பங்கபந்து முஜிபுர் ரஹ்மான் சிலை கவிழ்க்கப்பட்ட காட்சிகளை நம்மில் பலர் பார்த்தோம். பங்களாதேஷில் மட்டுமல்லாமல் இந்தப் பகுதி முழுவதிலும் என்ன நடக்கிறது என்பதை ஓரளவு புரிந்துகொள்ள இந்தப் புத்தகத்தைப் படிக்கவேண்டிய சரியான நேரம் இது.

சீனாவின் சமகால வரலாற்றின் சுவாரசியமான அல்லது ஆர்வமுள்ள அம்சங்களுடன் மட்டுமே ஈடுபடுத்தும் என்று எதிர்பார்த்து, நான் ஓய்வான மனப்பான்மையுடன் சைனா வேக்ஸ் நூலை தொடங்கினேன். இருப்பினும், எனது புவியியல் எல்லையிலும் அதைச் சுற்றியும் என்ன நடந்தது அல்லது நடக்கிறது என்பதற்கு இணையாக வரையக்கூடிய பல புள்ளிகளை எதிர்கொண்டவுடன் நான் ஆர்வத்துடன் தொடர்ந்தேன். அதிகாரம் மற்றும் சர்வாதிகாரம் தொடர்பான பல்வேறு சூழல்கள் மற்றும் சேர்க்கைகளில் மனிதர்கள் தனிமனிதர் களாகவும் கூட்டாகவும் செயல்படும் விதத்தில் வரலாறு திரும்பத் திரும்ப ஒரே மாதிரி நிகழ்கிறது என்பதை உறுதியான வகையில் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இது நாணயத்தின் இருபுறத்திற்கும் சமமாகப் பொருந்தும்.

**புத்தகத்திலிருந்து சில பகுதிகளின் அடிப்படையில் உங்கள் சொந்த முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

இந்தப் பகுதி பக்கம் 54-ல் இருந்து: "விளையாட்டு தொடங்குவதற்கு சில மாதங்களுக்கு முன்பு, அரங்க சாலையின் ஓரத்தில் கட்டுமானப் பணிகளை நாங்கள் கவனித்தோம். சில வாரங்களுக்குப் பிறகு, கட்டுமானம் வடிவம் பெறத் தொடங்கியது, ஒரு ஸ்டேஜ் செட் போன்ற தட்டையான சிமெண்ட் சுவர் எழுப்பப்பட்டது. மேலும் சில வாரங்கள் கடக்க, சுவர் சாம்பல் வண்ணம் பூசப்பட்டு, வெள்ளை கோடுகள் வரையப்பட்டு, அது செங்கற்களால் ஆனது போல் தோற்றம் அளித்தது. உண்மையான வீடுகள் இப்போது முற்றிலும் மறைக்கப்பட்டன, தெருவில் இருந்து பார்ப்பதற்கு செட் ஒரு பெரிய, ஆடம்பரமான குடியிருப்பின் செங்கல் சுவரை ஒத்திருந்தது."



*நிக்கோலஸ் டி கிறிஸ்டோஃப் மற்றும் ஷெரில் வுடன்,* China Wakes *புத்தக ஆசிரியர்கள்.*

சில பக்கங்களுக்குப் பிறகு (175): கட்சி விவசாயிகளிடமிருந்து நிதியைப் பெற்று நகரவாசிகளுக்கு மானியம் அளிக்கிறது, ஏனெனில் அதிருப்தியடைந்த நகர்ப்புறத் தொழிலாளர்கள் வீதிக்கு வந்து எதிர்ப்புத் தெரிவிக்கலாம் என்ற பயத்தின் காரணமாக. இது ஒரு பொதுவான மூன்றாம் உலக நிகழ்வு. ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும், அரசாங்கங்கள் விவசாயிகளுக்கு மானியம் வழங்குகின்றன, மேலும் உற்பத்தி செய்யாமல் இருக்க அவர்களுக்கு பணம் கொடுக்கின்றன, இல்லையெனில் சோளம், பால் மற்றும் கோதுமைக்கான சந்தை விலைக்கு மேல் கொடுக்கின்றன. சீனா போன்ற வளரும் நாடுகளில், நகர்ப்புற அமைதியின்மை பற்றி அரசாங்கங்கள் கவலைப்படுகின்றன, எனவே அவர்கள் பருத்தி, கோகோ மற்றும் அரிசி ஆகியவற்றிற்கான சந்தை விலைக்குக் குறைவான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள், நகரவாசிகள் தங்கள் உணவை மலிவாக சாப்பிடுவதை உறுதிப் படுத்துகிறார்கள்.'

சைனா வேக்ஸ், அந்நாட்டின் கதையின் வெவ்வேறு அம்சங்களை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பார்க்கிறது, மனித உரிமைகள் முன்னணியில் கேள்விக்குரிய பல செயல்களுடன் அது எவ்வாறு உலகின் பொருளாதார முன்னோடியாக மாறியுள்ளது என்பதற்கான தர்க்கரீதியான பகுப்பாய்வை வாசகருக்கு வழங்குகிறது. அதன் பொருளாதார வெற்றிகளுக்கு ஆசிரியர்கள் ஒரு சுவாரஸ்யமான விளக்கத்தை வழங்குகிறார்கள்: சீனாவின் பொருளாதார ஏற்றம் ஒரு வகையான இரசாயன எதிர்வினையாகத் தெரிகிறது. முதல் மூலப்பொருள் கன்பூசியன் பாரம்பரியம், இது கல்வி மற்றும் சேமிப்பை வலியுறுத்தியது. பின்னர் நாட்டை ஒருங்கிணைத்த மாவோயிஸ்ட் புரட்சி, நிலத்தைப் பிரித்த வேரூன்றிய நலன்களை உடைத்து, நிதி மற்றும் மனித மூலதனத்தை அளித்தது. மூன்றாவதாக டெங் சியோபிங்கின் அரை முதலாளித்துவக் கொள்கைகள். இந்த காரணிகள் எதுவும் தனித்தனியாக போதுமானதாக இல்லை; ஆனால் ஒன்றாக அவை வெடித்தன.'

மேலும் பக்கம் 445-ல், புத்தகத்தின் முடிவில் ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்: பழங்கால கிரேக்க தத்துவஞானி ஹெராக்ளிட்டஸ், நீங்கள் ஒரே நதியில் இரண்டு முறை இறங்க முடியாது என்று கூறினார். தண்ணீர் பாய்ந்து கொண்டே இருக்கும், எனவே நதி எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். நாங்கள் 1988-ல் ஒரு சீனாவிற்கு வந்தோம், 1993-ல் நாங்கள் மிகவும் வித்தியாசமான ஒரு சீனாவை விட்டு வெளியேறினோம். அது செல்வ செழிப்புடனும், ஆரோக்கியமாகவும், தன்னம்பிக்கையுடனும் இருந்தது... ஆனால் காவலர்கள் இன்னும் அரசியல் கைதிகளை சித்திரவதை செய்கிறார்கள், ஆனால் இப்போது குடும்ப உறுப்பினர்கள் புகார் செய்கிறார்கள் மற்றும் சில நேரங்களில் பத்திரிகை கூட்டத்தை கூட்டுகிறார்கள்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



# RC சாங்லி 75 ஆண்டுகளைக் கொண்டாடுகிறது

ரோட்டரி செய்திக்குழு

1948ல் தொடங்கப்பட்ட சாங்லி ரோட்டரி சங்கம், RID 3170, தன் 75வது ஆண்டை நிறைவுசெய்யும் நேரத்தில், ஒரு புதிய நிர்வாகத் தொகுதியையும் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தையும் DG நாசிர் பொர்சட்வாலாவும் தொழிலதிபர் விஷ்வாஸ் சிடாலெயும் தொடங்கிவைத்தார்கள். “இதற்கான ரூ.1.25 கோடி மொத்தச் செலவும் உறுப்பினர் நன்கொடைகளின் வழியாகப் பெறப்பட்டது. இந்த மைல்கல் ஆண்டின்போது, சங்கத் தலைவர் சலீல் லிமயெ (2023–24) தலைமையில் நாங்கள் சமூகத்துக்குப் பல குறிப்பிடக்கூடிய திட்டங்களைச் செய்துள்ளோம்’’ என்றார் முன்னாள் தலைவர் பிபில் ஷெவடெ.

கடந்த பல பத்தாண்டுகளில் இந்தச் சங்கம் நிறுவியுள்ள வசதிகள், அமைத்துள்ள மையங்களில் சில:

**ரெமாண்ட் இல்லம் (1952)**

1952ல், பதிவு உறுப்பினரான ராஜாபாவ் தேசாய் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து ஆதரவற்ற குழந்தைகளைத் தங்கவைத்தார், “அதன் பிறகு, ரோட்டரியன்கள் நிதி திரட்டி ஒரு பெரிய கட்டடத்தை உருவாக்கினார்கள். இன்றைக்கு அது 2.5 ஏக்கர் வளாகமாக 200க்கும் மேற்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்கிறது’’ என்றார் ஷெவடெ.

1960-ல், சாங்லியின் முன்னாள் பேரரசர் சிந்தாமன்ராவ் பட்வர்த்தனுடைய 71-வது பிறந்த நாளை முன்னிட்டு ரோட்டரியன்கள் ரூ.1.11 லட்சம் திரட்டினார்கள். முன்னாள் அரசரும் அதே அளவு பங்களித்தார். இதைக் கொண்டு டெக்கான் கல்வி அமைப்பின் வழியாகச் ’’சிந்தாமன்ராவ் வணிகக் கல்லூரி’’ அமைக்கப்பட்டது. இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் S ராதாகிருஷ்ணன் தொடங்கிவைத்த இந்தக் கல்லூரி இப்போது UG மற்றும் PG பாடங்களை வழங்கும் உன்னத மையமாக உள்ளது.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர் களான சாஃபல்கர் சகோதரர்கள் சதாரா மாவட்டத்தில் உள்ள தாராட்காவ்ன் கிராம விவசாயிகள் தொடர் நீர்ப்பற்றாக்குறையால் மிகவும் துன்பப்படுவதைக் கேள்விப்பட்டு நெகிழ்ந்தார்கள், ஒரு கூட்டுறவுச் சமூகத்தின்கீழ் உயர்த்தல் நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை வழிநடத்தினார்கள். நீரா ஆற்றிலிருந்து அவர்களுக்கு நீரை வழங்கிய இந்த நிதீஷ் லாகிரி நீர்ப் பாசனத் திட்டம் (1962) ரோட்டரியிடமிருந்து “தனக்கு மேல் சேவை” விருதைப் பெற்றது, மேலும் “உள்ளூர் விவசாயிகளின் நீர்ப் பாசனத் தேவைகளுக்கென நாங்கள் ஒரு சிமெண்ட் குழாய்த் தொழிற் சாலையையும் அமைத்தோம்.’’

1970-ல், ரூ.10,000-க்கு மேல் உறுப்பினர்கள் கொடையளிக்க, குடிமையியல் மருத்துவமனையில் புற்றுநோயாளிகளுக்கான சிகிச்சைக்கென கோபால்ட் சிகிச்சைக்கான ஆழ் எக்ஸ்-கதிர் பிரிவு



*TRF அறங்காவலர் பரத் பாண்டியா சங்கத்தின் பவள விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஒரு பெண்ணுக்கு தையல் இயந்திரத்தை வழங்குகிறார். DGE அருண் பண்டாரே, PDGs ரவிகிரண் குல்கர்னி மற்றும் அர்வாடே சனத்குமார் வாசுதியோ ஆகியோரும் படத்தில் உள்ளனர்.*





*ரோட்டரி வளாகத்தில் உள்ள M A பரஞ்ச்பே ஹெல்த் கிளப்.*

ஒன்று நிறுவப்பட்டது. 1972-ல், சாங்லி மாவட்டத்தில் உள்ள மிராஜ் என்ற சிறு நகரத்தில் ராம்பாவ் காது கேளாதோர், வாய் பேச முடியாதோர் பள்ளி என்ற சிறப்புக் கல்வி அமைப்பு நிறுவப்பட்டது. 1974-ல், சாங்லியில் டாக்டர் சிர்காவ்ன்கர் ரத்த வங்கி அமைக்கப்பட்டது. 1975-ல், தாராபாய் பரன்ஜ்பெ கண் வங்கி அறக்கட்டளை மற்றும் ஆய்வு அறக்கட்டளையை அமைப்பதற்கு இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் Y M பரன்ஜ்பெ உதவினார்.

### ரோட்டரி தொகுப்பு வளாகம்

1974ல் இந்தச் சங்கம் பதிவாகி 25 ஆண்டுகளை நிறைவு செய்த போது, ரோட்டரி வெள்ளி விழா அறக்கட்டளை ஒன்று உருவாக்கப் பட்டது. அது தங்களுக்கெனச் சொந்தமாகச் சமூகக் கூடம், விளையாட்டு வசதிகள், நீச்சல் குளம் அழகிய தோட்டத்துடனான ரோட்டரி தொகுப்பு வளாகம் என்கிற பன்னோக்க வளாகத்தை அமைக்கத் தீர்மானித்தது. குடிமையியல் மருத்துவமனைக்கு அருகில் 3.5 ஏக்கர் நிலத்தைச் சாங்லி நகராட்சி கொடையளிக்க, 1983-ல், ரூ.75 லட்சம் செலவில் ஒரு மிகப் பெரிய ரோட்டரி தொகுப்பு வளாகம் உருவானது.

“இந்தத் தொகுப்பு வளாகத்தில் உள்ள நவீன வடிகட்டல் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் பல இளைஞர்கள் தேசியப் போட்டிகளுக்குப் பயிற்சி பெற உதவியுள்ளது" என்கிறார் செவடெ. இந்தப் பூங்காவிலும் சுற்றியுள்ள நிலப்பரப்பிலும் 1,500க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன.

1980களின் நடுவில் தொடங்கிப் பல சமூகத் திட்டங்கள் விரைவு பெற்றன. எடுத்துக்காட்டாக, கவாதெ எகன்ட் கிராமத்தில் சுடுகாடு, ரோட்டரி தொகுப்பு வளாகத்தில் டாக்டர் M A பரன்ஜ்பெ நலச்சங்கம், மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குப் பயன்படும் யோகாசனக் கூடம்; ரூ.6.5 லட்சம் செலவில் கட்டப்பட்ட சமூகக் கூடம்; மறைந்த மகேஷ் ஷா ஆதரவில், சமூக நிகழ்வுகள் நடத்தப்படுகிற, சங்கத்துக்கு மாத வருவாயை உருவாக்குகிற ஒரு பசுமையான புல்வெளி; முன்னாள் தலைவர் P G புரோகித் அவர்களின் குடும்ப உறுப்பினர்களால் பகுதியளவு ஆதரிக்கப்பட்ட மெது ஓட்டப் பாதை (ரூ 1.25 லட்சம்); 2001ல், மோகனிசந்திர தேசாய் (ரூ.2.5 லட்சம்) மற்றும் வெள்ளி விழா அறக்கட்டளையின் பங்களிப்பு களுடன் ஜெய்ப்பூர் கால் மையம் (உஷாமோகனி விகலங்க் புனர்வசன் கேந்த்ரா). 1997ல், இச்சங்கம் நடத்திய மிகப் பெரிய வணிகக் கண்காட்சியில் 140க்கும் மேற்பட்ட வணிகர்கள், தொழில் நிறுவனங்கள், கலைஞர்கள், தொழில்முனைவோருடைய பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

### பொன்விழாத் திட்டம்

பொன்விழா ஆண்டின் போது (1998–99), சவாலி கிராமத்தில், ரூ.25 லட்சம் மொத்தச் செலவில் பொருந்தும் நல்கை (MG) ஒன்றின்கீழ், நலிந்த குடும்பங்களுக்குக் குறைந்த விலை வீடுகள் கட்டப்பட்டன.

2018-ல், இந்தச் சங்கம் ஒரு GG-ன் வழியாக ரோட்டரி தோல் வங்கி ஒன்றை அமைத்தது. RC சுவீடனிடமிருந்து ஓர் MG-யுடன் ஜலிஹல் கிராமத்தில் ரூ.40 லட்சம் மதிப்புள்ள சூரிய ஒளி விளக்குகள் நிறுவப்பட்டன.

2022–24ல் நடைபெற்ற ஓர் இரண்டாண்டுத் திட்டத்தின்கீழ் இந்தச் சங்கம் 1,000 பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கியது. ரூ.31 லட்சம் மொத்தச் செலவில் நடைபெற்ற இந்தத் திட்டம் RC ஒமாகா மர்னி (நெப்ராஸ்கா, US) உடன் இணைந்த ஒரு பன்னாட்டு நல்கையின்கீழ் நிறைவேறியது. PDGகள் சனத்குமார் அர்வாடெ, மறைந்த கிஷோர் மட்கம் மற்றும் ரவிகிரண் குல்கர்னி ஆகியோர் இந்தச் சாங்லிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். RC கோல்ஹாபூரால் ஆதரிக்கப்பட்ட இந்தச் சாங்லிச் சங்கத்தில் 154 உறுப்பினர்கள் உள்ளார்கள், ஃபிப்ரவரி 1949-ல் இதன் பட்டயம் வழங்கப்பட்டபோதிலிருந்து இது 11 மடங்கு வளர்ச்சியாகும்.■

# கஜக் சிகரத்தில் சுதந்திர தின கொண்டாட்டம்

ரோட்டரி செய்திக்குழு

RID-கள் 3100, 3141-ஐச் சேர்ந்த 87 ரோட்டரியன்கள் RID 3100 DGN பாயல் கௌர் வழிகாட்டுதலில், கஜகஸ்தானில் உள்ள அல்மாட்டி-யில் மைய ஆசியாவின் மிகப் பெரிய பனிச்சறுக்குத் தங்குமிடமான ஷ்யும்புலக்கில் இந்தியாவின் 78-வது சுதந்திர தினத்தை கொண்டாடினார்கள். இந்த அழகிய இடத்தில் இந்திய மூவண்ணக் கொடி பறக்கவிடப்பட்டது. இந்திய ரோட்டரியன்களுடன் கஜக் மக்களும் சேர்ந்துகொண்டார்கள், “நம் மூவண்ணக் கொடியை அசைத்து, எங்களை வாழ்த்தி நம் விடுதலை நாளைக் கொண்டாடினார்கள்” என்கிறார் பாயல். ■



# Membership Summary

Source: RI South Asia Office

As on August 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 138 | 5,814 | 5.66 | 54 | 68 | 32 | 254 |
| 2982 | 91 | 3,845 | 5.44 | 26 | 328 | 88 | 187 |
| 3000 | 148 | 6,152 | 11.95 | 60 | 643 | 230 | 217 |
| 3011 | 138 | 5,179 | 30.97 | 61 | 1,125 | 196 | 41 |
| 3012 | 162 | 4,003 | 24.06 | 52 | 599 | 103 | 61 |
| 3020 | 84 | 4,939 | 8.16 | 32 | 626 | 114 | 351 |
| 3030 | 100 | 5,561 | 16.13 | 50 | 767 | 486 | 387 |
| 3040 | 98 | 2,321 | 14.26 | 32 | 506 | 55 | 214 |
| 3053 | 73 | 3,063 | 16.06 | 23 | 321 | 39 | 131 |
| 3055 | 82 | 3,310 | 12.63 | 42 | 650 | 52 | 379 |
| 3056 | 86 | 3,695 | 25.25 | 18 | 140 | 98 | 201 |
| 3060 | 102 | 4,960 | 15.58 | 48 | 1,800 | 70 | 146 |
| 3070 | 115 | 3,024 | 15.08 | 31 | 193 | 55 | 63 |
| 3080 | 109 | 4,241 | 12.97 | 53 | 1,351 | 168 | 127 |
| 3090 | 133 | 2,678 | 6.76 | 19 | 345 | 354 | 173 |
| 3100 | 114 | 2,203 | 10.67 | 13 | 57 | 35 | 151 |
| 3110 | 135 | 3,621 | 11.52 | 13 | 65 | 59 | 112 |
| 3120 | 89 | 3,667 | 15.82 | 36 | 399 | 28 | 56 |
| 3131 | 141 | 5,326 | 35.13 | 104 | 1,938 | 275 | 175 |
| 3132 | 96 | 3,757 | 14.08 | 25 | 293 | 108 | 217 |
| 3141 | 118 | 6,076 | 27.49 | 106 | 1,881 | 184 | 244 |
| 3142 | 113 | 3,835 | 22.37 | 51 | 1,478 | 115 | 99 |
| 3150 | 108 | 3,900 | 12.51 | 79 | 1,228 | 113 | 130 |
| 3160 | 79 | 2,512 | 9.83 | 24 | 103 | 95 | 82 |
| 3170 | 144 | 6,404 | 14.83 | 82 | 981 | 176 | 182 |
| 3181 | 89 | 3,621 | 10.80 | 37 | 364 | 89 | 122 |
| 3182 | 85 | 3,625 | 10.59 | 45 | 206 | 96 | 104 |
| 3191 | 93 | 3,108 | 18.28 | 63 | 1,535 | 136 | 36 |
| 3192 | 89 | 3,475 | 21.21 | 45 | 1,101 | 147 | 40 |
| 3201 | 169 | 6,521 | 9.66 | 94 | 1,369 | 104 | 95 |
| 3203 | 97 | 4,964 | 7.13 | 27 | 395 | 124 | 39 |
| 3204 | 81 | 2,611 | 7.85 | 18 | 80 | 14 | 13 |
| 3211 | 161 | 5,133 | 8.71 | 7 | 52 | 23 | 135 |
| 3212 | 122 | 4,514 | 10.48 | 78 | 390 | 205 | 153 |
| 3231 | 94 | 3,459 | 7.26 | 25 | 120 | 39 | 417 |
| 3233 | 86 | 2,797 | 16.95 | 39 | 1,016 | 46 | 63 |
| 3234 | 95 | 3,665 | 23.87 | 49 | 1,369 | 82 | 41 |
| 3240 | 99 | 3,480 | 16.49 | 34 | 520 | 47 | 243 |
| 3250 | 109 | 4,195 | 21.48 | 29 | 392 | 58 | 192 |
| 3261 | 108 | 3,463 | 25.04 | 17 | 90 | 26 | 45 |
| 3262 | 115 | 3,822 | 15.83 | 80 | 737 | 645 | 287 |
| 3291 | 141 | 3,710 | 26.85 | NA | NA | 83 | 762 |
| **India Total** | **4,629** | **170,249** | | **1,821** | **27,621** | **5,292** | **7,167** |
| 3220 | 70 | 1,946 | 16.91 | 73 | 2,947 | 136 | 77 |
| 3271 | 108 | 1,413 | 20.17 | 101 | 404 | 275 | 28 |
| 0063 (3272) | 85 | 1,132 | 21.02 | 47 | 293 | 23 | 49 |
| 0064 (3281) | 283 | 5,838 | 18.09 | 190 | 1,016 | 118 | 214 |
| 0065 (3282) | 148 | 2,961 | 9.32 | 166 | 1,132 | 24 | 47 |
| 3292 | 159 | 5,427 | 19.29 | 141 | 4,107 | 114 | 138 |
| **S Asia Total** | **5,482** | **188,966** | **15.98** | **2,539** | **37,520** | **5,982** | **7,720** |

# பூமிக்கு தீங்கு ஏற்படுத்தாத பொழுதுபோக்குகள்

ப்ரீதி மேஹரா

*இயற்கையை மதிக்கும் போது சில நாட்டங்களை நீங்கள் அனுபவிக்கலாம்.*

கூகுள் இணை நிறுவனர் லாரி பேஜ் ஒருமுறை இப்படிக்கூறினார்: "நீங்கள் ஒருபோதும் கனவுகளை இழக்கமாட்டீர்கள். அது ஒரு பொழுதுபோக்காக இருக்கும் வரை. நிலையான வாழ்க்கையை பின்பற்றுவர்களுக்கும் அதுவே நடக்கும். அவர்களின் வாழ்க்கையைப் போலவே, அவர்களின் பொழுது போக்கும் ஆர்வத்தால் தூண்டப்பட்டு செய்யப்படுவதாகும். அது பூமிக்கு எந்த வகையிலும் தீங்கு ஏற்படுத்தாது. நமக்கு ஓய்வு கிடைக்கும்போது பூமீக்கு தீங்கு ஏற்படாத, கார்பன் தடம் பதியாத பொழுதுபோக்குகளில் ஈடுபடலாம்.

இந்த கட்டுரையை எழுத என்னைத் தூண்டியது, பல வருடங்களாக நான் நெருங்கிப் பழகிய மூன்று பேர்தான். அவர்கள் வார இறுதிநாட்களை பொழுது போக்கிற்காக செலவிடுகிறார்கள். இந்த மாயாஜால உலகிலிருந்து தப்பிக்க அவர்கள் பயண ஏஜெண்ட் அல்லது சுற்றுலா வழிகாட்டியின் உதவியை நாடுவதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் அருகிலுள்ள பூங்கா அல்லது பசுமையான இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்வதுதான்.

தில்லியில் உள்ள எனது பக்கத்து வீட்டுக்காரருக்கு பறவைகள் இருக்கும் இடத்தைச் சென்று பார்ப்பதில் அலாதி பிரியம். ஒரு ஜோடி பைனாகுலர் மற்றும் கேமரா சகிதம் கையில் சிற்றுண்டி மற்றும் எலுமிச்சம் பழத்துடன் அவர் அதிகாலையில் சைக்கிளில் புறப்பட்டு விடுவார். அவர் தெற்கு தில்லியிலுள்ள தனது வீட்டிலிருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பூங்கா அல்லது ஒக்லா பறவைகள் சரணாலயத்துக்குச் சென்று பறவை களை கண்காணிப்பதும் சில குறிப்புகள் எடுப்பதுமாக மணிக் கணக்கில் நேரத்தைச் செலவிடுகிறார். அவரது மற்றொரு பொழுதுபோக்கு புகைப்படங்கள் எடுப்பது.

அவரது பட்டியலில் அடுத்து இருப்பது எப்படியாவது டிரோன்கள் மூலம் புகைப்படம் எடுக்க கற்றுக்கொள்வதுதான். அப்போதுதான் இயற்கையை எந்த வகையிலும் தொந்தரவு செய்யாமல் புகைப்படம் எடுக்க முடியும் என்பது அவரது கருத்தாகும்.

மற்றொரு பெண் நண்பருக்கு வித்தியாசமான நாட்டம் உள்ளது. எனினும் அவளது குறிக்கோள் ஒன்றுதான். தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் படைப்பாற்றலில் ஈடுபட்டு, கழிவுகளிலிருந்து கலைப் பொருள்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வருகிறார். கடந்த சில வருடங்களாக தையல் தொழிலில் ஈடுபட்டு குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடமிருந்து வேண்டாத துணிகளைச் சேகரித்து அவற்றின் மூலம் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கவர்ச்சிகரமான மெத்தைகள், தடகள வீரர்களுக்கான கால் சட்டைகள், செவிலியர்கள் உள்ளிட்டவர்களுக்கான மேலங்கிகள் போன்றவற்றை தயாரிக்கிறார். ஒரு சில மாதங்களுக்குப் பிறகு அவற்றை பொது வெளியில்



விற்பனை செய்கிறார். அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை தொண்டு நிறுவனங்களுக்கு கொடுக்கிறார். பழைய துணிகளை சேகரித்து வெட்டி, புதிய டிசைன்களில் வடிவமைத்து  தையல் இயந்திரத்தில் தைத்துக் கொடுப்பது ஒரு அமைதியான பொழுதுபோக்குதான். அவற்றில் சிலவற்றை மக்கள் தங்கள் வீடுகளை அலங்கரிக்க வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். “இவற்றை தயாரித்து விற்பதில் எனக்கு ஒன்றும் பெரிதாக வருமானம் கிடைக்காது என்றாலும் மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது'' என்கிறார் அவர்.

அவளது படைப்புகள், அவள் இருக்கும் காலனியில் மிகவும் பிரபலமானவை. மக்கள் பழைய துணிகள், கிழிந்த துப்பட்டாக்கள், பூ வேலைகளுடன்கூடிய ஜரிகை பார்டர்கள், பழைய காலத்து பட்டன்கள் மற்றும் எம்பராய்டரி செய்யப்பட்ட துண்டுத் துணிகளை அவளிடம் கொடுத்துவிட்டு, அவற்றிலிருந்து என்ன தயாரிக்கப் போகிறாள் என்பதைக் காண்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். சிலர் அவளிடமிருந்து புதிய தயாரிப்புகளை வாங்கிக் கொள்கிறார்கள். எல்லாம் ஒரு நல்ல நோக்கத்திற்காகத்தான்.

அடுத்து இன்னொரு பெண் நண்பர், வார இறுதிநாட்களில் தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தை வீட்டின் மொட்டை மாடியில் செலவிடுகிறார். மொட்டை மாடியின் ஒரு பகுதியில் பந்தல் போட்டு வீட்டின் சமையலறையில் பயன்படுத்தும் பொருள்கள் சிலவற்றை வளர்க்கிறார். அனைத்து வகையான மூலிகைச் செடிகளையும் அவர் வளர்க்கிறார். அவளுடைய நண்பர்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட மூலிகை அல்லது இலை தேவைப்படும்போது எங்கு செல்ல வேண்டும் என்பது நன்றாகத் தெரியும். சாம்பார், ரசம் தயாரிப்பதற்கு தேவையான கருவேப்பிலை, கொத்தமல்லி, சட்னி செய்வதற்குத் தேவையான புதினா மற்றும் செரிமானத்திற்கு ஓமம் உள்ளிட்ட செடிகளை அவர் வளர்த்து வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக விதம் விதமான துளசி செடிகளை மண் சட்டிகளில் வளர்த்து வருகிறார்.

கடந்த சில வருடங்களாக சுற்றுச்சூழல் பாதுகாப்பை அதிகம் உணர்ந்துள்ளதால் செடிகளுக்குத் தேவையான உரங்களை அவளே தயாரிக்கிறாள். இதற்காக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், நண்பர் களிடம் உணவு மற்றும் தாவரக் கழிவுகளை சேகரித்து, தனது வீட்டில் உள்ள உரக் குழிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறார். கூட்டு உரம் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ள அவர், அவ்வப்போது தனது அனுபவத்தை குடியிருப்பில் உள்ள குடியிருப்போர் நலச் சங்கத் தினரிடம் பகிர்ந்து கொள்கிறார். இதன் மூலம் ஒரு சமூகமாக உரம் தயாரிக்கும் நடவடிக்கையை தொடர முடியும். “எனது பொழுதுபோக்கே இப்போது எனக்கு விருப்பமான பணியாக மாறிவிட்டது. பல குடும்பங்கள் தங்கள் கரிமக் கழிவுகளை கூட்டு நடவடிக்கையாக உரமாக்கி, செடி, கொடிகளை வளர்த்து சுற்றுப்புறத்தை பசுமையாக்க முயற்சிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு சிறிய அளவில் தொடங்கிய பொழுதுபோக்கு இப்போது பெரிதாக வளர்ந்து மக்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி பூமிக்கும் தீங்கு ஏற்படாமல் பாதுகாக்கிறது'' என்கிறார் அவர்.



எனது மூன்று நண்பர்களும் விதிகளுக்கு விலக்கானவர்கள் அல்ல. நம் ஒவ்வொருவது வாழ்க்கை யிலும் பொழுதுப்போக்கு என்பது முக்கியப் பங்காற்ற முடியும். ஒரு நிலையான தலையீட்டிற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகில் ஒரு சிறிய மாற்றத்தைக் கொண்டு வரும்போது அமைதியான வாழ்க்கையை அனுபவிக்க நாமும் நம்மால் முடிந்ததைச் செய்வோம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# Mind your Ps and Qs

## A Rotary alphabet soup SOS

If you've been part of the Rotary family for any amount of time, you've probably had a taste of the organisation's alphabet soup. Rotary loves its acronyms and abbreviations — a glossary for staff includes 118 of them! They can be helpful by eliminating longer words, reducing verbal clutter, and saving readers time. But acronyms can be confusing and unwelcoming to those less familiar with the Rotary lingo, so use them wisely and think twice before using them with the public.

Are you an acronyms ace? Take our quiz and find out.

**1**

If the RIP* was RIPE last year, what will they be next year?

A PRIP

B compost

*An acronym recently retired by Rotary.
Rest in peace, RIP.

**P S: *Rotary News* discontinued the usage of 'RIP' 10 years ago.**

**2**

Where are you likely to find a DGE?

A GETS

B GELS

C IA

D the hotel bar



**3**

Which of the following acronyms is not related to The Rotary Foundation?

A PPP

B MD

C AF

D FOMO

**4**

GPS stands for:

A Global Positioning System

B Global Polio Sector

C Global Philanthropy Seminar

D Giant Panda Species

**5**

An RC, DMC and RRFC bump into their DGN at the airport and wonder if she is going to the CoL. Which city is she travelling to?

A Huh?

B Calgary

C Chicago

D This trip has nothing to do with Rotary — let her take a vacation already!






## Rotary lingo dos and don'ts

**DO**

remember who your audience is when deciding if an acronym is appropriate

**DON'T**

overuse acronyms or abbreviations

**DO**

use the shorter version of a term instead of the acronym (for example, use "governor" instead of DG)

**DON'T**

use an acronym for a term mentioned only a few times in your text

**DO**

provide the full phrase at first reference with the abbreviation in parentheses

**DON'T**

include periods, except for "U.S."

**ANSWER KEY**

1: A The Rotary International president was Rotary International president-elect last year and will be past Rotary International president next year.

2: B and C The governors-elect learning seminar is the new name for what was formerly known as the governors-elect training seminar. Additional sessions for incoming governors take place at the International Assembly. (Though you might find some at the hotel bar too!)

3: D Fear of missing out. The others are PolioPlus Partners, Major Donor, and Annual Fund.

4: C Global Philanthropy Seminar

5: D District governors-nominee are not eligible to represent their district at the Council on Legislation, which is held in Chicago every three years. Representatives must have served a full term as district governor at the time of their election. (The other abbreviations stand for Rotary coordinator, district membership chair and regional Rotary Foundation coordinator.)

©Rotary



# நல்ல ஆரோக்கியத்திற்கு நடக்கவும்

பரத் — ஷலன் சவூர்

ஏறக்குறைய ஒவ்வொருவரின் வாழ்க்கையில் ஒரு கட்டத்தில், அவர் பாதுகாப்பற்றதாக உணரும் ஒரு காலம் வரும். அவரது வாழ்க்கையில் சூரியன் அதன் உச்சத்தில் இருந்தாலும், அவர் அஸ்தமனத்தைப் பற்றி அதிகம் யோசிப்பார்.

“வயதாவதற்கான ஒருவரின் பதில் திடீர் மாற்றத்தை விட படிப்படியான மாற்றமாகவே இருக்கும்.’’ சேரும் இடத்தை விட பயணத்தில் தான் அதிக வேடிக்கை, அதிக அர்த்தம், அதிக வாழ்க்கை இருப்பதை ஒரு மனிதன் உணரும் சந்திப்பு இது. காலடியில் இருக்கும் பச்சைப் புல், தன் இளமைக்காலத்தில் வரைந்த பார்வையைப் போல் பசுமையாக இல்லை என்று முடிவு செய்யும் ஒரு இடம். வெற்றி வேலியின் மறுபக்கத்திலிருந்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் நேரம். அந்த வயது, நிலை, கவலை மனப்பான்மை மெதுவாக வரும். மற்றும் வேகமாக வளரும். மன அழுத்தம் இயற்கையாகவே நமக்குத் தெரிந்த சண்டை-அல்லது-தப்பிக்கும் முயற்சியை தொடங்கும். நாம் ஒரு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும்போது, இரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு ஏறும், தசைகள் இறுகும் மற்றும் நமது உடல் இரத்த சர்க்கரையை குவித்து விரைவாக செயல்பட உதவும். மறதி, சோர்வு மற்றும் தொந்தரவான தூக்கம் போன்ற பிரச்சனைகள் மன அழுத்தம் அதிகரிப்பதற்கான ஆரம்ப எச்சரிக்கை சமிக்ஞைகளாக இருக்கலாம்.

பல நோய்வாய்ப்பட்ட நோயாளிகள் ஒரே அறிகுறிகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள், மேலும் மறதி, சோர்வு மற்றும் தொந்தரவான தூக்கம் ஆகியவை மன அழுத்தத்தால் ஏற்பட்டதா அல்லது நீண்டகால நோயால் ஏற்பட்டதா என்பதை மருத்துவர்கள் சாதாரண மக்கள் என யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது. தவிர, பெரும்பாலான மருத்துவர்கள் மன அழுத்தத்தைச் சமாளிப்பதற்குப் பயிற்சி பெறவில்லை என அமெரிக்காவின் சிகாகோ மெடிசின் மருத்துவ மனையின் மன அழுத்தம் செரிமான ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவ ஆராய்ச்சியாளரான அலிஸ் பெண்டெல் சுட்டிக் காட்டுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆரம்பகால மன அழுத்தம் ஒரு காரணமா அல்லது மனநோய்க்கான நிலையா என்பது உண்மையில் பிரச்சினை அல்ல. நீண்ட கால மன அழுத்தமே மோசமான முடிவுக்கு வழிவகுக்கிறது. எனவே, சரியான நேரத்தில் நடவடிக்கை, அதாவது நடை, உங்களை காப்பாற்றும். கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு அடி-சோதனை ஆய்வுகள் நிறுவும் பதில்:

ஃபிராங்க் ஹுயு, MD, PhD, 40 மற்றும் 70 வயதுடைய 70,000 பெண் செவிலியர்களின்

நடைப்பயிற்சியின் வேகத்தை ஆய்வு செய்தபின் அமெரிக்க மருத்துவ சங்கத்தின் இதழில் தனது ஆய்வை வெளியிட்டார். வாரத்தின் பெரும்பாலான நாட்களில் குறைந்தது 30 நிமிடம் மிதமான வேகத்தில் நடந்தவர்களுக்கு பொதுவான பக்கவாதம் ஏற்படும் அபாயம் 20 சதவிகிதம் குறைந்தது. விறுவிறுப்பாக அல்லது மிக வேகமாக நடந்தவர்களின் சதவிகிதம் இரட்டிப்பாகக் குறைந்தது: சுமார் 40 சதவீதம்.

இதேபோல், பாஸ்டனில் உள்ள பிரைட்டன் மகளிர் மருத்துவ மனையின் டாக்டர் மிச்சேல் ஹோம்ஸ் நடத்திய ஆய்வில், 18 ஆண்டுகளாக 3,000 மார்பக புற்றுநோயாளிகளின் உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி பழக்கங்கள் கண்காணிக்கப்பட்டன. அதில் கண்டுப்பிடிக்கப்பட்டது: மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட உடற்பயிற்சி செய்யாத பெண்களுடன் ஒப்பிடுகையில், வாரத்திற்கு 3 முதல் 5 மணிநேரம் வரை நடந்த பெண்கள் தங்கள் நோயில் இருந்து தப்பிக்க 50 சதவீதம் அதிகமான வாய்ப்புகள் உள்ளது.

இன்று, உடலை இயக்கும் மூளையில் கவனம் செலுத்து வோம். இடது பக்கம் நமது மூளையின் செயல்பாட்டின் பக்கமாகும், மேலும் இது முக்கியமாக ஆழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட நமது நிர்பந்தமான செயல்களின் உந்து சக்தியாகும். மூளையின் மிகவும் குறைவாகப் பயன்படுத்தப்படும் வலது பக்கமானது படைப்பாற்றல், சிந்தனைக்கான பகுதியாகும். இது அரிதான சந்தர்ப்பங்களில் மட்டும் தானாகவே வரும், நமக்கும் வலது மூளைக்கும் பிரத்தியேகமான நேரத்தையும் இடத்தையும் வழங்கும் நிலைமைகளை உருவாக்கும் போது மட்டுமே தன்னை வெளிப்படுத்தும்.

### சிவந்தக் கண் சுற்றுலா

பயணம் மனதை விசாலமாக்கும் என்பதை நாம் அனைவரும் படித் திருப்போம். ஆனால், இது உடலின் பேட்டரிகளை ரீசார்ஜ் செய்ய இடத்தையும் உளவியல் நேரத்தையும் உங்களுக்கு வழங்குகிறதா? பயணமானது மைல்களைக் கடப்பதை கொண்டு அளவிடப்பட்டால் (புன்னகை அல்லாமல்) அடிக்கடி பறப்பவர் தான் வெல்வார்கள். இதுபோன்ற பல பயணிகளை நான் அறிந்திருக்கிறேன். நான் அவர்களை சுற்றுலா பயணிகள் வகையில் வைப்பேன். அவர்களுக்கு எப்போதும் கடிகாரத்தில் மேல் ஒரு கண்ணும், தங்கள் பயணிக்கும் வண்டியின் மீது ஒரு கண்ணும் இருக்கும். இது என்னை பொறுத்தவரை சிவந்தக் கண் சுற்றுலா ஆகும்.

குறுகிய காலத்தில் முடிந்தவரை பல சுற்றுலா தலங்களைப் பார்க்கும் அட்டவணை, ஓடுபவர்களுக்கும், இதையெல்லாம் பார்த்தோம் என்று தம்பட்டம் அடிக்கும் ஆட்களுக்கும் வேடிக்கையாக இருக்கலாம். சுற்றுலா தலங்களை மேம்போக்காக பார்ப்பது ஒரு காவியத் திரைப்படத்தை ஃபாஸ்ட்-ஃபார்வர்டு முறையில் பார்ப்பதற்கு சமம். மன அழுத்தத்திலிருந்து தப்பிக்க இந்த விடுமுறையை நீங்கள் திட்டமிட்டிருந்தால், நீங்கள் வாணலியில் இருந்து நேராக நெருப்பில் குதிக்கிறீர்கள். இதிலிருந்து மன அழுத்தத்தைத் தணிக்க உங்களுக்கு மீண்டும் இன்னொரு விடுமுறை தேவைப்படும்.

### மன அழுத்தத்தை குறைக்கும் விடுமுறை

உங்களுக்கு வயதாகி, நீங்கள் அனுபவசாலியாக மாறும்போது, பயணம் மேலும் சுவாரசியமான ஒன்றாக மாறும். “வேகம் மாறும், நீங்கள் மெதுவாகவும் உங்கள் சொந்த வேகத்தில் பயணிக்கவும் விரும்புவீர்கள்” என்கிறார் மீனாட்சி மேனன், சுகாதாரத்திற்கு அப்பாற்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட மக்கள்தொகையின் தேவைகளை நிவர்த்தி செய்ய, தனிமையை எதிர்த்துப் போராடுவதிலும் ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துவதற்காக மொபைல் அப்ளிகேஷனை - GenS-ஐ அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளார். உங்கள் இடத்தில் சேர மெதுவான பாதையில் பயணியுங்கள். உங்கள் இலக்குக்கு வேறு பரிமாணத்தைச் சேர்க்கவும்: உள்வாங்குதல். அந்த இடத்தைப் பற்றிய உணர்வைப் பெற ஒரு நடைப்பயிற்சி அல்லது சைக்கிள் ஓட்டுதலை நான் பரிந்துரைப்பேன். பழங்கால பயணி நடந்துச் சென்று அந்தச் சூழலில் திளைத்தார். ஏறக்குறைய தன்னைத் தொட்ட அனைத்தையும் தழுவிக்கொண்டார். மற்றும் அவரது சூழல், அதன் மக்கள், அதன் கலாச்சாரத்தில் ஐக்கியமானார்.

நடக்க விரும்பவில்லையா. கட்டாயப்படுத்த வேண்டாம். ஒரு சில படிகள் முன்னோக்கி எடுத்து உங்கள் சுவாசத்தில் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொரு சுவாச வெளியேற்றத்துக்கும் இரண்டு அடிகள் மற்றும் ஒவ்வொரு உள்ளிழுக்கத்திற்கும் இரண்டு அடிகள் எடுக்கவும். கவனம் செலுத்துவதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், புதிய காற்றைப் பெற நீங்கள் நடக்கிறீர்கள் என்று உங்களிடமே சொல்லுங்கள். உங்கள் மனம் அலைந்து திரிவதை நீங்கள் உணரும் போதெல்லாம் உங்கள் சுவாச முறையைத் தொடருங்கள் மற்றும் நீங்கள் புதிய காற்றைப் பெற நடக்கிறீர்கள் என்று உங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். இது உங்கள் நடையில் அதிசயங்களைச் செய்யும். அடுத்த 20 முதல் 60 நிமிடங்களுக்கு இந்தப் பயிற்சியைத் தொடரவும். உங்கள் சுவாசம் உங்கள் நடைப்பயிற்சி வேகத்தை தூண்டும் போது, உங்கள் இடது மூளை - உடலின் இயக்கங்களை கண்காணிக்கும் ரிஃப்ளெக்ஸ்-செயல்படுத்தப்பட்ட நிபந்தனைக்குட்பட்ட பக்கமானது அணைக்கப்படும். மேலும் படைப்பாற்றல் மிக்க, அரிதாகப் பயன்படுத்தப்படும் ஆக்கப்பூர்வமான வலது மூளை வேலை செய்ய தொடங்கும். இந்த வலது பக்க மூளை சிக்கலைப் பற்றி யோசித்து தீர்வை அளிக்கும்.

உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், கவிஞர்கள், விஞ்ஞானிகள்... எல்லாரும் நடந்து தான் சிந்தித் திருக்கிறார்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# சங்கச் செய்திகள்













### RC தாணே ராயல்ஸ் — RID 3142

RC லோகன்ட்வாலா உடனான இணைத் திட்டத்தின்கீழ், அந்தேரி மேற்கில் உள்ள வித்யா விகாஸ் மண்டல் வித்யாலயா-வில் 280 மாணவர்களுக்குக் குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. சதீஷ் கொதாரெ, அவருடைய நண்பர்கள் இதற்கான நிதிக்கு ஆவன செய்தார்கள்.

### RC கார்வார் சீசைட் — RID 3170

சங்க உறுப்பினர்களுக்கு ரோஸ்மேரி மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. இவற்றை நன்கு வளர்ப்போருக்கு ஆண்டு நிறைவில் சங்கத் தலைவர் அனு ஜெயப்பிரகாஷ் பிள்ளை சிறப்புப் பரிசளிப்பார்.




### RC மணிப்பால் டவுன் & RID 3182

சங்கத் தலைவர் மனோஜ் நாகசம்பிகெ-யின் நிறுவலின்போது, ஒரு குடும்பம் உடுப்பி அருகில் வீடு கட்டிக்கொள்வதற்கென ரூ.3 லட்சம் கொடையளித்தார் முன்னாள் தலைவர் கணேஷ் நாயக்.

### RC பெங்களூர் பிரைம் & RID 3191

ஜெயநகரில் உள்ள ராணி சரளா தேவி HS பள்ளியில் சுமார் 290 குழந்தைகளுக்குப் பள்ளிப் பொதிகளை (ரூ.1 லட்சம்) வழங்கினார்கள். DG சதீஷ் மாதவன், நடிகர் ரமேஷ் அரவிந்த், சங்கத் தலைவர் ஹரீஷ் V S.

### RC கொச்சின் பீச் சைட் — RID 3201

பனங்காடில் உள்ள மரியாலயம் என்ற வலிக் குறைப்புப் பராமரிப்பு மையத்தில் உள்ளோருக்கு ரூ.20,000 மதிப்புள்ள மளிகைப்பொருட்கள் கொடையளிக்கப்பட்டன. இவர்களுக்குக் காலை உணவும் வழங்கப்பட்டது.



RID 3250



RID 3203



RID 3211



RID 3291

**RC பொள்ளாச்சி ராயல்ஜ் — RID 3203**

4 பழங்குடியினக் குடியிருப்புகளில் 300 பழங்குடியினத்தோர், வன அலுவலர்களுக்கு டி-சட்டைகள், குளிருடைகள் (ரூ.80,000) வழங்கப்பட்டன.

**RC அன்ச்சல் — RID 3211**

கொல்லம் மாவட்டம், மனலில் யெரூர் கிராமத்தில் உள்ள MGLP பள்ளியில் 200 குழந்தைகளுக்கு மதிய உணவுக்கான துருப்பிடிக்காத எஃகுத் தட்டுகள் (ரூ 25,000) கொடையளிக்கப்பட்டன.



RID 3212

**RC சிவகாசி டைமன்ட்ஸ் — RID 3212**

சிவகாசியில் உள்ள ஸ்டான்டர்ட் ஃபயர்வொர்க்ஸின் CSR நிதியைக் கொண்டு, 8 பெண் தொழில் முனைவோருக்குத் தையல் இயந்திரங்களைக் (ரூ.1.1 லட்சம்) கொடையளித்தார் IPDG முத்தையாப் பிள்ளை.

**RC ஜாம்ஷெட்பூர் வெஸ்ட் — RID 3250**

உள்ளூர்க் காவல்துறை, கொல்ஹன் பெட்ரோலியம் வணிகர்கள் கழகம், டாடா ஸ்டீல், ரோட்டராக்டர்களுடன் இணைந்து நடைபெற்ற சாலைப் பாதுகாப்புபற்றிய இரு சக்கர வண்டிப் பேரணி ஒன்றை குகுக கிஷோர் கௌஷல் (சிங்பம் ஈஸ்ட்), PDG பிரதிம் பேனர்ஜி, DSP (போக்குவரத்து) சஞ்சய் சிங் தொடங்கிவைத்தார்கள்.

**RC கல்கத்தா கன்குர்கச்சி — RID 3291**

முன்னாள் தலைவர் சுமிதா லோத் நினைவாக, இந்துஸ் பன்குரா குடியிருப்பில் பேருந்து நிறுத்தம் ஒன்று தொடங்கிவைக்கப்பட்டது. இது RIன் சேவைத் திட்டங்களைக் காட்சிப்படுத்திப் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துகிறது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# வண்ணப் பூச்சு, மகிழ்ச்சிப் பெருக்கு!

ரோட்டரி செய்திக்குழு

ஓவியத்திரைக்கு முன் அமர்ந்து ஓவியம் வரைய ஆயத்தமாகிக்கொண்டிருந்த குழந்தைகளுக்கு இதமான வழிகாட்டுதல், ஊக்கத்தை வழங்கினார்கள் RAC ஸ்ரீகங்காநகர் விஷனரிஸ், RID 3090, உறுப்பினர்கள். சங்கச் செயலாளர் நந்தினி அரோரா, “ஒவ்வொரு வண்ணமும் ஒரு மனநிலையை, ஓர் உணர்வை, அல்லது ஒரு கதையைச் சொல்லலாம் என்று நாங்கள் விளக்கினோம். ஓர் உறுப்பினர் நீலச் சுழல் ஒன்றைக் காட்டி, இந்த வண்ணம் உங்களை எப்படி உணரச்செய்கிறது? என்று கேட்டார், சிரிக்கிற ஒரு குழந்தை, அது வானத்தைப் போன்றது, அது என்னை அமைதியாக உணரச்செய்கிறது! என்று பதிலளித்தார்'' என்றார்.

ராஜஸ்தானில் உள்ள ஸ்ரீகங்கா நகரில், வெவ்வேறு ஆதரவற்றோர் இல்லங்களைச் சேர்ந்த 40 குழந்தைகளுக்கென இந்தச் சங்கம் நடத்திய மகிழ்ச்சி வண்ணங்கள் என்ற நிகழ்ச்சியில்தான் இந்த உரையாடல் நடைபெற்றது.

5 மீட்டர் நீளமுள்ள ஓவியத் திரையும், துடிப்பான அக்ரிலிக் வண்ணங்களும் வழங்கப்பட்டன, “குழந்தைகள் தங்கள் படைப்புணர்வை வெளிப்படுத்தித் தங்கள் மனத்தைக் கட்டின்றி ஓவியமாக்கலாம். சில குழந்தைகள் ஊக்கத்துடன் முன்வந்து ஆர்வமாகத் திரை முழுக்க வண்ணம் பூசத் தொடங்கினார்கள். மற்றவர்கள் தொடக்கத்தில் நாணமாக உணர்ந்தார்கள், தயங்கினார்கள். ஆனால், நாங்கள் அவர்களை ஊக்கப்படுத்திச் சேர்ந்துகொள்ளவைத்தோம், அவர்கள் திரை முழுக்க வண்ணமயமான கைத்தடங்களை உருவாக்கினார்கள்ள. கலையால் கிடைக்கும் நலங்களை நாங்கள் அவர்களுக்கு விளக்கினோம், படைப்புணர்வு அழுத்தத்தைத் தளர்த்தி மகிழ்ச்சியைக் கொண்டுவருவது எப்படி என்று புரியவைத்தோம்'' என்கிறார் நந்தினி. இந்த மகிழ்ச்சியை மேலும் பெருக்கும்வகையில், கலகலப்பான விளையாட்டுகள் நடத்தப்பட்டன, பரிசுகள் வழங்கப்பட்டன, அவர்களுடைய நாள் இன்னும் சிறப்பானது.

பின்னர், ரோட்டராக்டர்கள் இந்தக் குழந்தைகளைத் திரையின்முன் திரட்டிக் குழுப் புகைப்படம் எடுத்தார்கள். “அவர்கள் தாங்கள் வரைந்த பகுதிகளைச் சுட்டிக்காட்டினார்கள், ஒவ்வொருவரும் தங்கள் படைப்பைக் காண்பித்துப் பெருமைப்பட்டார்கள். அதனால், அவர்களை ஒழுங்குபடுத்தி நிறுத்திப் புகைப்படம் எடுக்க நெடுநேரமாகி விட்டது'' என்று சிரிக்கிறார் இவர்.■







# குடியேற்றக் கதைகள்

LBW



**TCA ஸ்ரீனிவாசராகவன்**

வாழ்க்கை ஆச்சரியங்கள் நிறைந்தவை. அவற்றில் சில மிகவும் இனிமையானவைகளாகவும் இருக்கலாம். கடந்த மாதம் ஜெனீவா விமான நிலையத்தில் எனது பாஸ்போர்ட்டை குடிவரவு அதிகாரியிடம் கொடுத்தபோது அவர் சரளமாக இந்தியில் பேச ஆரம்பித்தார். எப்படி என்று அவரிடம் கேட்டபோது, தான் ‘ஹிந்துஸ்தானில்’ பல வருடங்கள் கழித்திருப்பதாகச் சொன்னார். அவரது உச்சரிப்பிலிருந்து அவர் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரிந்தது. ஆனால் அதை அவரிடம் நான் கேட்கவில்லை ஏனெனில் அது நாகரிகமாக இருக்காது. அவரது நட்பான அணுகுமுறை குடிவரவு அதிகாரிகளின் வழக்கமான மோசமான வழிகளுக்கு முற்றிலும் மாறுபட்டது. இது அனைத்து அரசாங்கங்களின் நட்பற்ற குடியேற்றக் கொள்கைகளை பிரதிபலிக்கிறது.

உதாரணமாக, ஒருமுறை நான் டெல்லியில் இறங்க, குடிவரவு கவுண்டரில் இருந்தவர் என்னிடம் போர்டிங் கார்டைக் கேட்டார். நான் அதை விமானத்தில் மறந்துவிட்டேன் என்றேன். பிறகு ஏன் அது தேவை என்று கேட்டேன். விமான எண்ணை சரிபார்க்க வேண்டும் என்றார். இப்போது தரையிறங்கிய விமானத்தின் பெயரை அவரிடம் சொன்னேன். அதிலிருந்து சரிபார்க்கலாம், என்றேன். அந்த பதிலால் அவர் சற்று அதிர்ச்சி அடைந்தார் மற்றும் எனது கார்டை பார்க்க வேண்டும் என்றார். நான் அவரிடம் விமான எண்ணைச் சொல்லி, என்னை என் சொந்த நாட்டிற்குள் அனுமதிக்க வேண்டும் என்று சொன்னேன். அந்த ஏர்லைன் கொடுத்த சாக்லேட் பார்களில் ஒன்றை என் பாக்கெட்டில் வைத்திருந்தேன், அதை கிட்டத்தட்ட அவருக்குக் கொடுத்தே விட்டேன். அவர் என் மூத்த மகனை விட சற்றே மூத்தவர், அநேகமாக 12 மணிநேரம் பணியில் இருந்திருப்பார் என நினைக்கிறேன். அவர் விமான எண்ணை பதிவு செய்ய வேண்டும் என்பதை பின்னர் உணர்ந்தேன். நான் சென்ற வேறு எந்த நாட்டிலும் இந்த தேவை இல்லை. ஆனால் அவர்கள் உங்களை மிரட்டுவதற்கு வேறு வழிகள் உள்ளன.

மொத்தத்தில், கசப்பாக இல்லாத ஒரு குடிவரவு அதிகாரியை நான் சந்தித்ததில்லை. மேலே சொன்ன ஹிந்தி பேசுபவர் கூட என் கடவுச்சீட்டை நாட்டை விட்டு வெளியேறும் போது சரிபார்த்ததால் இவ்வளவு நட்பாக இருந்திருக்கலாம். நீங்கள் வெளியேறும் போதுச் சரிபார்க்க என்ன இருக்கிறது? ஆனால் பெரும்பாலான நாடுகள் அதை எப்படியும் செய்கின்றன.

பின்னர் இருக்கிறார்கள் ஆங்கிலேயர்கள்! அவர்கள் முற்றிலும் வேறுபட்ட வகுப்பில் உள்ளவர்கள். நீங்கள் வேறொரு இணைப்பு விமானத்தில் பயணித்தாலும், நீங்கள் ட்ரான்ஸிட் விசாவைப் பெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக இந்த தேவை உள்ளது. 2006-ம் ஆண்டில், எங்களிடம் இந்த ட்ரான்ஸிட் விசா இல்லாததால், நான், எனது மனைவி மற்றும் மகன் ஆகியோர் டெல்லியில் இருந்து பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் ஏற அனுமதிக்கப்படவில்லை. எங்களுக்கு ஒன்று தேவை என்று யாரும் எங்களிடம் சொல்லவில்லை. நாங்கள் ஹீத்ரோ வழியாக எனது சகோதரர் இருக்கும் பாரிஸுக்கு மற்றொரு விமானத்திற்குச் சென்று கொண்டிருந்தோம். மற்றும் என்ன தெரியுமா? இந்த ட்ரான்ஸிட் விசா நிறமுள்ள நபர்களுக்கு மட்டுமே தேவை, வெள்ளையர்களுக்கு அல்ல - மேலும் நிறமுள்ள நபர்கள் அமெரிக்க விசா வைத்திருந்தால் அவர்களுக்கும் தேவையில்லை. அடிப்படையில், ஹீத்ரோவில் கழிப்பறையைப் பயன்படுத்துவதற்கான சலுகைக்காக நீங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு பணம் செலுத்த வேண்டும். இதன் மூலம் நிறைய பணம் சேகரிக்கப்படுகிறது. எனவே இனி ஒருபோதும் பிரிட்டன் செல்ல வேண்டாம் என்று நாங்கள் முடிவு செய்தோம்.

ஆனால் இந்த ஆண்டு பிரிட்டிஷ் குடியுரிமை பெற்ற ஒரு உறவினர் எங்களை பார்க்க வருமாறு வற்புறுத்தினார். நாங்கள் அவளை மிகவும் நேசிப்பதால், சரி என்று சொன்னோம், மேலும் இரண்டு விசாக்களையும் பெற அதிக பணம் செலுத்தினோம். அதுவே போதுமானதாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அது தவறு. ஜெனீவாவில் செக்-இன் செய்யும்போது ’’எங்கள் ஆவணங்கள் சரிபார்க்கப்பட வேண்டியிருந்தது’’. அந்த சரிபார்ப்பு இல்லாமல் நாங்கள் போர்டிங் கார்டைப் பெற முடியாது. சரிபார்ப்பைச் செய்பவர்கள் எந்த நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தாததால் இது ஒரு கடினமான செயல்முறையாக இருந்தது. மேலும் அவர்கள் மிகவும் திறமையற்றவர்கள். மிக மெதுவாக எல்லாவற்றையும் கையால் எழுதினார்கள். இது முற்றிலும் தேவையற்றது மற்றும் சில நாடுகளைச் சேர்ந்த மக்களை துன்புறுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இனவெறி, ஆனால் ஆங்கிலேயர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

நான் ஒருமுறை இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவரிடம், நாம் ஏன் இதற்கு பதிலடி கொடுப்பதில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் விருந்தினர் கடவுளுக்கு சமம் என்றார்.


LIVE AT KOCHI
MARK MALONEY
ROTARY FOUNDATION TRUSTEE CHAIR
ROTARY INTERNATIONAL PRESIDENT 2019-20
The Rotary Foundation
MARK MALONEY
@KOCHI
24TH SEPTEMBER AT 05:00 PM
HOTEL LE MERIDIEN, KOCHI
Adv.N Sundaravadivelu
District Governor 3201
Rtn.Dr.Suresh Babu
District Governor 3203
Rtn.Dr.Santhosh Sreedhar
District Governor 3204
Rtn.Sudhi Jabbar
District Governor 3211
Rtn.Meerankhan Salim
District Governor 3212
Dr. Bharat Pandya
TRF Trustee
PDG Sunil K Zachariah
Chairman
PDG TR Vijayakumar
Secretary
PDG Jose Chacko
Treasurer
REGISTER NOW
More Info:
Rtn.Susheel Aswani
Registration Chair
+91 93888 33800
*REGISTRATION CHARGES
Till 15 September
INR 2500
From 16 to 21 September
INR 2750
From 22 September
INR 3000
*includes dinner
JOINTLY ORGANISED BY ROTARY DISTRICTS 3201 | 3203 | 3204 | 3211 | 3212
ADVT.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.






Rotary District 3212




THE MAGIC OF ROTARY






# The mission of ‘Dredging’

## To improve the sustainability of the Ponds in villages around Virudhunagar.

In modern days, the expansion of villages and towns are inevitable. Due to the modernisation and new construction activities, all the streams leading to the ponds are blocked due to the disposal of the construction debris. All the villagers are distressed to this unexpected assault on their livelihood and existence.

Dredging is the removal of sediments and debris from the bottom of water bodies.

**Benefits of dredging the ponds:**

Channelizes the flow of water into the waterbodies. • Removes unwanted nutrients from the sediment, thereby improving water quality. • Prevents the development of harmful algae blooms, which are toxic to humans and pets. • Increases waterbody volume and depth, reviving the agriculture and cattle-rearing activities, which consequently uplifts the economic well-being of the villagers.

With persistent and determined efforts, the following five water bodies have so far been rejuvenated and they are receiving input of rainwater through the streams that have been opened up:

| Name of the tank | Village | Area of the tank | Storage Capacity | No.of Beneficiaries | Cost of the Dredging |
|---|---|---|---|---|---|
| Villipathiri Kanmai | Villipathiri | 1.4 Acres | 0.75 Million cft | 5000 | Rs. 1.2 lakhs |
| Aranmanai Kanmai | Pandian Nagar | 1.8 Acres | 1.19 Million cft | 3500 | Rs. 1.5 lakhs |
| Solai kavundan patti Kanmai | Solai kavundan patti | 1.2 Acres | 0.63 Million cft | 4000 | Rs. 0.8 lakhs |
| Raja Oorani | Rosalpatti | 2.2 Acres | 1.16 Million cft | 3000 | Rs. 1.8 lakhs |
| Kadambankulam | Soolakarai | 2.34 Acres | 1.34 Million cft | 7000 | Rs. 2.0 lakhs |

This is a progressing project and Rotary Club of Virudhunagar is determined to take up the dredging of all the water bodies in and around Virudhunagar and also monitor the upscaling of water bodies.



Rtn. MAPR Krishnamoorthy
Rotary Project Chairman

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

Rotary Club of Virudhunagar
Lions club of Virudhunagar
JCI Virudhunagar Happy

LEKHA ads/Sep 24/ Rotary/BW

ADVT.